பக்கங்கள்: 24
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | புரட்டாதி 15, ஞாயிற்றுக்கிழமை 01.10.2017 | கதிர் 329

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# போர்க் குற்றம் இழைத்தோரை பாதுகாக்க முன்வர மாட்டேன்!

## பீல்ட் மார்ஷல் பொன்சேகா உறுதி



கொழும்பு, ஒக்ரோபர் 01

**எனது கட்டளைக்கேற்ப போர் செய்த எவரையும் தண்டிக்க இட மளிக்கமாட்டேன், அதேவேளை, போரில் குற்றமிழைத்தவர்களைப் பாதுகாக்கவும் முன்வரமாட் டேன் - என்று அமைச்சரும் முன்னாள் இராணுவத் தள பதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

கிரிபத்கொடையில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளி யிட்ட அவர், அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்த பிக்குகளை விமர்சிக்கிறேன் என் மீது சிலர் குற்றம் சுமத்தி வரு கின்றனர். பௌத்த தேரர்களுக்கு நாம் உயரிய மரியாதைகளை வழங்கி வரு கின்றோம். அவர்களை ஒருபோதும் நாம் அவமதிக்கவில்லை.

மகாநாயக்க தேரர்களை ஒவ்வொரு நாளும் வணங்கி வருகின்றோம். ஆனால் ஒரு சில பௌத்த தேரர்கள் எம்மை விமர்சித்து சில தவறான கருத்துக்களை முன்வைத்தனர்.

பக்கம் 22 »



## மஹிந்த ஆரம்பித்த மாகாணசபையே இன்றும் வடக்கில்!

### பெருமிதம் கொள்கிறார் பஸில்

வடக்கில்மஹிந்த ராஜபக்ஷ வினால் உருவாக்கப் பட்ட மாகாண சபையே தற்போதுவரை இயங்கி வருகின் றது எனத் தெரிவித்துள்ள முன்னால் அமைச்சரும் புதிய கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜனக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ பக்கம் 22 »

## அ'புரம் கைதிகளின் உடல் நிலை மோசம்

அநுராதபுரம் சிறை யில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெ டுத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நிலை மோசமடைந்துள்ள நிலை யில் அவர்களிற்கு ஆதர வாக ஏனைய தமிழ் அரசி யல் கைதிகள் நாளை திங் கட்கிழமை போராட்டத்தில்

பக்கம் 22 »

## ஹர்த்தால் அழைப்பு பிசுபிசுத்துப் போனது

### நேற்று வழமைபோல எல்லாம் இயங்கின

யாழ்ப்பாணம், ஒக்.01

நேற்று ஹர்த்தால் ஒன்றை முன்னெடுக்கும் படி நேற்று முன்தினம் திடீரென யாழ்ப்பாணத்தில் முளைத்த சுவரொட்டிகள் மூலம் கோரிக்கை விடப்பட் டிருந்தது.

ஆனால் நேற்று சனிக் கிழமைவழமைபோலயாழ். நகரமும் பிற இடங்களும் இயங்கின. பக்கம் 22 »

## உலகில் தமிழினத்துக்கு அடையாளம் கொடுத்தவர் பிரபாகரன் மட்டும்தான்

### மட்டு நகர் நிகழ்வில் பாரதிராஜா உணர்ச்சி உரை



மட்டக்களப்பு, ஒக்.01

தமிழ் இனம் என ஒன்று உள்ளது, அதற்கும் வீர வரலாறு இருக்கின்றது என்பதை உலகறியச் செய்தவர் பிரபா கரன் மட்டுமே.

– இவ்வாறு இயக்குநர் சிகரம் பாரதி ராஜா மட்டக்களப்பு மாவட்ட கலைஞர் களை கௌரவிக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறியிருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முதுபெரும் கலை பக்கம் 22 »

## புதிய அரசமைப்பு உருவாக்கத்தை ஆட்சேபித்து பெரும் எதிர்ப்பியக்கம்

### களத்தில் முழுமூச்சாக இறங்குகிறது கூட்டு எதிரணி

கொழும்பு, ஒக்.01

புதிய அரசமைப்பு உரு வாக்கம் தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ளஇடைக் கால அறிக்கைக்கு எதிராக நாடுதழுவியரீதியில்பெரும் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை முன்னெடுப்பதற்கு கூட்டு எதிரணிதீர்மானித்துள்ளது.

கூட்டுஎதிரணியின்பிரதி அமைப்பாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரஞ்சித் டி சொய்ஸா இத னைத் தெரிவித்தார்.

மாவட்டங்கள் தோறும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிர மாக முன்னெடுக்கப் படும் என்றார் அவர்.

இந்தப்புதியஅரசமைப்பு நாட்டுக்குத் தேவையற்ற

பக்கம் 22 »

### ரோஹிங்யா அகதிகள் மீது தாக்குதல்:

## மூன்று பிக்குகளை தேடி பொலிஸார் வேட்டை

கொழும்பு, ஒக.01

கொழும்பு மவுண்ட்ல வேனியாவில்ரோஹிங்யா அகதிகள் தங்கியிருந்த பாதுகாப்பான இல்லத்தின் மீது ஆர்ப்பாட்டக் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக வண. அக்மீமன தயரத்ன தேரர் உட்படமூன்றுமுக்கியபிக்கு களைக் கைது செய்வதற் காகப்பொலிஸார்தேடிவரு கின்றனர் என்று கொழும் புச்செய்திகள்தெரிவித்தன.

இந்தச்சம்பவம்தொடர் பாக இதுவரை மொறட்டு வையில் 34 வயதுடைய ஒருநபரும், இரத்மலானை யில் 42 வயதுடையபெண் ஒருவரும் கைது செய்யப் பட்டிருக்கின்றனர் என்று

பக்கம் 22 »

## கடற்படைத் தளபதியாகியும் வசதி, வாய்ப்புப் பெறாமல் ஓய்வு பெறும் இக்கட்டில் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா



கொழும்பு, ஒக்.01

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவுக்கு, ஒரு மாத சேவை நீடிப்பு மாத் திரமே ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினால் வழங்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பு வட்டாரங் களில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடற்படை தளபதியாக நியமனம் பெற்ற இரண்டாவது தமிழரான சின்னையா, தளபதிக் குரிய வசதி, வாய்ப்புகளைக் கூட பெறா மல் ஓய்வு பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி கடற் படைத்தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட் மிரல் ட்ராவிஸ் சின்னையா, கடந்த 26ஆம் திகதியுடன் 55 வயதைப் பூர்த்தி செய்துள்ளார்.

இவருக்கு ஒரு மாத சேவை நீடிப்பு மாத்திரமே ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒரு மாத சேவை நீடிப்பு வரும் 26ஆம் திகதி யுடன் நிறைவடையவுள்ளது.

1973ஆம் பக்கம் 22 »

# தியாகிகளை போற்றி நினைவேந்தல் செய்வதற்கு தமிழரசுக் கட்சியினருக்கு அருகதை கிடையாது!

## கடுமையாகச் சாடுகின்றார் கிழக்குப் பிரமுகர்

மட்டக்களப்பு.ஒக்.01

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் மாவீரர் தினத்தை கொண்டாடுவதற்கோ துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்வதற்கோ அல்லது அண்ணன் தியாக தீபம் திலீபன் போன்றோரின் நினைவேந்தலை நினைவுகூருவதற்கோ அருகதையற்றவர்கள எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில் -

யுத்தம் முடிந்த கையுடன் நாடாளுமன்றத்தில் பயங்கரவாதத்தை ஒழித்த இந்த அரசிற்கு நன்றி எனக் கூறிய த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வொன்றில் திலீபன் அவர்களின் தியாகத்திற்கு நிரந்தர தீர்வே பரிகாரம் எனக் கூறியிருக்கின்றார் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்குரிய இராஜதந்திரமாகவே நாம் பார்க்கின்றோம்.

அண்மையில் கூட விடுதலைப்புலிகளை மஹிந்த ராஜபக்ஷ அரசு அழித்ததனால்தான் திருமலைக்கு போய் வரக்கூடியதாக இருக்கிறது என த.தே.கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்திருந்தார்.

தியாக தீபம் அவர்கள் என்ன நோக்கத்திற்காக தன்னுயிரை மெழுகாய் உருக்கி வீரமரணமடைந்தாரோ அதனைக் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கின்ற தமிழரசுக் கட்சியினர் மாவீரர் தினத்தை கொண்டாடுவதற்கோ, துயிலும் இல்லங்களை துப்புரவு செய்வதற்கோ அல்லது அண்ணன் தியாக தீபம் திலீபன் போன்றோரின் நினைவேந்தலை நினைவுகூருவதற்கோ அருகதையற்றவர்கள். எந்த இலட்சியத்திற்காக தமது சந்தணமேனிகளை ஆகுதியாக்கினார்களோ அவர்களின் இலட்சியத்திற்கு வேட்டு வைத்துத் தமது சொந்த நலனுக்காகவும் பதவிக்காகவும் சிலர் கூச்சலிடுகின்றனர்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை முற்றுமுழுதாகத் தவிடுபொடியாக்கியுள்ள இவர்கள் தற்போது தமிழ் மக்களிடமிருந்து ஓரம் கட்டப்பட்டுவருகின் றனர். கருத்துக் கணிப்புகளின்படி



நிலைமையை விளங்கிக் கொண்ட கூட்டமைப்பினர் மேலும் மக்களை ஏமாற்ற முடியாது என்பதையறிந்து செய்வதறியாது தடுமாறி கருத்துகளை சிறுபிள்ளைத்தனமாக வெளியிடுகின்றமையைப் பத்திரிகைகள் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது.

அண்மையில் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பழுகாமத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் கூறிய கருத்து அவருடைய அரசியல் புலமையை மட்டிடுகின்றது.

இவர்தான் இதுவரை காலமும் மட்டக்களப்பு மக்களை தேசியம் பேசி ஏமாற்றியவர். தமிழ்மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் எதையும் நிறைவு செய்யாது புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை 21.09.2017 அன்று இந்த நாட்டினுடைய பிரதம மந்திரியால் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மக்களை ஏமாற்றும் இராஜதந்திரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இனி யாரையும் ஏமாற்ற முடியாது என அறிந்தமையினாலே தற்போது சிலர் கல்லு வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் .

இன்றைய சூழ்நிலையில், எமது மக்கள், குறிப்பாக விவசாயிகள், பாமரமக்கள், இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், எந்திரிகள், ஏனைய புத்தஜீவிகள் விழிப்படைய வேண்டும். நாம் காலம் காலமாக பேரினவாதம் நடைமுறைக்கு கொண்டு வந்த யாப்புக்களையும் திருத்தங்களையும் ஏன் நிராகரித்து வந்தோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் நிராகரிக்கப்பட்டு, விட்டுக்கொடுக்காத ஒற்றையாட்சி முறையே கொண்டு வரப்பட்டமையால் அவை தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டு வந்தன.

இந்தப் புதிய அரசமைப்பும் தமிழ் மக்களுடைய அரசியல் கோரிக்கைகள் எதையும் கொண்டிருக்கப்போவதில்லை என்பது நிதர்சனம்.

புதிய அரசமைப்பில் தமிழ் மக்களுக்கு ஏதோ இருப்பதாக உலகிற்கு காட்டி ஐ.நாவின் 34/1 உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவிடயங்களை நடைமுறைபடுத்துவது போன்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றபோகின்றது அரசு. இதனால் ஏமாற்றப்படுபவர்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களே யாவர்.

எனவே இந்த யாப்பு சர்வசனவாக்கெடுப்புக்கு வரும் போது தமிழ் மக்களால் நிராகரிக்கப்படுமென்பது திண்ணம். - எனத்தெரிவித்தார்.

## கல்வியியற் கல்லூரி மாணவரின் மாதாந்த கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.01

கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு மூவாயிரம் ரூபாவிலிருந்து ஐயாயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை கல்வியியற் கல்லூரிகளுக்கு நான்காயிரத்து 800 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிதாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த மாதம் வெளியிடப்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)





## மட்டக்களப்பில் நேற்று சமாதான ஊர்வலம்

### சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில்

மட்டக்களப்பு,ஒக்.01

உலக சமாதான தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதான ஊர்வலம் நேற்று (சனிக்கிழமை) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

சமாதானத்தின் அவசியம் உணரப்பட்டுள்ள சமகாலத்தில் அதனை செயலுருப் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதை வலியுறுத்தியும் இந்தச் சமாதான ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஊர்வலம் நேற்றுக் காலை 8.30 அளவில் மட்டக்களப்பு திருமலை வீதி தாண்டவன்வெளி காணிக்கை மாதா தேவாலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகி , மட்டக்களப்பு காந்திப் பூங்காவைச் சென்றடைந்தது.





இந்தப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் 'காணாமல்போனோர் தொடர்பாக அரசே பதில் கூறு!','ஊழல் மோசடிக் காரர்களை சட்டத்திற்கு முன் நிறுத்து!', 'அதிகாரத்தைப் பகிர்ந்து தேசிய இனப் பிரச்சினைக்கு முடிவுகட்டு!', 'கிழக்கு மக்களின் நிலங்களை உடன் கையளி!' போன்ற பதாகைகளை ஏந்தியிருந்தனர். (உ)

ரோஹிங்கியா அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள

## பூஸா முகாமுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை

கொழும்பு,ஒக்01

பூஸா தடுப்பு முகாமுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு, காலி நீதிவான் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது என்று பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டுள்ள உத்தரவையும் மீறி பூஸா தடுப்பு முகாமுக்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பில் ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகள் தங்கியிருந்த வீட்டுக்கு முன்னால் நடந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து பாதுகாப்புக் கருதி அவர்கள் பூஸா முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (உ)

# கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி. வைரவிழா நிகழ்வு இடைநிறுத்தம்

## நிலைமையை விளக்கி மாகாணக் கல்வி அமைச்சு அறிக்கை

கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வியில் நாளை நடைபெறவிருந்த அதன் வைரவிழா நிகழ்வுகள் மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்புரைக்கமைய இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சு ஓர் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

கல்விஅமைச்சின் ஊடக அறிக்கை; கிளிநொசசி இராம நாதபுரம் வைரவிழாக் கொண்டாட்டங்கள் தொடர்பானது.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் 02.10. 2017 அன்று கொண்டாடப்படவுள்ள வரை விழா நிகழ்வுதற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமைதொடர்பாகவடக்கு மாகாண கல்வி அமைச்சரின் ஊடகப் பிரிவின் அறிக்கை வருமாறு:-

1. மேற்படிவைர விழா நிகழ்வுகள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினதோ அல்லது முதல்வரினதோ பிரசன்னமின்றி பாடசாலையின் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டமைதொடர்பாக மேற்படி பாடசாலைச் சமூகம், பழைய மாணவர்கள் மற்றும் பொது மக்களின் முறைப்பாடுகளை அடுத்து இம்முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணையை மேற்கொண்ட பின்னர், கல்வி அமைச்சின் அனுசரணையுடன், நடைபெற வேண்டு மென்பதால், இந் நிகழ்வை இடைநிறுத்துமாறு செயலாளரினால் அறிவிக்கப்பட்டது.

2.இவ்வைர விழாக் கொண்டாட்டங்கள் பாடசாலைச் சமூகத்திற்கு விருப்பமில்லாத வகையில் நடைபெறுவதாகவும், ஒரு சில அரசியல் வாதிகளின் தனிப்பட்ட குறுகிய அரசியல் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் சில அழுத்தங்களைக் கொடுத்து, தமக்கு விருப்பமில்லாத விருந்தினர்களை அழைக்கவைத்ததுடன் கல்வி அமைச்சின் கீழ் நடைபெறுகின்ற இந்த நிகழ்வுக்கு கல்வி அமைச்சரையோ அல்லது முதலமைச்சரையோஅழைக்காது, இந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டதை தாம் விரும்பவில்லை எனவும் பாடாலைச் சமூகத்தினர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

3. அவர்களது முறைப்பாடுகளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி பாடசாலைஅதிபர்மற்றும்சமூகத்தினரிடம்இவ்விழாவுக்குத்தன்னைப் பிரதமவிருந்தினராக அழைக்க வேண்டுமெனவும் வைர விழா கொண்டாட்டங்களுக்கானசெலவை ஈடு செய்யும் வகையில் இரண்டு லட்சம் ரூபாவை வழங்குவதாகவும், மேலும் மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக 50 மில்லியன் ரூபாவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பேசி ஏற்பாடுசெய்வதாகவும்குறிப்பிட்டு இந்தவிழாவுக்குஎந்தச்சந்தர்ப்பத்திலும் வடக்கு மகாண கல்வி அமைச்சரையோ அல்லது முதலமைச்சரையோ அழைக்கக் கூடாது என்றும் நிபந்தனை போட்டுள்ளதுடன் கிளிநொச்சிப் பிரதேசத்திற்குத் தானே எல்லா வகையிலும் பொறுப்பாக இருப்பதால்,வெளியார்எவரையும் அழைக்கக் கூடாது என்றும் கடுமையாகத் தெரிவித்துள்ளார் என்று எமக்கு வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பழைய மாணவர்களோ அல்லது அபிவிருத்திச் சங்கமோ குறிப்பிட்ட அரசியல் வாதியை பிரதமவிருந்தினராக அழைக்க விரும்பவில்லை என்பதை, அதிபர் குறித்த அரசியல் வாதியிடம் தெரிவித்த பின்பே, இந்த நிதி அன்பளிப்புக்களைக் காட்டித்தன்னை பிரதம விருந்தினராகப் போடவைத்துள்ளார். பாடசாலை அபிவிருத்திக் குழு விரும்பவில்லை என்பதைத் தெரிந்து, அவர்களையும் அழைத்து, நெருக்கடிகளைக் கொடுத்தே ஏற்றுக் கொள்ள வைத்தார் என்பதை சம்பந்தப் பட்டவர்களே எமக்குத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய ஒரு சூழலில் பாடசாலையையும், பாடசாலை நிகழ்வுகளையும் அரசியல் களமாக்குவதை ஏற்றுக் கொள்வது தவறான முன்னு தாரணமாகும். பாடசாலையின் நிர்வாகத்தைக் குழப்பும் வகையில் அரசியல் வாதிகளோ அல்லது வெளியார் எவருமோ பாடசாலை விடயங்களில் தலையிடுவதை கல்வி அமைச்சு அனுமதிக்க முடியாது.

4. பாடசாலை நிர்வாகம் என்பது பிள்ளைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் கல்வி அபிவிருத்தியையும், நல்லொழுக்கத்தையும் பேணி வருகின்ற ஒரு புனிதமான நிறுவனம் என்ற வகையில் அரசியல் வாதிகளின் தேவையற்ற தலையீடுகள் மற்றும் அடாவடித் தனங்களினால் பாடசாலையின் இயல்பு நிலை குழம்பக் கூடாது என்ற வகையில் பொதுமக்கள் மத்தியில் ஏற்படும் அதிருப்தியைத் தவிர்க்கும் வகையிலேயே இம் முடிவுமேற்கொள்ளப்பட்டது.

- என்று உள்ளது. (உ)

# மாந்தை புத்த விகாரைத் திறப்பு விழாவை ஜனாதிபதி புறக்கணித்தமைக்கு வரவேற்பு

## நன்றி தெரிவித்து சிவகரன் கடிதம் அனுப்பி வைப்பு

மன்னார், ஒக்.01

மன்னார் மாந்தை திருக் கேதீஸ்வரத்தில் அமைக்கப்பட்ட புத்த விகாரைத்திறப்பு விழாவில் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன கலந்து கொள்ளாமைக்கு, மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின்ஒன்றியத்தலைவர்வி.எஸ். சிவகரன் நன்றி தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் விவரம் வருமாறு:-

மன்னார் மாந்தை திருக் கேதீஸ்வரத்தில் அமைக்கப்பட்ட சட்டவிரோத புத்த விகாரைத்திறப்பதற்கு 29.09.2017 வருகை தர இருந்தீர்கள். அதற்கு எமது சன நாயக ரீதியான எதிர்ப்பை உங்களுக்கு எழுத்துமூலம் தெரிவித்திருந்தோம். அதனை ஏற்றுக் கொண்டு விகாரை திறப்பு விழாவில் கலந்து கொள்ளாமையை யிட்டு மிகுந்த மன நிறைவடைகின்றோம்.

இந்த விடயத்தில் நீங்கள் காட்டிய சனநாயகப் பெருந் தன்மைக்காக எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சனநாயகமும், இலங்கை அரசமைப்பும், மத விவகாரங்களும் இந்த நாட்டில் உள்ள அனைவருக்கும் சமம் என்பதை தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டிய தார்மீக கடமையும் பொறுப்பும் தங்களிற்கு உண்டு. ஏனெனில் ஒரு சர்வாதிகார தலைமைத்துவத்தை எதிர்த்து சன நாயக ரீதியில் தமிழ் மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றவர் நீங்கள்என்பது குறிப்பிடத்தக்கது.

எக்காலத்திலும் பௌத்தர்கள் வசிக்காத இடத்தில் தற்போது வரை எவரும் இல்லாத சூழலில் விகாரையைத் தனியார் காணியில் அமைந்திருப்பது ஒருங்கிணைந்த சமூகமயமாக்கல் நல்லெண்ண செயற்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய தாகவே காணப்படும்.

ஆகவே நேற்றைய தினம் (வெள்ளியன்று) பௌத்த சாசன அமைச்சர் இந்த நிகழ்வில் கலந்த கொண்டமை நல்லாட்சி சன நாயக விழுமியத்திற்கு உகந்த நாகரீகம் அல்ல. மேட்டிமைவாத அடக்கிஆளும்சிந்தனைத்துவம் கடந்த காலத்தில் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தியது என்பது நாம் கற்றுக்கொண்ட பாடமாகும். எனவேஎதிர்காலத்தில் இந்த சட்டவிரோத விகாரையை அகற்றுவதற்குதகுந்தநடவடிக்கை எடுப்பீர்கள் என நம்பு கின்றோம்.

சனநாயக ரீதியில் நீதிகோரி போராடுவது தவறா? கடந்த ஏழு வருடங்களில் சனநாயகரீதியான பல்வேறுவிதமான போராட்டங்களில் பங்குகொண்டமையோடு நீதிகோரிய நூற்றுக்கணக்கான கடிதங்களையும் பலருக்கு அனுப்பியுள்ளேன். ஆனால்உங்கள்புலனாய்வாளர்கள்தவறுஎன அவ்வப்போது நிரூபிக்க முனைகிறார்கள் என்பதே வேடிக்கையான வாடிக்கையாகி விட்டது.

சனநாயக அடக்குமுறையின் விளைவே கடந்தகால போராட்டம் என்பதும் எமக்கு உணர்த்திய கற்பிதம் அல்லவா? எனவே சனநாயக ரீதியான எனது போராட்டம் தொடரும். தங்கள் புலனாய்வு அமைப்புக்களின் எத்தகைய விசாரணைக்கும் தயாராகவே இருக்கின்றேன் என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத்தருவதுடன் இவ்வாறான சனநாயகச் செயற்பாட்டாளர்களை அடக்க முனைவது சன நாயகப் படுகொலையாகும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

கடந்த ஆட்சிக்காலத்திலும் இவ்வாறான புலனாய்வு முகவரமைப்புக்களின் தவறான தகவல்களின் பிரகாரம் பல்வேறு விதமான பின்னடைவுகள் நாட்டிற்கு ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. எனவே இவற்றை தாங்கள் சீர்படுத்துவீர்கள் என நம்புவதுடன் தங்கள் பெருந்தன்மைக்கு மீண்டும்நன்றிதெரிவித்துக் கொள்கின்றோம்.

# ஆயர் இராயப்பு ஜோசப்பை நேற்று சந்தித்து சுகம் விசாரித்தார் சம்பந்தன்

மன்னார்,ஒக்.01

மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையை எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான ஆர். சம்பந்தன் நேற்று சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.



மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயரான இராயப்பு யோசப் ஆண்டகை கடந்த சில வருடங்களாக நோய்வாய்ப்பட்ட நிலையில் ஓய்வுநிலையில் இருந்து வருகின்றார்.

நேற்றுப் பிற்பகல் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன், மன்னார் அப்போஸ்தலிக்க பரிபாலகர்ஆயர்கிங்ஸ்லிசுவாம்பிள்ளை ஆண்டகையையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# புகையிலைப் பெட்டியை வைத்திருந்த இளைஞர் கைது

## வவுனியாவில் நேற்றுக் காலை சம்பவம்

வவுனியா பேருந்து நிலையத்தில் அரச அனுமதியற்ற – சட்ட விரோதமான–புகையிலைபெட்டிகள் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தசம்பவம்நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

வவுனியா போதைப்பொருள் தடுப்பு பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து போதைப் பொருள் தடுப்பு பிரிவு சப் இன்ஸ் பெக்டர் தினேஷ் தலைமை யின் கீழ் வவுனியா பேருந்து நிலையத்தில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



இதன்போது, சட்ட விரோதமான 800 புகையிலை சுருள் அடங்கிய 40 புகையிலை பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து, இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போதைப் பொருள்தடுப்பு பிரிவுபொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# கல்வியில் உள்ளூர் அரசியல்

தமிழ் மக்களின் நீண்ட, நெடிய போராட்டத்தின் பெறுபேறாகக் கிடைத்த ஆறுதல் பரிசு மாகாணசபை.

அதை நம்மவர்கள் கையாளும் விதத்தைப் பார்க்கும் போது பலரின் நெஞ்சம் வேதனையில் வெடிக்கின்றது.

தென்னிலங்கை ஆட்சியாளரைப் பார்த்து எது தவறு என்று சொன்னோமோ அதைத்தான் நம்மவர்களும் செய்கிறார்கள் எனில், தப்பு யார் மேல்?

2013 செப்ரெம்பரில் வடக்கு மாகாண ஆட்சி வருவதற்கு முன்னர், வடக்கு மாகாண சபை ஆளுநரின் பிடியில் இருந்தது. அப்போது ஆளுநராக ஜெனரல் சந்திரசிறி இருந்தார். அவர் வைத்ததே இங்கு சட்டம். அதை சர்வாதிகாரித்தனம் என்றோம்.

அரச நிறுவனங்களில் எதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இடமளிக்கவே கூடாது என்ற கண்டிப்பான - எழுதாத உத்தரவு - மிகக் கடுமையான போக்கிற் கடைப்பிடிக்கப்பட்டது.

அரச நிறுவனங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு, ஆளும் தரப்புடன் நிற்கும் அரசியல்வாதிகளுக்கு மட்டுமே இடமளிக்க முடியுமென்ற எழுதாத சட்டம் அரச நிறுவனத் தலைவர்கள் மீது கடுமையாகப் போடப்பட்டிருந்தது.

அரசுத் தரப்போடு நின்றதால், ஆக ஈ.பி.டி.பியினருக்கு மட் டுமே இடமளிக்கப்படலாம் என்ற நிலைமை.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தனது பழைய பாடசாலையில் ஓர் இலக்கிய விழாவுக்கோ, ஒரு விளையாட்டுப் போட்டிக்கோ குறைந்த பட்சம் கௌரவ விருந்தினராகக் கூட அழைக்கப்பட முடி யாத நிலைமை இருந்தது.

இந்த சர்வாதிகாரித்தனம் குறித்து அப்போது சமூகத்தில் பலரும் எதிர்ப்புடன் வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டும் வந்தனர்.

எனினும், 2013 இல் வடக்கு மாகாண சபை நேரடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளுக்கு வந்தவுடனேயே இந்தப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.

மாகாண சபைக்குக் கீழான பொது நிகழ்வுகளில் மாகாண சபையைச் சேர்ந்த அரசியல்வாதிகள், அவர்களின் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள், எம்.பிக்களுக்கு இடமளிக்கும் நிலைமை சுமுகமானது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால், நாட்டில் ஏற்பட்ட பல்வேறு அதிரடி மாற்றங்கள் இந்தப் போக்கிலும் கூட திருப்பத்தை ஏற்படுத்தின. ஒரு சுமுக நிலைமை நிலவியது. ஓர் இணக்கப்போக்குத் தென்பட்டது. இழுபறியின்றி விடயங்கள் நடந்தேறின.

ஆனால், இப்போது வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி அமர்ந்துவிட்டது போலும்.

கிளிநொச்சி, இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் அறுபதாவது ஆண்டுப் பூர்த்தியை ஒட்டி பாடசாலைச் சமூகம் நாளை வைரவிழா நிகழ்வையும் பரிசளிப்பு விழாவையும் நடத்துவதற்குத் தடல்புடலான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

ஆனால், அது இப்போது தள்ளிப்போடப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது.

இந்த நிகழ்வுக்காகப் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறி தரன் அழைக்கப்பட்டிருந்தார். அவரின் பெயரே அழைப்பிதழிலும் இடம் பெற்றுள்ளது. அவர் இந்தப் பாடசாலையின் முன்னாள் ஆசிரியர். இந்தப் பாடசாலையோடு மிக அந்நியோன்னியமாகச் செயற்பட்டு வருபவர் என்பது தெரிந்த செய்தி.

ஆனால், அந்தப் பாடசாலை வடக்கு மாகாண சபைக்குக் கீழ் வருகிறது. வடக்கு மாகாண சபையின் தற்போதைய - புதிய - கல்வி அமைச்சரோ ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த கலாநிதி சர் வேஸ்வரன்.

இது போதாதா சர்ச்சை உருவெடுக்க...? இப்போது வைரவிழா நிகழ்வு கடைசி நேரத்தில் ஒத்திப்போடப்பட்டிருக்கின்றது!!

யாழ். மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளுடன் வெற்றி பெற்ற சிறிதரனும், இப்போது மாகாணக் கல்வி அமைச்சராக இருக்கும் சர்வேஸ்வரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள்தாம். தேர்தல் காலத்தில் ஐக்கியம் குறித்து அதிகம் பேசி வாக்குத் திரட்டியவர்கள்தாம்.

ஆனாலும், அவர்களின் குடுமிப்பிடிச் சண்டையில் ஒரு கல்லூரிச் சமூகம் சீரழிக்கப்படுவது வேதனைக்குரியது.

முன்னைய மாகாணக் கல்வி அமைச்சராக குருகுலராஜா இருந்த சமயம், அவர் சிறிதரன் எம்.பியின் கைப்பொம்மையாகச் செயற்பட்டார் என்றும் அதை வைத்துக் கொண்டு இருவருமாகக் கிளிநொச்சிக் கல்வியைத் தம் இஷ்டப்படி நிர்வகித்தனர் என்றும் கூட குற்றச்சாட்டு உண்டு.

அதற்கு இடமளிக்காமல் விடயத்தை நிமிர்த்துகிறேன் பார் என்று புதிய கல்வி அமைச்சரான சர்வேஸ்வரன் களத்தில் இறங்கினாரோ என்னவோ...! அப்படி இறங்குவதற்கு அவர் சார்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இவர் சார்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கும் இடையில் இப்போது புகைந்து கொண்டிருக்கும் அரசியல் சர்ச்சையும் ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

ஆனாலும், இந்த இழுபறியில் பாதிக்கப்படப்போவது பாடசாலைதான். துண்டுபட்டு, பிளவுபட்டு, சீரழியப்போவது பாடசாலைச் சமூகம்தான்.

சரியோ, தவறோ சிறிதரன் எம்.பி. அதிகம் கவனம் செலுத்தும் பிரதேசம் கிளிநொச்சி. அது அவரது தாயகமும் கூட. மேலும் இந்தப் பாடசாலை அவர் கல்வி கற்பித்த - அவரின் வாழ்வோடு ஊறிய - பாடசாலை.

இந்த விடயத்தில் கலாநிதியான மாகாணக் கல்வி அமைச்சர் அதிகாரத்தைக் கையில் எடுத்து, அழுத்தத்தைப் பிரயோகிக்காமல் கொஞ்சம் தாராளத்தைக் காட்டியிருக்கலாம்.

கூட்டமைப்புக் கட்சிகள் இடையேயான குளறுபடியை மீண்டும் சந்திசிரிக்க வைக்காமல் பார்த்திருக்கலாம்.

இதன் விளைவு, இனி மாகாண சபையிலும் மோசமாக எதிரொலிக்கலாம்.

# என் பேச்சைக் கேட்காமல் விட்டமை தன் தவறு என வருந்தினாராம் மஹிந்த

## இப்படிக் கூறுகின்றார் கம்யூ.செயலாளர் டியூ குணசேகர

''உங்கள் பேச்சை கேட்காமல் இருந்தமை நான் செய்த தவறாகும்'' - என முன்னாள் ஜனாதிபதியும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான டியூ. குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கட்சியின் 21ஆவது தேசிய சம்மேளனம் நாரஹேன்பிட்டி ஷாலிகா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு மஹிந்த ராஜபக்ஷ குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

''எமது கட்சியின் 20ஆவது சம்மேளனம் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற போது, நாட்டின் அரசியலில் 2015 ஆம் ஆண்டு பெரும் மாற்றம் இடம்பெறலாம் என்று அன்று நான் மஹிந்த ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியிருந்தேன்.

''அது மாத்திரமல்லாது அடுத்து வந்த ஜனாபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த விடயம் தொடர்பாக 2 மணிநேரம் நான் மஹிந்தவிடம் தெளிவுபடுத்தினேன்.

''எவ்வாறிருப்பினும் தேர்தலுக்கு சென்றால் நிச்சயமாக தோல்வியடைவோம் என்று அரசியல் எதிர்வு கூறலாக அதை அவருக்குத் தெரிவித்தேன்.

''உண்மையில் தேர்தலில் என்னுடைய எதிர்வு கூறல்தான் நிகழ்ந்தது. இதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் வந்து உங்கள் பேச்சைக் கேட்காமல் இருந்தமை நான் செய்த தவறாகும் என்று குறிப்பிட்டார்.

''இதேவேளை, இன்று அரசியல் எதிர்வு கூறல்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை அரசியல்வாதிகளிடம் இல்லை. எதிர்கால அரசியல் நிலைமைகளை அறிந்து கொள்ள சாத்திரக்காரர்களிடம் செல்லும் நிலையே ஏற்பட்டுள்ளது'' என்றும் குறிப்பிட்டார். (உ)

# யாழ். நகரில் காந்தியடிகள் ஜெயந்தி தினத்தில் மலரஞ்சலி நிகழ்வு

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில், மகாத்மா காந்தியடிகளின் 148 ஆவது ஜெயந்தி தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தியடிகளின் திருவுருவச் சிலையடியில், மௌன வணக்கமும் மலர் மாலை அணிவித்து அஞ்சலியும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொள்வார். அ.இ.காந்திசேவா சங்கத் தலைவர் ந.சிவகரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் நினைவுரைகள் நிகழ்த்தப்படும். (இ)

# கிழக்கில் ஆசிரிய இடமாற்றங்களை தற்காலிகமாக நிறுத்துமாறு உத்தரவு

## ஆளுநர் விடுத்திருக்கிறார் எனத் தகவல்

கிழக்கு மாகாணத்தில் சகல ஆசிரியர் இடமாற்றங்களையும் உடனடியாகத் தற்காலிகமாக இடை நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான மாகாணத்திற்குட்பட்ட வலய, கோட்டமட்ட சகல ஆசிரியர் இடமாற்றங்களையும் 31.12.2017 வரை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆளுநரின் செயலாளரின் மடலுக்கமைவாக மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஜி.திசாநாயக்க கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

எவ்வித ஆசிரியர் இடமாற்றங்களுக்கும் அதிபர்கள் சிபாரிசு செய்ய வேண்டாம் எனவும் அவர் கேட்டுள்ளார்.

மேலும் 2018 இற்கான சகல ஆசிரியர் இடமாற்றங்களையும் உரிய காலத்திற்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

# பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

இளவாலை, ஒக். 01

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிறு காலை 9 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# யாழ். பல்கலையில் நாளை கண்காட்சியும் கலாசார நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ். பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப்பு கல்விப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள கண்காட்சியும் கலாசார நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.


காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை கண்காட்சி யாழ். பல்கலைக்கழக புதிய கலைப் பிரிவுக் கட்டடத்தில் இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை கைலாசபதி கலையரங்கில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக நாடகத்துறை மாணவர்கள் வழங்கும் அன்ரன் செக்கோவின் 'தான் விரும்பாத் தியாகி' எனும் நாடக ஆற்றுகை சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். (உ)

## சர்வதேச அகிம்சா தினத்தையொட்டி

# யாழ். நகரில் திங்களன்று சிறப்புப் பட்டிமன்றம்



சர்வதேச அகிம்சாதினத்தை முன்னிட்டு யாழ். இந்தியத் துணைத் தூதரகமும், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரும் இணைந்து வழங்கும் - சிறப்பு நிகழ்ச்சியாக இந்தியாவிலிருந்து வருகை தரும் பட்டிமன்றம் புகழ் பேராசிரியர் கலாநிதி கு.ஞானசம்பந்தன் கலந்து கொள்ளும் சிறப்புப் பட்டிமன்றம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

அடுத்த முக்கிய நிகழ்வாக யாழ்ப்பாணத்தில் இளம் நாதஸ்வர வித்துவான் கே.பி. குமரன் குழுவினரின் கெஞ்சிற் கச்சேரி இடம் பெறும்.

பட்டிமன்றத்தின் தலைப்பு ''மனிதர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவது - குடும்பச் சூழலிலா, சமுதாயச் சூழலிலா?''

நடுவர் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன்.

குடும்பச் சூழலிலா என வாதிடுவோர்: பேராசிரியர் ரி.வேல்நம்பி, எஸ்.லலீசன், செல்வி கே.தயாளினி.

சமுதாயச் சூழலிலா என வாதிடுவோர்: என்.விஜயசுந்தரம், ஆர்.சர்வேஸ்வரா, செல்வி வி.பிரியா. (இ)

## நாளை

02.10.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : அவிட்டம் மு.இ. 8.49 வரை
திதி : துவாதசி பி.இ. 1.44 வரை
சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம் : 7.32 – 9.02 வரை

# மாகாணசபைகள் காலாவதியான பின்னரும் அமைச்சரவையை செயற்படுத்த முயற்சியா?

## நீதிமன்றம் போவோம் என எதிரணி எச்சரிக்கை

‘‘மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னரும் முதலமைச்சரும் மாகாண அமைச்சரவையும் தொடர்ந்தும் தமது பணிகளை முன்னெடுக்கும் வகையில் அரசாங்கம் வழிவகைச் செய்யவுள்ளதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

எனவே அரசாங்கம் அவ்வாறு செய்யுமாயின் அதற்கெதிராக கூட்டு எதிரணி நீதிமன்றம் செல்லும்.’’ -இப்படி மஹிந்த ராஜபக்ஷ சார்பான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின்தலைவரும்முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

சப்ரகமுவ மாகாண சபையின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. அதேபோல் வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் பதவிக்காலமும் நிறைவடைகின்றது.

அடுத்தவருடத்தில் மேலும் மூன்று மாகாண சபை களின் பதவிக்காலம் நிறைவடையவுள்ளது. பதவிக்காலம் நிறைவடையும் மாகாண சபைகளின் அதிகாரங்களை ஆளுநரின்கீழ் கொண்டுவருவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.



ஆனால் சகல சந்தர்ப்பங்களிலும் மாகாண சபைகளின் அதிகாரத்தை ஆளுநரின் கீழ் கொண்டு வரமுடியாது.

முக்கியத்துவமிக்க விசேட சந்தர்ப்பங்களிலேயே ஆளுநரின் கீழ் அதிகாரங்களை கொண்டு வர முடியும். சாதாரண கொள்கைத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகளின் அதிகாரங்களை ஆளுநரின் கீழ் கொண்டுவருவதற்கு அரசமைப்பின் 13 ஆம் திருத்தச்சட்டத்தில் அனுமதி இல்லை.

மேலும் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள மாகாண சபைகளின் முதலமைச்சர்களும் மாகாண அமைச்சரவையும் தொடர்ந்தும் தமது பணிகளைமேற்கொள்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்யவுள்ளதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

அது ஜனநாயக விரோத செயற்பாடாகும். ஏனெனில் மாகாண சபை இல்லையெனில் முதலமைச்சரும் மாகாண அமைச்சர்களும் பதவி வகிக்க முடியாது.

எனவே அவ்வாறான நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முற்படுமாயின் அதற்கெதிராக, பொது நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் கூட்டு எதிரணி வழக்குத் தாக்கல் செய்யத் தயாராக உள்ளது. அரசாங்கம் அவ்வாறு முதலமைச்சரினதும் மாகாண அமைச்சரவையினதும் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இடமளித்தால் அது நீதிமன்றின் தீர்ப்புக்கும் எதிரானதாகும். ஆகவே நீதிமன்றை அவமதித்தமை தொடர்பிலும் நாம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம்.- என்றார்.

(உ)

## கூட்டு எதிரணியினருடன் இணைந்து செயற்படும் காவி உடை தரித்த கும்பல்

### தலதா அத்துக்கோறளை காட்டம்

கொழும்பு, ஒக்.01



யார் என்ன சொன்னாலும் ரோஹிங்ய மக்களையும்நாம் மனிதர்களாகவே பார்க்க வேண்டும் என நீதி, வெளிநாட்டுவேலை வாய்ப்புக்கள் அமைச்சர் தலதா அத்துக்கோறளை தெரிவித்தார்.

அகதிகள் என்பதற்காக அவர்களைத் தூக்கிக் கடலில் வீசிவிட முடியாது. சர்வதேச நீதியில் எமது நாடு உடன்பட்ட சில நிபந்தனைகள் உள்ளன. அந்த நிபந்தனைகளுக்கு ஏற்ப நாம் செயற்பட வேண்டியுள்ளோம்.

கூட்டு எதிர்க் கட்சி நாளுக்கு நாள் ஒவ்வொரு பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றது. அந்த அமைப்புக்காக பணியாற்றும் காவியுடை தரித்த ஒரு கும்பல் உள்ளது. இது தான் இந்தப் பிரச்சினைக்குக் காரணமாகவுள்ளது. - என அமைச்சர் தலதா அத்துக்கோறளை ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் மேலும் சுட்டிக்காட்டினார்.

(உ)

## இனப்பூசல்களை பிக்குகளே தூண்டுகின்றமை பௌத்தத்துக்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தும்

### அஸ்கிரிய பீடாதிபதி வரகொட தேரர் விசனம்

கொழும்பு,ஒக்.01

இனங்களுக்கிடையில் தேவையற்ற விதத்தில் பேதங்களை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் பௌத்த தேரர்கள் செயற்படுகின்றமை பௌத்த மதத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வண. வரகாகொட ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இக்காலகட்டம் இப்படியான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் ஒரு சந்தர்ப்பம் அல்லவெனவும் அவர் கூறியுள்ளார்.



மாற்று மதத்தவர்களுக்கு இந்நாட்டில் வலியை ஏற்படுத்தும் விதத்தில், பிக்குகள் நடந்து கொள்வது, நமது மதத்துக்கே நாம் செய்து கொள்ளும் அகௌரவமாகும் எனவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மாதொட ரஜமகா விகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். (உ)

## கட்டுகஸ்தோட்டையில் இருந்து 65 பொலிஸாருக்கு இடமாற்றம்

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் அறுபத்தைந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு பொலிஸ் நிலையங்களில் ஏற்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான தேவையை அடுத்தே இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இந்த இடமாற்றங்களுக்கான உத்தரவுகள் கண்டி மாவட்டப் பொலிஸ் பொறுப்பதிகாரி மஹிந்த ஏக்கநாயக்கவுக்கும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், இந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் கண்டி மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## ஞானசாரருக்கு எதிரான வழக்கை பொலிஸ் தரப்பு திடீரென வாபஸ்?

கொழும்பு,ஒக்.01

இனங்களுக்கிடையிலான பதற்றத்தை தூண்டும் வகையில் செயற்பட்டார் என வண. ஞானசார தேரருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு பொலிஸாரினால் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் பொதுபல சேனா அமைப்பினர் மற்றும் அதன் பொதுச் செயலாளர் வண,ஞானசார தேரர் ஆகியோர் தீவிர முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரம் மற்றும் தாக்குதல் சம்பவங்களை மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த வண,ஞானசார தேரர் கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி காலை கோட்டை நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார்.

பொலிஸார்வழக்கின்முறைப்பாட்டை வாபஸ் பெற்று இலகுவான சட்டப் பிரிவுகளில் புதிய வழக்குப் பதிந்த காரணத்தினால் சில நிமிடங்களில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.



இந்நிலையில் இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு மஜிஸ்திரேட் லால்பண்டாரமுன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது வண,ஞானசார தேரருக்கு எதிரான வழக்கை வாபஸ் பெறுவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

(உ)

# காவிகளின் சகபாடிகளால்

# ரோஹிங்யா அகதிகளுக்கு நெருக்கடி!

## அறிவிலிகளின் அயோக்கியத்தனம்; ஒன்றும் அறியாத அப்பாவிகள் திண்டாட்டம்



இலங்கை கடற்பரப்பிற்குள் இரு இந்தியர்கள் உட்பட 32 பேர் படகொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட ஏனைய 30 பேர் மியன்மாரைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் ஒரு குழந்தை பிரசவமான நிலையில் தற்போது எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

5 வருடங்களுக்கு முன்பு தமது நாட்டை விட்டு வெளியேறிய இவர்கள் இந்தியாவில் சுமார் 5 வருடங்கள் தங்கியிருந்து அகதிகளாகவும் பதிவு செய்துள்ளனர் ஐ.நா அகதிகள் ஆணையத்தின் (UNHCR) மூலம் அகதி அடையாள அட்டையும் வழங்கப்பட்டிருந்தது.

இந்தியாவில் வெளியான செய்தியொன்றின் காரணமாக இந்திய அரசினால் எந்நேரத்திலும் மியன்மாருக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக படகொன்றின் மூலம் வேறொரு நாட்டிற்கு தப்பிச்செல்ல முயற்சித்துள்ளனர். அந்தப் பயணத்திற்காக இந்தியர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு நாகபட்டினம் கடலோரத் திலிருந்து படகொன்றில் புறப்பட்டுள்ளனர்.




படகில் புறப்பட்டவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்த குற்றத்துக்காக இலங்கை கடற்படையினரால் 2017 ஏப்ரல் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தக் கைது தொடர்பாக இந்திய தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, இந்திய அதிகாரிகளினால் இவர்கள் இந்தியாவில் வசித்த அகதிகள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் கீழ் காங்கேசன்துறை போலிஸாரால் குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதிமன்றம் இவ்விடயம் சம்பந்தமாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்து அதுவரையில் மியன்மாரைச் சேர்ந்த 30 பேரையும் மிரிஹான சட்ட விரோத குடியேற்றக்காரர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்குமாறும் இரு இந்தியர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறும் கட்டளையிடப்பட்டது.

மியன்மாரைச் சேர்ந்தவர்கள் இந்திய அகதிகளாக உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் அவர்களுக்கெதிராக 1948 ஆம் ஆண்டின் 20ம் இலக்க குடிவரவு குடியகல்வு சட்டத்தின் 45 மற்றும் 45 (அ) உறுப்புரைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டாம் என சட்டமா அதிபரினால் நீதிமன்றத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

**மிரிஹான முகாமில்**

மியன்மாரைச் சேர்ந்த இலங்கையில் பிறந்த குழந்தை உள்ளிட்ட 31 பேரையும் இவ்வழக்கிலிருந்து விடுவித்து , குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினூடாக ஐ.நா அகதிகள் ஆணையத்திடம் ஒப்படைக்கும்படி கட்டளையி டப்பட்டது.அதன் பிரகாரம் மியன்மாரைச் சேர்ந்த அனைவரும் ஐ.நா வழிகாட்டலில் நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் வரை மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை இளம் பெண்ணொருவர் தடுப்பு முகாமில் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரியொருவரால் அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். இது தொடர்பில் நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது.

இந்த பாதுகாப்பு அற்ற சூழ்நிலைகளைக்கருத்திற்கொண்டு அவர்களுக்கு பொறுப்பாகவிருந்த ஐ.நா அகதிகள் ஆணையம் மூலம் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு காவல் துறையினரின் பாதுகாப்புடன் தற்காலிகமாக இவர்கள் கல்கிஸ்ஸை பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் தங்க வைக்கப்பட்டனர். இது தொடர்பாக காவல் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறையினருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

**ஏற்கனவே வந்த மியன்மார் அகதிகள்**

2008 மார்ச் மாதம் 3 ஆம் திகதி மியன்மாரைச் சேர்ந்த 55 நபர்கள் கொண்ட குழுவொன்று இலங்கை கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். ஐ.நா அகதிகள் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் அனைவரும் 2012 ஜூலை மாதம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

2013 பெப்ரவரி மாதம் மீண்டும் இலங்கை கடற் பரப்பிற்குள் வைத்து 170 மியன்மார் பிரஜைகள் கைது செய்யப்பட்டு ஐ.நாவிடம் ஒப்படைக்கப்பட்டனர் 2015 நவம்பர் மாதம் அனைவரும் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். விசேடமாக அவ்வூடக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தற்கிணங்க இலங்கை அரசு இந்த அகதிகள் விடயத்தில் சரியான வழிமுறைகளைபின்பற்றியுள்ளதுடன் நெறியான வழிமுறைகளின் படியே அக்குழு தொடர்பாக அவசிய அனைத்து நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென உறுதிப்படுத்தியுள்ளது.

அதன் பிரகாரம் 31 நபர்களைக் கொண்ட மியன்மார் அகதிகள் குழுவை நாட்டிலிருந்து வெளியேற்ற அவசரமாக அனைத்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் வெளியேற்றப் படவிருந்த இச்சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட ஒரு நபரின் அல்லது ஒரு குழுவின் தவறான வழிகாட்டலில் இந்த அசாதாரண சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. உண்மைக்கும் புறம்பாக சில அடிப்படைவாத குழுக்கள் மூலம் சமூக வலைதலங்களினூடாகவும் ஏனைய பல்வேறு ஊடகங்களினூடாகவும் இந்த மியன்மார் பிரஜைகள் தொடர்பில் பொய்யான தகவல்கள் பிரசாரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**அகதிகள் முற்றுகை**

காவியுடை தரித்தவர்களுடன் வந்த நபர்களின் அல்லது குழுவின் நடவடிக்கைகள் மூலம் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டு உண்மையான தகவல் திரட்டியோ அல்லது அது தொடர்பில் ஆய்வு செய்யாமல் ஒன்று கூடிய அக்குழு மியன்மார் அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த வீட்டை முற்றுகையிட்டு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அந்த அகதிகளின் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களை பொலிஸ் பொறுப்பெடுத் து காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களை மீண்டும் தங்குமிடத்திற்கு அழைத்து வரப்பட்ட வேளை எழுந்தக் கடும் எதிர்ப்புக் காரணமாக அவர்களின் பாதுகாப்பு கருதி பூஸா தடுப்பு முகாமில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர். ★





### மிகப் பெரிய நாடுகளில் 52 ஆவது இடத்திலுள்ள

# வடகொரியாவிடம் உலகின் நான்காவது பெரிய இராணுவம்

வடகொரியாவும், அமெரிக்காவும் பரஸ்பரம் அச்சுறுத்தல்களை விடுத்து வரும் நிலையில், வட கொரிய மக்கள் இந்த சொற்போரை எவ்வாறு பார்க்கின்றனர் என்பது பற்றி வெளியுலகத்திற்கு அதிகம் தெரியாது.

ஏனெனில், கிம் ஜோங்-உன், தன் நாட்டு மக்கள் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்வதை கவனமாக கட்டுப்படுத்தி இரும்புப்பிடிக்குள் வைத்திருக்கிறார்.

21ஆம் நூற்றாண்டிற்குள் இன்னும் காலடி எடுத்து வைக்காத அளவு வடகொரியா தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக சித்திரிக்கப்படுகிறது. அந்த நாட்டில் இருந்து புள்ளிவிவரங்கள் பெறுவது கடினமானது என்ற நிலையில் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டே அந்த நாட்டைப் பற்றி கணிக்கப்படுகிறது. ஆனால் வடகொரியாவின் வாழ்க்கை முறை பற்றி அவை நமக்கு என்ன தெரிவிக்கின்றன?

**ஆட்சி முறைமையில் வடகொரியாவும் தென்கொரியாவும்**

1948ஆம் ஆண்டில் வடகொரியாவை திறமையுடன் நிறுவிய கிம் இல்-சுங்கின் குடும்ப வம்சத்தினரே அன்று முதல் இன்றுவரை நாட்டை ஆட்சி புரிகின்றார்கள். ஆனால் தென் கொரியாவோ ஆறு குடியரசுகள், ஒரு புரட்சி, சில சதிகளையும் சந்தித்து, சுதந்திரமான நியாயமான




தேர்தல்களை நோக்கி நகர்ந்துள்ளது. தென்கொரியாவில் இதுவரை, மொத்தம் 12 அதிபர்கள் 19 ஆட்சிக் காலங்களை வழிநடத்தியுள்ளனர். அதாவது சில அதிபர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை அதிபராக பொறுப்பு வகித்துள்ளனர்.



30 லட்சம் மொபைல் போன்கள் என்ற எண்ணிக்கை கேட்பதற்கு பெரும் எண்ணிக்கை என்று தோன்றினாலும் அது உண்மையல்ல. இரண்டரைக் கோடி மக்களைக் கொண்ட வடகொரியாவில், பத்தில் ஒருவரிடமே மொபைல் போன் இருக்கிறது என்பதே நிதர்சனம். மொபைலை பயன்படுத்தும் பெரும்பாலானோர் தலைநகர் பியோங்யாங்கில் இருக்கலாம் என்று கருதுவதற்கான சாத்தியங்கள் அதிகம். இதற்கு நேர்மாறாக, 5கோடியே 10 லட்சம் மக்கள் தொகை கொண்ட தென்கொரியாவில் அதைவிட அதிகமான மொபைல் இணைப்புகள் இருக்கின்றன.

'கொரியோலிங்க்' என்ற ஒரே நெட்வேர்க்கைக் கொண்ட வடகொரியாவின் மொபைல் சந்தை மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தாலும் வளர்ச்சியடைந்துவருகிறது. முதலில் எகிப்திய தொலைத்தொடர்பு நிறுவனமான ஓராஸ்காம் நிறுவனத்துடன் கூட்டணியாக நிறுவப்பட்ட கொரியோலிங்க் மட்டுமே பல ஆண்டுகளாக மக்களுக்கான ஒரே தெரிவு. இருந்தபோதிலும், 2015 ஆம் ஆண்டில் 'பையல்' என்ற போட்டி நெட்வேர்க் ஒன்றை வட கொரியா அமைப்பதை ஓராஸ்காம் கண்டுபிடித்தது. எனவே 30 லட்சத்துக்கும் அதிகமான சந்தாதாரர்களின் கட்டுப்பாட்டை இழந்துவிட்டதாக தனது முதலீட்டாளர்களுக்கு தெரிவிக்க வேண்டிய கட்டாயம் ஓராஸ்காமுக்கு ஏற்பட்டது.

வட கொரிய மக்கள் மொபைலில் கூடுதல் பேசும் நேரத்திற்கு (Talk time) செலவிடுவதைவிட கூடுதல் எண் ஒன்றை வாங்குவது மலிவானதாக இருக்கும் என்பதை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், மொபைல் போன் வசதி கொண்ட வட கொரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம் என்று யு.எஸ். கொரியா இன்ஸ்டிடியூட் அட் சைஸ் என்ற ஆய்வு நிறுவனம் கூறுகிறது. அதேபோல் மொபைல்களின் பற்றாக்குறை இருப்பது மட்டுமல்லாமல் மற்றும் வட கொரியாவின் பெரும்பான்மை மக்கள் அந்த நாட்டுக்குள் மட்டுமே செயல்படும் 'தனி இணையத்துக்கு' மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். தேசிய அளவிலான இன்ட்ரநெட் போன்றது அது.

**உயரம் குறைந்த வட கொரியர்கள்**

இதுவொரு கட்டுக்கதை போல தோன்றினாலும், வட கொரிய ஆண்கள் சராசரி தென்கொரிய ஆண்களைவிட உயரம் குறைந்தவர்களாக இருக்கின்றனர் எனச் சில ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. வட கொரியா எல்லைகளை கடந்து, தென்கொரியாவிற்கு வரும் அகதிகளின் உயரத்தை ஆய்வு செய்தார் சியோலில் உள்ள சுங்க்யூன்க்வான் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டேனியல் ச்வெ கிண்டிக். தென் கொரிய ஆண்களை விட, வடகொரிய ஆண்கள் சராசரியாக 3-8 செ.மீ (1.2-3.1 அங் குல) உயரம் குறைவாக இருக்கின்றமையை அவர் கண்டறிந்தார். இந்த உயரக் குறைவுக்கு மரபியலை காரணமாக கூறமுடியாது. ஏனெனில் இரு நாட்டினரும் ஒரே மரபை சேர்ந்தவர்களே. அகதிகள் வறுமையில் இருக்கின்றமையால் அவர்களின் உயரம் குறைவாக இருக்கலாம் என்ற கூற்றையும் அவர் புறந்தள்ளுகிறார்.

உணவுப் பற்றாக்குறையே வட கொரியர்கள் உயரம் குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணியாக கருதப்படுகிறது.

வட கொரியா தலைநகர் பியோங்யாங்கில் இருந்து வெளியிடப்படும் புகைப்படங்களில் பரந்த, அழகிய நெடுஞ்சாலைகளையும், போக்குவரத்து நெரிசல் இல்லாத வீதிகளையும் காணமுடியும்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

- **வடகொரியாவின் சனத்தொகை 2 1/2 கோடி!**
- **தென் கொரியாவின் சனத்தொகை 5 கோடி!**
- **வடகொரியவின் பொருளாதாரம் நிலக்கரி!**
- **அங்கு 1948 முதல் ஒரே குடும்ப ஆட்சியே!**



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**சந்திராட்டமநாள்:** மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களைத் தவிர்க்கவும்.

01.10.2017
07.10.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் பதினைந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஏகாதசித் திதி பி.இ. 2.44 மணிவரை. பின்னர் துவாதசித் திதி. நட்சத்திரம்: திருவோணம் இரவு 8.09 மணிவரை. பின்னர் அவிட்டம். அமிர்தயோகம் இரவு 8.09 மணிவரை. பின்னர் அசுபயோகம்.

பிறந்த நட்சத்திர வழிபாடு: திருவோணம்.

ராகுகாலம்:- மாலை 4.29 மணி முதல் 5.59 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.02 மணி முதல் 10.33 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- புரட்டாதி மாத வளர்பிறை ஏகாதசி.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

## மேஷம்:

சம பலன்கள் உள்ள வாரம். பணவரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். திடீர்ப்பயணங்கள் அமையும். அயலவருடன் அளவுடன் பழகுதல் நன்மை தரும். வியாபாரிகளுக்குப் போட்டிகளைச் சமாளிக்க வேண்டிவரும்.

உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சகோதரர்களுடன் விட்டுக் கொடுத்து நடக்கவேண்டும். குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றம் அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. புது முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது.

## ரிஷபம்:

யோகமானவாரம். பணபலம் அதிகரிக்கும். சுறுசுறுப்பும், தன்னம்பிக்கையும் உண்டாகும். சமூகத்தில் செல்வாக்கு, மதிப்புக்கூடும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். விரும்பிய ஆடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வார்கள். உத்தியோகத்தில் நிர்வாகத் திறமை பளிச்சிடும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு தானாக வந்துசேரும். வியாபாரத்தில் புதுத் திட்டங்களைப் புகுத்தி லாபமீட்டுவார்கள். சொந்த வீடு வாங்கும் யோகம் சிலருக்கு உண்டு. வாகனயோகமும் உண்டாகும். திருமண வாய்ப்புகள் வந்துசேரும். அந்நிய தேசப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

## மிதுனம்:

கவலையான வாரம். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் சலசலப்புகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்கவேண்டிவரும்.

வியாபாரத்தில் பங்கு தாரர்களைப் பகைத்துக் கொள்ள நேரும். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நன்று. தனியார் துறையில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளைப் பற்றி விமர்சனம் செய்வதைத் தவிர்த்துக் கொள்வது நன்று.

வெளிநாட்டுப் பயண முயற்சி ஏமாற்றத்தைத் தரும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

## கடகம்:

மத்திமமான வாரம். வருமானம் சுமாராக இருக்கும். வீண் அலைச்சல், பொருள் விரயம், உடல் உபாதைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் எல்லாப் பணியையும் இவர்கள் சுமந்து செய்யும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். தொழிலில் பிரயாசை அதிகரிப்பால் உடல்நிலை பாதிப்படையும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதங்களின் மேல் அனுகூலமாகும். மாணவர்களுக்கு ஞாபக மறதி அதிகரிப்பால் கல்வியூக்கம் குறையும். பிள்ளைகளின் உடல்நிலையில் கவனம் தேவை.

## சிம்மம்:

சுபீட்சமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். அரைகுறையாக நின்ற பலவேலைகள் முடியும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாட்டில் வேலைபார்க்கும் யோகம் உண்டாகும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். நண்பர்கள் பலவழிகளில் உதவி செய்வார்கள். வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து விலையுயர்ந்த பொருள்கள் பரிசாகக் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாகும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அரசு வழியால் சிலருக்கு வீடு, காணி வாங்கும் வாய்ப்புகள் அமையும்.

## கன்னி:

மகிழ்ச்சியான வாரம். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பம் குதூகலமாய் இருக்கும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். உத்தியோகத்தில் நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு உடனே கிட்டும். மகனுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். வழக்குகள் சுமுகமாகத் தீர்வடையும். சிலர் சொந்த ஊரில் வீடு, காணி வாங்குவார்கள். மாணவர்கள் கல்வியில் எதிர்பார்த்தபடி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும்.

## துலாம்:

யோசனையான வாரம். வருமானம் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிற் கஷ்டம் உண்டாகும். சுயதொழிலில் ஆதாயம் குறைவடையும். உறவினர்கள் வழியால் செலவுகள் அதிகரிக்கும். கடன்பட நேரும். உத்தியோகத்தில் கவனக் குறைவால் அதிகாரிகளின் தண்டனைக்காளாக வேண்டிவரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவார்கள். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும். பூர்வீக சொத்து வழக்குகள் இழுபறியில் இருக்கும். வரவேண்டிய கடன் பணம் வரத்தாமதமாகும்.

## விருச்சிகம்:

சமபலன்கள் உள்ள வாரம். பொருள்வரவு சுமாராக இருக்கும். அளவுக்கதிகமான செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புகளைச் சந்திக்க நேரும். தேகசுகம் பாதிப்படைந்து மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் ஓரளவு ஒத்துழைப்பார்கள். தொழிலில் பிரயாசையும், அலைச்சல்களும் அதிகமாகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பழுதான வாகனத்தை மாற்றுவார்கள். வீடு திருத்தச் செலவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

## தனுசு:

யோசனையான வாரம். பணவரவு குறையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் வரவு குறையும். தொழிலில் பாடுபட்டதன் பலன் குறையும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் மதிப்பு, மதியாதை குறையும். மாணவர்களுக்குக் கல்வியில் தடைகள் உண்டாகும். பெண்களுக்கு வேலைப்பளுவும், குடும்பப் பொறுப்புகளும் அதிகமாகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகமாக நடந்து பொள்வார்கள்.

## மகரம்:

சுபீட்சமான வாரம். பணபலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிப்பால் சுபீட்சம் உண்டாகும். எதிலும் வெற்றி உண்டாகும். விலையுயர்ந்த பொருள்கள் வாங்குவார்கள். வீடுகட்டும் திட்டம் நிறைவேறும். பிள்ளைகள் இவர்களின் புதிய திட்டங்களை ஆதரிப்பார்கள். சகோதர உறவு பலப்படும். இதுவரை விட்டுப் பிரிந்தவர்கள் வலியவந்து இணைவார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். தள்ளிப்போன திருமண காரியங்கள் மளமளவென்று ஒப்பேறும். உறவினர் வீட்டுச் சுபகாரியங்களில் கலந்து கொள்வார்கள்.

## கும்பம்:

அலைச்சல் மிகுந்த வாரம். பணம் தட்டுப்பாடாக இருக்கும். கடன்பட அலைய வேண்டிவரும். சிலர் அரச வேலை தேடி அலைவார்கள். மாணவர்கள் உயர் கல்விக்காகத் தகுந்த கல்லூரியைத் தேடி அலைவார்கள்.

சிலர் உடல் உபாதைகளால் மருத்துவ உதவியை நாடுவார்கள். சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகைவீடு தேடித் திரிவார்கள்.

வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிகளின் உதவியை நாடுவார்கள். பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கு அரச உதவியை வேண்டுவார்கள்.

## மீனம்:

அதிஷ்டமான வாரம். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். வியாபாரத்தில் மேலதிக லாபம் வரும். வேலையாள்கள் அனுசரணையாக இருப்பார்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். உறவினர்களுடன் குலதெய்வ கோவிலுக்குச் சென்று வருவார்கள். பூர்வீக சொத்துகள் தடையின்றி வந்துசேரும். சகோதரவழியால் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் ஆதரவால் விரும்பிய இடமாற்றமும், பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும்.



# முதுமை, இறப்பு

# மனிதன் சந்திக்கும் தவிர்க்க முடியாத இரு நிலைகள்!

## சர்வதேச முதியோர் தினம்

- புன்னியாமீன் -

ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினமாகும். மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படும் முதியோர்களை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நோக்கி அவர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஆண்டுதோறும் ஒக்ரோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. 1990 ஆம் ஆண்டு டிசெம்பர் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் கொண்டு வரப்பட்ட பிரிவு 45/106 தீர்மானத்திற்கமையவே இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி முதன் முதலாக 1991 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டுகளும் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகெங்கும் வாழும் முதியோர்களின் நலன் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதும் அவர்களுக்கென ஒரு சமூக கட்டமைப்பை உருவாக்குவதுமே இந்த நாளின் பிரதான நோக்கமாகும். ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகள் இத்தினத்தை தேசிய விடுமுறை தினமாகவும், ஜப்பானில் மூத்தோருக்கு கௌரவம் செலுத்தும் தினமாகவும் இது அனுட்டிக்கப்படுகின்றது.

> மாதா, பிதா, குரு, தெய்வம்...! இன்று வாய்ச் சொல்லில் மட்டுமே..?

இவ்விடத்தில் முதுமை என்றால் என்ன என்பதைப் பற்றி சிந்தித்தல் வேண்டும். பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டோர் முதியோர் என வரையறுக்கப்பட்டாலும்கூட, முதுமை என்பது ஒரு நபரின் பிறப்பி லிருந்து தொடங்குகின்றது என்பர். ஒரு குழந்தை வளர்ந்து பெரிதாகும் ஒவ்வொரு காலகட்டத் திலும் முதுமை நிகழ்வு ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. முதுமையும் இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்க முடியாத நிலையாகும். முதுமையின் போது ஏற்படும் நிகழ்வுகளை விஞ்ஞான ரீதியில் எடுத்து நோக்குமிடத்து மூளை மற்றும் நரம்புமண்டல அமைப்பு முதுமையடையும் போது, மூளையின் நரம்பு மண்டல அணுக்களின் எண்ணிக்கை குறையவடையத் தொடங்குகின்றது. இழையச் சீர்கேடு, தோல் சுருக்கம், தசை எடை குறைவு, புலன் குறைபாடு, உடல் அசைவுத் தன்மைக் குறைவு, இனப்பெருக்கத் தடை, உளவியல் பாதிப்புகள் என பல்வேறு முறைகளில் உடலியல் தொழிற்பாடு பாதிக்கப்படுவதனால் வயதானவர்களின் நடவடிக்கைகளில் வேகம் குறைந்து காணப்படுகின்றது.



ஞாபகசக்தி குறைவு, புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதிலும் குறைவான வேகத்துடனேயே காணப்படுவர். 60 வயதிற்கு மேல் முதுகுத்தண்டில் உள்ள அணுக்கள் குறைய ஆரம்பிப்பதால் அவர்களின் உணர்வு சக்தி குறையத் தொடங்குகின்றது.

முதுமையடையும் பொழுது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியும் மெதுவாக குறைய ஆரம்பிக்கின்றது, இது பல நோய்த்தொற்றுகளுக்கு, குறிப்பாக இதய நோய், பக்கவாதம், மூட்டுவலி, புற்று நோய், நீரிழிவு நோய் போன்றவை பெரிதும் முதுமைப்படுதலின் காரணமாகவே ஏற்படுகின்றன. வாழ்நாள் எதிர்பார்ப்பு என்பது ஓர் உயிரினத்தின் சராசரி வாழும்காலத்தைக் குறிக்கும். சத்துணவு, நலவாழ்வு, மருத்துவம் ஆகிவற்றிலேயே வாழ்நாள் எதிர்பார்ப்பு பெரும்பாலும் தங்கி இருக்கிறது. சுமுக அரசியல் சூழலும் பொருளாதார வளர்ச்சியும் வாழ்நாள் எதிர்பார்ப்பைக் கூட்டும் காரணிகளை ஏதுவாக்கத் தேவை.

> ஞாபகசக்தி குறைவு, புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதிலும் குறைவான வேகத்துடனேயே காணப்படுவர். 60 வயதிற்கு மேல் முதுகுத்தண்டில் உள்ள அணுக்கள் குறைய ஆரம்பிப்பதால் அவர்களின் உணர்வு சக்தி குறையத் தொடங்குகின்றது.

இத்தகைய சூழலைப் பொறுத்து ஒரு மனிதனுக்கு சராசரி ஆயுட்காலம் 81 வருடங்களாக கணிப்பிடப் பட்டுள்ளது. நாட்டுக்கு நாடு இந்த கணிப்பீடு வேறுபடலாம். பதியப்பட்ட மனித வரலாற்றில் யாரும் 123 வயதுக்கு மேல் இருந்த தாக ஆதாரம் இல்லை. மிகக் குறை வான எண்ணிக்கையிலான மனிதர் களே 100 வயதுக்கு மேலே வாழக் கூடியதாக இருக்கின்றது. மனிதனின் சராசரி வாழ்நாள் கூடி வந்திருப்பினும், மிக கூடிய வாழ்நாளின் அளவு கூடவில்லை. இதற்கு உயிரியல் அடிப்படையிலான எல்லைகள் இருக்கலாம். இருப்பினும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இந்த எல்லை நீடிக்கப்படக் கூடியதே.

முதுமை தொடர்பாக பல கோட்பாடுகள் காணப்படுகின்றன. மனிதரின் படிவளர்ச்சியை பேணவே மனிதர் முதுமை பெற்று இறக்கின்றனர் என்பதே படிவளர்ச்சிக் கோட்பாட்டின் (Evolutionary Theory) சாரம். காலம் செல்லச் செல்ல ஒரு உயிரினத்துக்கு இயற்கையால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல் கூடுகின்றது. எடுத்துக்காட்டாக உயிரினம் விபத்துக் குள்ளாகும் வாய்ப்பு கூடுகின்றது. உயிர் உற்பத்தித் திறன் இளவயதிலேயே வீரியமாக இருக்கிறது. ஆனால் நாள்கள் செல்லச் செல்ல உடல் வலு இழந்து போகின்றது.

மேலும், யாரும் இறக்காவிட்டால், உயிரினங்களின் தொகைகூடி பெரும் அழிவுக்கு இட்டுச் செல்லலாம். மாறிவரும் சூழலுக்கு முதிய உயிரினங்கள் தாக்குப்பிடிப்பது கடினமாக இருக்கும். முதிய உயிரினங்களே இருந்தால் அவற்றின் குடிவழிகளே மக்கள் தொகையில் கூடுதலாக இருக்கும். இது இனப் பெருக்கத்துக்கும் படிவளர்ச்சிக்கும் உகந்தது அல்ல.

மரபணு முதுமைக்கோட்பாட்டின்படி (The Genetic Theory of Aging) மரபணுக்களாலேயே வாழ்நாள் பெரிதும் முடிவாவதாக மரபணுக் கோட்பாடு கூறுகிறது. அதாவது, பிறக்கும் போதே ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் மரபணுக்களைக் கொண்டு வாழ்நாள் முடிவாகிறது என்பது அடிப்படையாகும். பெற்றோர்கள் நீண்ட வாழ்நாளைக் கொண்டால் பிள்ளைகளும் நீண்டகாலம் வாழ்வதை அவதானிக்க முடியும். மேலும் இரட்டை மனிதர்களின் வாழ்நாள் உடன் பிறந்தவர்களை விட ஒரே கால அளவைக் கொண்டதாக இருக்கும்.





# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

307

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா


**அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய குற்றங்கள் மற்றும் ஆத்திரமூட்டல்களை ஐக்கிய நாடுகள் சபை, கையாள்வதில் பின்னடிப்பதாக குட்ரெஸ் அக்கறையோடு வாய்ச்சவடால் பேசுகிறார்**

முன்பினும் அதிக பொறுப்பற்ற அமெரிக்க ஆத்திரமூட்டல் கொள்கையை மேற்பார்வையிட்டு வருகின்ற ரொனால்ட் ட்ரம்பையும் பதவியிலிருக்கும் மற்றும் ஓய்வூபெற்ற தளபதிகளின் சதிக்கூட்டத்தையும் பெயரிட்டு குறிப்பிடாமல், அவர்களை குறிப்பிடுகையில் அந்த எச்சரிக்கையில் குட்ரெஸ், மோதல் தன்மையிலான வீராவேச பேச்சுக்கள் எதிர்பாரா விளைவுகளுக்கு இட்டுச்செல்லக்கூடும். தீர்வு அரசியல் ரீதியாக இருக்க வேண்டும். - என்றார். அவர் தொடர்ந்து கூறுகையில், இராணுவ நடவடிக்கையால் ஏற்படக் கூடிய விளைவுகள் மிகவும் பயங்கரமானவை, என்றார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய குற்றங்கள் மற்றும் ஆத்திரமூட்டல்களை ஐக்கிய நாடுகள் சபை, கையாள்வதில் பின்னடிப்பதாக குட்ரெஸ் அக்கறையோடு வாய்ச்சவடால் பேசுகிறார் என்றாலும், அவரது கருத்துக்களின் முக்கியத்துவம் தவறுக்குஇடமற்றது. வடகொரியாவுக்கு எதிராக ''தாக்கும் திறனை முன் கூட்டித்தாக்கும் போர்'' (Preventive War) எனப்படுவதை தொடங்க, வொஷிங்டனில் இருந்து வரும் ஆத்திரமூட்டும் அச்சுறுத்தல் களின் ''எதிர்பாரா விளைவுகள்'', ஓர் உலகளாவிய போராக தீவிரமடையும், ஓர் இராணுவ மோதலாக நிரூபணமாகி விட சாத்தியமுள்ளது.

**ஐக்கிய நாடுகள் சபையின் ஸ்தாபக சாசனத்தின் முதல் வாக்கியமே, போர் தொல்லைகளில் இருந்து வரவிருக்கும் தலைமுறைகளைக் காப்பாற்றுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும், அது, நமது வாழ்நாளில் இரண்டுமுறை, கூறவியலாத துயரத்தை மனித இனத்திற்கு கொண்டு வந்துள்ளது, என்கிறது**

ஐக்கிய நாடுகள் சபையின் ஸ்தாபக சாசனத்தின் முதல் வாக்கியமே, போர் தொல்லைகளில் இருந்து வரவிருக்கும் தலைமுறைகளைக் காப்பாற்றுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும், அது, நமது வாழ்நாளில் இரண்டு முறை, கூறவியலாத துயரத்தை மனித இனத்திற்கு கொண்டு வந்துள்ளது என்கிறது. முதலாம் உலகப்போர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் மனித இனப்படுகொலைகளை விஞ்சிய அளவிற்கு மூன்றாம்முறையாக அதுபோன்றவொரு





''கூறவியலாத துயரத்தை'' மனித இனம் முகங்கொடுத்திருகின்றது என அந்த அமைப்பின் தலைவர் எச்சரிக்கிறார் என்பது ஏதோ சிறிய பொதுநலன் சார்ந்த விடயமல்ல என்பதை ஒருவர் சிந்திக்கலாம்.

குட்ரெஸின் கருத்துக்கள் தனித்த கருத்துக்கள் இல்லை. கடந்த மாதம் ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் சிக்மார் காப்ரியேல் அமெரிக்காவிற்கும் வடகொரியாவுக்கும் இடையிலான விட்டுக்கொடுப்பற்ற நிலையை முதலாம் உலக போருக்குள் ஐரோப்பா இறங்கியதுடன் ஒப்பிட்டார். அவர் கூறுகையில், ''முதலாம் உலக போரைப் போலவே, நாம் தூக்கத்தில் நடப்பவர்களைப் போல போருக்குள் செல்வோம். இந்த முறை ஒருவேளை அது ஓர் அணுஆயுத போராக இருக்கலாம்'', என்பது தான் அபாயம் என்றார்.

இதேபோல, இந்தாண்டு ஜனவரி வரை அமெரிக்க தேசிய உளவுத்துறை இயக்குனராக இருந்த ஜேம்ஸ் கிளாப்பர், கடந்த மாதம் ஒரு தொலைக்காட்சி பேட்டியில் குறிப்பிடுகையில், கொரிய தீபகற்பத்தின் நிலைமை ''ஏதோவிதத்தில் எனக்கு முதலாம் உலகப்போர் வரலாற்றையும், அதற்குள் உலகம் எவ்வாறு மடத்தனமாக இருந்தது என்பதையும் நினைவூட்டுகிறது. இங்கே வரலாற்றிலிருந்து மக்கள் கற்றுக் கொள்வார்களென நான் நம்புகிறேன், மீண்டும் அதை செய்யாதீர்கள்'' - என்றார்.

**குடியரசுக் கட்சி அல்லது ஜனநாயகக் கட்சி ஆகட்டும் அவற்றில் உள்ள எந்தவொரு முக்கிய பிரமுகரும், வடகொரியா சம்பந்தமாக ட்ரம்ப் நிர்வாகம் பின்பற்றி வரும் ஆழ்ந்த அபாயகரமான ஆத்திரமூட்டும் போக்கைக் குறித்து எச்சரிக்கவும் இல்லை அல்லது ஒரு விவாதத்திற்கு அழைப்புவிட்டதும் கிடையாது**

ஆனால், இந்த கூர்மையான எச்சரிக்கைகள் எல்லாம் பெரிதும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாக உள்ளன. அங்கே அமெரிக்க பெருநிறுவன ஊடகங்களில், அணுஆயுத போர் அச்சுறுத்தல் குறித்தும் அமெரிக்க மற்றும் ஒட்டுமொத்த உலக மக்கள் மீதான அதன் பாதிப்புகள் குறித்தும் கவலை கொண்ட எந்த அறிவிப்புகளோ அல்லது ஆழ்ந்த கருத்துரைகளோ வருவதில்லை. குடியரசுக் கட்சி அல்லது ஜனநாயகக் கட்சி ஆகட்டும் அவற்றில் உள்ள எந்தவொரு முக்கிய பிரமுகரும், வடகொரியா சம்பந்தமாக ட்ரம்ப் நிர்வாகம் பின்பற்றி வரும் ஆழ்ந்த அபாயகரமான ஆத்திரமூட்டும் போக்கைக் குறித்து எச்சரிக்கவும் இல்லை அல்லது ஒரு விவாதத்திற்கு அழைப்புவிட்டதும் கிடையாது.

ஜனநாயகக் கட்சியின் சுற்றுவட்டத்தில் உள்ள போலி - இடதின் பல்வேறு அமைப்புகள் மற்றும் பிரசுரங்கள், போர் அபாயம் மீது இறுக்கமான மௌனத்தைப் பேணுகின்றன. இதற்கு எதிராக தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் ஓர் இயக்கத்தை ஒழுங்கமைத்து போராடவில்லை என்றாலும், அமெரிக்க மக்கள் மீதுள்ள இந்த அச்சுறுத்தலை அம்பலப்படுத்துவதிலும் கூட அவர்களில் யாருக்கும் எந்த ஆர்வமும் கிடையாது.



**''வட கொரியாவில் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மலைப்பூட்டும் அளவிற்கு இருக்கும், என்றவர் எழுதுகிறார். ஒவ்வொரு நாள் மோதலிலும் நம்மால் வடக்கில் 20,000 பேர் காயப்படுவார்களென மதிப்பிடப்படுகிறது. அதேநேரத்தில், அவர் எழுதுகிறார், முதல் ஒருசில நாள்களில் வடகொரியா சியோலில் மட்டும் நாளொன்றுக்கு 20,000 பேரைக் காயப்படுத்தும்'' என்றும் மதிப்பிடப்படுகிறது.**

என்ன தயாரிப்புச் செய்யப்பட்டு வருகிறதோ அதன் கொடூரமான யதார்த்தம், இராணுவ சிந்தனை குழாம்கள் மற்றும் அதன் பிரசுரங்களில் தான் மிகவும் வெளிப்படையாக விவாதிக்கப்பட்டு வருகிறது. கொரியாவில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கான முப்படைகளது தலைமை தளபதியின் துணை உதவியாளராக சேவையாற்றிய ஒரு முன்னாள் விமானப்படைத் தளபதி ரோப் கிவன்ஸ் (Rob Givens) எழுதிய அதுபோன்றவொரு கட்டுரையில், ஒருசமயம் கற்பனையும் செய்து பார்க்கவியலாததாக இருந்த கொரிய தீபகற்ப போர் ''அதிக சாத்தியக்கூறாக மாறி வருகிறது'' என்று எச்சரித்தார்.

அவர் எழுதுகிறார், அதுபோன்றவொரு மோதல் ஏற்பட்டால் ''உலகெங்கிலும் இருந்து அமெரிக்க குண்டு வீசிகள்'' கொண்டு வரப்படும், அவற்றைக் கொண்டு'' வடகொரியாவின் ஒவ்வொரு சதுர அடியும் தாக்குதலுக்கான விரிவெல்லையில் வைக்கப்படும்.''

**பெரிய அளவிலான மனித உயிரிழப்புகளைத் ''தவிர்க்க முடியாது'' என்றவர் எச்சரிக்கிறார்**

வடகொரியாவில் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மலைப்பூட்டும் அளவிற்கு இருக்கும், என்றவர் எழுதுகிறார். ஒவ்வொரு நாள் மோதலிலும் நம்மால் வடக்கில் 20,000 பேர் காயப்படுவார்களென மதிப்பிடப்படுகிறது. அதேநேரத்தில், அவர் எழுதுகிறார், முதல் ஒருசில நாள்களில் வடகொரியா சியோலில் மட்டும் நாளொன்றுக்கு 20 ஆயிரம் பேரைக் காயப்படுத்தும்'' என்றும் மதிப்பிடப்படுகிறது.

பெரிய அளவிலான மனித உயிரிழப்புகளைத் ''தவிர்க்க முடியாது'' என்றும் அவர் எச்சரிக்கிறார்.



(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



112




## அத்தியாயம் - VII

## பெண் போராளிகள்

முக்கிய பெண் தளபதிகள் எமது வீட்டுக்கு வருகை தந்து போராட்ட வரலாறு பற்றி என்னுடன் கலந்துரையாடினர். பல சமயங்களில் நான் பெண் போராளிகளிடமிருந்து செவ்வி எடுக்கும்போது, அவர்களது சொந்தப் போர் அனுபவங்களை அவர்களது வாயால் கேட்கும் போது மெய்சிலிர்க்கும். மாவீரர் ஆகிவிட்ட தமது தோழிகளின் வீரம் செறிந்த வரலாறுகளை விவரிக்கும் போதெல்லாம் தாழ்ந்த குரலில் தன்னடக்கமாகவும் மரியாதையுடனும் கதைப்பார்கள். சிலர் தமது சொந்தப் போர்ச் சாதனைகளைக் கூறும்போது உணர்ச்சிவசப்படுவார்கள். சில சிக்கலான நிகழ்வுகளை சிலர் நடித்துக் காட்டியும் விளக்குவார்கள். ஆழதான அதிர்ச்சியூட்டும் அனுபவங்களை சொற்களில் வடிக்க முடியாது திண்டாடுபவர்களும் உண்டு. போர்க்கள வெற்றிகள் பற்றிச் சொல்லும்போது எல்லோருமே நெஞ்சை நிமிர்த்தியபடி பெருமிதத்துடன் பேசுவார்கள்.

களமாடிக் கொண்டிருக்கும் தமது சக போராளிகளுக்கு அவசியமாகத் தேவைப்படும் ரவைகள் வெடிபொருள்களைக் காவியபடி, இருபுறத்திலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தபடி இருந்தபோதும், துணிந்து சாவுக்கு பயப்படாது களமுனைக்குச் சென்ற சம்பவங்களை சில பெண் போராளிகள் விவரித்தார்கள். தாம் பசி கிடந்தபடி, போர் முனையில் நின்ற தமது சக போராளிகளுக்கு நேரம் தவறாது, கிரமமாக உணவுப் பொட்டலங்களை எடுத்துச்செல்லும் தன்னலமற்ற சேவை பற்றியும் சில பெண் போராளிகள் எடுத்துச் சொன்னார்கள். கள முனைகளில் காயமுற்றோருக்கு அவசர சிகிச்சை அளித்து, உயிராபத்தையும் பொருட்படுத்தாது அவர்களைச் சுமந்து செல்லும் பெண் மருத்துவப் போராளிகளின் துணிச்சலான சாதனைகள் பற்றியும் சிலர் விவரித்தார்கள். சிங்கள ஆயுதப் படைகளின் திடீர் சுற்றிவளைப்புக்களை உடைத்துச் சென்ற வியப்பூட்டும் சம்பவங்கள் பற்றியும் சொன்னார்கள்.

சில பெண் போராளிகள் தமது மரணம் பற்றி முன்னுணர்ந்து சொன்னதையும், பின்னர் அது அவ்வாறே நிகழ்ந்ததாகவும் எனக்குச் சிலர் விசித்திரமான சம்பவங்களைக் கூறினார்கள். இப்படியான பல வியப்பூட்டும் சம்பவங்களை, வீரம் செறிந்த தனி மனித வரலாறுகளை, அலாதியான அர்ப்பணிப்புக்களை இந்தப் பெண் போராளிகளிடமிருந்து கேட்டபோது நான் மலைத்துப் போனேன். அவர்கள் மத்தியில் பிரசன்னமாக இருப்பதே எனக்குப் பெருமிதமாக இருந்தது. அவர்கள் கூறிய சம்பவங்களையும், வரலாற்று நிகழ்வுகளையும் அவர்களது ஒட்டு மொத்தமான போர் அனுபவங்களையும் தொகுத்துப் பார்த்த போது தான் அவர்களது இலட்சியப் பற்றுறுதியையும், அர்ப்பணிப்பின் ஆழத்தையும் புரிந்து கொள்ள முடிந்தது. இந்தப் புரிந்துணர்வு ஏற்பட்ட காரணத்தினாலேயே பெண் போராளிகள் பற்றிய விடயம் தெரியாது கண்டன விமர்சனங்களை எழுதுபவர்கள் மீது எனக்குக் கடும் சினம் ஏற்படுவதுண்டு. *விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்* என்ற எனது ஆங்கில நூல் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகியது. பின்னர் விடுதலைப் புலிகளின் அனைத்துலக செயலகம் இந்த நூலை லண்டனிலும் பரிஸிலும் வெளியிட்டது. விடுதலைப் புலிகளின் மகளிர் கட்டமைப்பின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி பற்றிய வரலாற்றுப் பதிவாகவே இந்த நூல் அமைகிறது. தமிழீழ விடுதலைப் போரில் பெண் போராளிகள் பங்கு கொண்ட சமர்களையும் அவர்களது சாதனைகளையும் இந்த நூல் விவரிக்கின்றது. 1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், மன்னாரில் நிகழ்ந்த சமரில் முதற்தடவையாக போராட்டக் களத்திற்கு அறிமுகமாகியதில் இருந்து 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பலாலி இராணுவத் தளம் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் பங்குகொண்டதுவரை, விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளது ஆறாண்டு கால ஆயுதப் போராட்ட வரலாற்றை இந்த நூல் சித்திரித்துக் காட்டுகின்றது. காட்டுப்புற கெரில்லாப் போர் முறையிலிருந்து, மரபு வழிப் போர் வரை பல்வகையான போர் அனுபவங்கள் ஊடாக மகளிர் படையணியில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றியும் முன்னேற்றம் பற்றியும் இந்த வரலாற்று விவரணத்தில் விவரிக்க முயன்றுள்ளேன். பிரம்மாண்டமான இராணுவ இயந்திரமான இந்தியப் படைகளை, காட்டுப் புற, நகர்ப் புற கெரில்லாப் போர் வடிவில் முகம் கொடுத்து, புலிகளின் மகளிர் படை ஒரு வலுப் பெற்ற போராட்ட சக்தியாக உருவெடுத்ததையும் இந்த நூலில் விவரிக்கிறேன். இந்த நூலில், ஒரு பகுதி பெண் போராளிகளுக்கு வழங்கப்படும் போர்ப் பயிற்சி பற்றி விவரித்துக் கூறுகிறது. எந்தவித, ஆபத்தான போர்ச் சூழலையும் எதிர்கொண்டு நிற்க வல்ல, ஒழுங்கும் கட்டுப்பாடும் உடைய போராளிகளாக மாற்றும், மிகத்திறமையான கடுமையான பயிற்சி பெண் போராளிகளுக்கு வழங்கப்படுகிறது என்பதை இந்தப் பகுதியில் நான் எடுத்துக் கூறுகிறேன்.





வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது, தமிழீழப் பெண் சமூகம் அரசியல் விழிப்புணர்வுடன் சுயநிர்ணய உரிமைக்கான தேசியப் போராட்டத்தில் பங்குபற்றி வந்துள்ளது புலனாகும். அறுபதுகளிலும் எழுபதுகளிலும் நடைபெற்ற அஹிம்சை வழிப் போராட்டங்களில் பெண்கள் தீவிரமாக பங்கு கொண்டனர். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களது பங்களிப்பின் ஒரு விரிவாக்கமாகவே ஆயுதப் புரட்சிப் போரிலும் பெண்கள் பங்கு கொள்கின்றார்கள் என நான் எனது நூலில் வாதிடுகிறேன். ஆயுதப் போரில் பெண்களை ஈடுகொள்ளச் செய்த, அக, புற சூழல்களை இந்த நூலில் எடுத்து விளக்கும் போது, இவை 'அரச ஒடுக்குமுறையின் வரலாற்றுச் செல்நெறிகளால் உருவகித்தவை' எனச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தேசிய இனக்கட்டமைப்பில் ஓர் இணைபிரியாத அங்கமாக இருப்பதாலும், அரச ஒடுக்குமுறைக்கு நேரடியாகப் பலியாகி வருவதாலும், மக்களின் போராட்டம் என்ற ரீதியில் தமிழ்ப் பெண்கள் தாமாகவே முன்வந்து ஆயுத எதிர்ப்புப் போரில் பங்குகொள்கிறார்கள் என்றும் இந்த நூலில் நான் வாதிடுகிறேன்.

## கண்டன ஆய்வாளருக்கு ஒரு பதில்

'விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்' என்ற எனது நூல், பெண்ணியம் பற்றிய அறிவாய்வு ஆவணமாக அமையவில்லை என்பதை நூலில் முன்னுரையிலேயே நான் தெட்டத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். ''ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறான பெண்ணியப் பிரச்சினைகள் பற்றி முழுமையான ஆய்வு செய்வது இந்த நூலின் குறியிலக்குக்கு அப்பாற்பட்டது. எனினும், இந்த நூலடங்கிலும் ஆங்காங்கே ஒரு சில பெண்ணியப் பிரச்சினைகளை மேலோட்டமாகத் தொட்டிருக்கிறேன்'' என முன்னுரையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





# அப்பலோவில் 'ஜெ' யாரிடம் அந்த வீடியோ?

ஜெயலலிதா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது அப்பலோ நிர்வாகத்தின் சார்பில் எந்தவீடியோவும்எடுக்கப்படவில்லை. அவர் சிகிச்சை பெற்ற அறையிலும் சி.சி.டி.வி. கெமரா பொருத்தவில்லை என அப்போலோ மருத்துவமனையின் தலைவர் பிரதாப் ரெட்டி தெரிவித்துள்ளார். ஜெயலலிதா மறைந்து பத்து மாதங்கள் கழித்து இப்போது வீடியோ வடிவில் அவர் மரணம் குறித்த சர்ச்சை கிளம்பியுள்ளது.

ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட இரண்டு தினங்களிலே அவர் வீட்டுக்கு அனுப்பப்படுவார் என்று சொல்லப்பட்டது. அதனால் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது தொடர்பான படங்கள் குறித்த பேச்சு அப்போது எழவில்லை. ஆனால், நாள்கள் செல்லச் செல்ல ஜெயலலிதாவின்நிலைஎன்னஎன்றுபலதரப்பிலும் கேள்வி எழுந்தது.

ஆளுநர், ராகுல் காந்தி, என பலரும் மருத்துவமனைக்கு வந்தாலும் ஜெயலலிதாவைப் பார்க்க முடியாத நிலை இருந்தது. அப்போது தான் ஜெய லலிதாவின் புகைப்படத்தை யாவது வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது. ஆனால், அப்போது அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை சசிகலா குடும்பத்தினர்.

மேலும், ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரவு நேரத்தில் அப்பலோ மருத்துவமனையின் சிசிடிவி.கெமராக்களும் செயல் இழக்கச் செய்யப்பட்டன என்ற குற்றசாட்டு எழுந்தது. அதேநேரம் அ.தி.மு.கவின் செய்தித் தொடர்பாளர்கள் அனைவருமே ஜெயலலிதா உண்கிறார், உறங்கினார், இட்லி



சாப்பிட்டார் என்பதாக முரண்பாடான பேட்டிகளை அளித்துவந்தனர்.

ஜெயலலிதா மரணம் வரை நீறு பூத்த நெருப்பாக இருந்த இந்த விவகாரம் அவர் மரணத்திற்கு பிறகு உச்சத்துக்குச் சென்றது. குறிப்பாக பி.ஹெச்.பாண்டியன் செய்தியாளர்களைச் சந்தித்து இந்த விவகாரம் பற்றி வெளிப்படையாகப் பேசினார். பன்னீர் திடீர் எனசசிகலாவிற்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியபோதுதான் யாரையும் ஜெயலலிதாவைப் பார்க்கவிடவில்லை என்று கூறி அதிரவைத்தார்.

**'ஜெ' மரணம் பற்றிய விவகாரம் விஸ்வரூபம்**

அப்போதும் தமிழக அமைச்சர்கள் அமைதியாகவே இருந்தார்கள். ஆனால், பத்து மாதம் கழித்து இப்போது திண்டுக்கல் சீனிவாசன் யாருமே ஜெயலலிதாவைப் பார்க்கவில்லை. இட்லி சாப்பிடுகிறார் என்று சொன்னதெல்லாம் பொய் என்று போட்டு உடைக்க, ஜெயலலிதாவின் மரணம் பற்றிய விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

ஜெயலலிதாவின் வீடியோ தங்கரிடம் இருக்கிறது எனவும் அதை தக்கநேரத்தில் வெளியிடுவோம் என்றும் முதலில் சொன்னது திவாகரன் மகன் ஜெய்ஆனந்த். ஜெயலலிதாவின் மரணம் குறித்து சர்ச்சை வெளியான ஆரம்பத்தில் இதைத் தெரிவித்தார். பன்னீர்செல்வத்தின் புகாருக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் ஜெய் ஆன்ந்த் இந்தப் பதிலை தெரிவித்தார்.

**மீண்டும் சூடு பிடித்துள்ள சர்ச்சை!!**

அதன்பிறகு ஜெயலலிதா பற்றிய வீடியோ விவகாரம் ஓய்ந்திருந்த நிலையில், விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவிப்பு செய்த பிறகு இப்போது வில்லங்கமாகி வருகிறது.

தினகரன் ஜெயலலிதா டி.வி. பார்க்கும் காட்சியை சின்னம்மா வீடியோவாக எடுத்துள்ளார். அதை விசாரணை ஆணையத்திடம் கொடுப்போம் என்று சொல்லியுள்ளார். அதன் தொடர்ச்சியாகத்தான் இது குறித்து விளக்கம் அளிக்கும் விதமாக அப்பலோ மருத்துவமனை குழுமங்களின் தலைவர் பிரதாப் சி.ரெட்டி ஜெயலலிதா சிகிச்சை பெற்ற அறையில் சி.சி.டி.வி. கெமரா ஏதும் பொருத்தவில்லை என்று கூறியுள்ளார்.

**'ஜெ' அறைக்குள் செல்ல சசிகலாவுக்கு மட்டுமே உரிமை**

உண்மையில் ஜெயலலிதா சிகிச்சை பெற்றபோது வீடியோ எடுக்கப்பட்டதா என்ற கேள்விக்கு முழுமையான விடை இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், அப்பலோவில் ஜெயலலிதா சிகிச்சையில் இருந்தபோது அந்த அறைக்குள் சென்று வரும் உரிமை சசிகலாவிற்கு மட்டுமே இருந்தது.

ஜெயலலிதா இருந்த அறையின் அருகே இரண்டு சோபாக்கள் போடப்பட்டு இருந்தன. டீபாய் ஒன்றும் இருந்துள்ளது. சசிகலா மருத்துவமனையிலேயே இருந்த நேரத்தில் அவர் கையில் இரண்டு செல்போன்களும், ஒரு டேப்லட்டும் இருந்துள்ளன. சசிகலா அதில் ஜெயலலிதாவை வீடியோ எடுத்திருக்க வாய்ப்புகள் அதிகம்.

அதே நேரம் மருத்துமவனையில் ஜெயலலிதா சேர்க்கப்பட்டு ஒரு மாதத்தில் அவர் தோற்றத்தில் பல வேறு மாற்றங்கள் இருந்தன என்பதை அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் தரப்பிலிருந்தே சொல்லப்பட்டது.

இதுகுறித்து சசிகலாவிற்கு நெருக்கமான வட்டாரங்களில் பேசியபோது ஜெயலலிதா சிகிச்சையில் இருந்த போது சில படங்கள் எடுக்கப்பட்டன என்பது உண்மை. அவை சசிகலா குடும்பத்தில் உள்ள முக்கியமான ஒருவரிடம் உள்ளன. சசிகலாவின் ஐபோனில்தான் இந்தப் படங்கள் எடுக்கப்பட்டன என்று சொல்கிறார்கள்.

நன்றி:ஜூனியர் விகடன்

> சசிகலா மருத்துவமனையிலேயே இருந்த நேரத்தில் அவர் கையில் இரண்டு செல்போன்களும், ஒரு டேப்லட்டும் இருந்துள்ளன. சசிகலா அதில் ஜெயலலிதாவை வீடியோ எடுத்திருக்க வாய்ப்புகள் அதிகம்.





# ரேபிஸ் வைரஸ் தாக்கினால் மரணம் நிச்சயம்!

செல்லப்பிராணிகள் வளர்ப்பது பெரும்பாலானோருக்கு பிடித்தமான விஷயம். ஆனால், சிலர் நாய் என்றாலே பதறி ஓடுவார்கள். காரணம் அவற்றால் பரவிடும் ரேபிஸ். நாய் கடிக்கும், கடித்தால் நமக்கு ரேபிஸ் வந்து விடும்,அப்படியென்றால் மரணம் நிச்சயம் என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பதால் தான், இதன் உண்மை நிலைவரம் என்ன நாய்க் கடித்தால் என்ன செய்ய வேண்டும்? நம்மை எப்படி தற்காத்துக் கொள்வது?

**சிறிய நாய் :**

நாயில் குட்டி நாய், பெரிய நாய் என்றில்லை எந்த நாய் கடித்தாலும் பாதிப்பு ஒன்றுதான். ஆனால் எந்த இடத்தில் கடித்தது என்பதைப் பொறுத்து அதன் பாதிப்பும், நோய் வரும் காலமும் வேறுபடலாம். உங்களுக்கு ஒரு புண் இருந்து, அதில் வெறி நோய் உள்ள நாய் நக்கினால் கூட, நமக்கும் ரேபிஸ் வரும். அதைவிட வெறிநோய் பாதிப்புள்ள நாய் லேசாக கீறினால் கூட, அந்த வைரஸ் நம் உடலில் பரவிவிடும்.

**எங்கிருந்து வருகிறது :**

வெறிநோய் பாலூட்டிகளிடம் மட்டுமே வருகிறது. அதுவும் நகங்கள் உடைய விலங்குகளிடம் மட்டுமே வரும். ஆனால், அது அங்கிருந்து வாய்ப்புக் கிடைக்கும்போது, மனிதனிடம் பரப்பி விடுகிறது. அது மட்டுமல்ல, இந்த வியாதி ஒரு விலங்கிடமிருந்து இன்னொரு விலங்குக்கும்



பரவுகிறது.

**வைரஸ்:**

வெறி பிடித்த நாயின் கடி அல்லது எச்சில் மூலம் வருவதுதான் வெறிநோய்(Rabies). வெறிநோய் வைரஸின் பெயர் லைஸா வைரஸ் (Lyssavirus) என்பதாகும்.ரேபிஸ் என்பது ஒரு லத்தீன் வார்த்தை. இதன் பொருள், சித்த சுவாதீனமற்ற என்பதாகும். வெறி நோயினால், அளவுக்கதிகமான மூளை வீக்கம் (encephalitis) ஏற்படும். பின்னர் மூளையின் செயற்பாடுகளை மாற்றியமைத்து விடும்.

நம்மை இவ்வளவு பாடுபடுத்தும் இந்த வைரஸ் அப்படி என்ன யானை பெரிதா என்றால் இல்லவே இல்லை. ஒரு மண் துகள் அளவு கூட இருக்காது. அந்த வைரஸ் மிகவும் சிறியது. அதன் நீளம் 180 நானோ மீற்றர். அகலம் 75 நானோமீற்றர். ஒரு நானோ மீற்றர் என்பது ஒரு மீற்றரில், 100 கோடியில் ஒரு பகுதி.

**வைரஸ் செய்திடும் அட்டூழியங்கள்:**

இந்த வைரஸ் நம் உடலின் இண்டர்பெரோனுடன் (interferon) சண்டையிட்டு அதனை தோல்வியுறச் செய்கிறது. உடலின் தற்காப்புத் திறனைக் காலி செய்கிறது. மூளையின் பலவித நடவடிக்கைகளை முடக்குகிறது. அங்கிருந்து உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவுகிறது. பின் நமது உமிழ் நீர் சுரப்பிக்கும் தாவுகிறது. ஏராளமான உமிழ் நீர்கட்டுக்கடங்காமல் சுரக்கிறது. அந்த உமிழ்நீரில் எக்கச்சக்க வைரஸ் இருக்கும். அத்துடன் வாய் மற்றும் கன்னத்திலும் வைரஸ் கோடிக்கணக்கில் வழியும். எனவே நாய் கடித்து 2 நாளிலிருந்து-5 ஆண்டுகள் வரையிலும் வெளியிலேயே தெரியாமல் அடைகாத்து, இது உடலில் தங்கி, பின்னர் அறிகுறி உண்டாகி முடிவில் இறப்பு நேரிடுகிறது.

**சிகிச்சை முறை:**

பொதுவாக மனிதனுக்கு ஏற்படும் வெறிநோய் என்பது அதன் தீவிரமான அறிகுறிகள் ஏற்படும் முன், கடித்த உடனேயே அதற்கான நோய்த்தடுப்பு முறைகளை 48 மணி நேரத்துக்குள் தரவேண்டும். அப்படி நோய்த்தடுப்பு மருந்து தக்க தருணத்தில், நாய் கடித்தவுடன் கொடுத்துவிட்டால் கட்டாயம் வெறிநோயிலிருந்து தப்பித்து விடலாம். முதலில் கடிபட்ட இடத்தை சுமார் 15 நிமிட நேரம் தொடர்ந்து சோப்புத் தண்ணீர்/சோப்புத்தூள்/டிங்க்சர் அயோடின் கொண்டு தொடர்ந்து கழுவி, வெறிநோய் வைரஸைக் கொல்ல வேண்டும். நிறைய தண்ணீர் ஊற்றிக் கழுவ வேண்டும். பின்தடுப்பூசிகளைப்போடவேண்டும்.

**தடுப்பூசி:**

ஊசியை தோள்பட்டையின் டெல்டாய்ட் சதையில்(deltoid muscle) தான் போடுவார்கள். பின் ஒரு சில மணித் துளிகளுக்குள் தற்காப்புத் திறனுள்ள வெறிநோய் எதிர்ப்பானாகிய இம்முயூனோ குளோபுலின் (immune globulin) போடவேண்டும். பின் அதற்கு 4-5 தடுப்பூசியும் கடிபட்ட இடத்திற்கருகிலேயே போட வேண்டும். நமக்கு முன்பே வெறிநோய் தடுப்பூசி போட்டிருந்தால், நாய் கடித்த பின் இம்முயூனோ குளோபுலின் போட வேண்டாம். 4 தடுப்பூசி மட்டும் போதும். வெறிநோய் வராமல் இருக்க அதற்கான தடுப்பூசியும் முன்னமேயே போடலாம்.



**மரணம்:**

மனித உடம்பில் எந்த இடத்தில் நாய்க் கடித்தது என்பதைப் பொறுத்தே, அந்த வைரஸ் எத்தனை நாளில் மத்திய நரம்பு மண்டலத்தைப் போய் அடைந்து, நம் மூளையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, வைரஸ் நம் உடலை ஆட்சி செய்யத் துவங்கும் என்பது தெரியும். அதனை ஒட்டி இதன் காலம் சில மாதங்களிலிருந்து ஓராண்டு வரை இருக்கலாம். ஒரு முறை இந்த வெறிநோய் வைரஸ் மைய நரம்பு மண்டலத்திற்குள் நுழைந்து விட்டால் அவ்வளவு தான்.. ! வெறிநோயின் அறிகுறிகள் உருவாகத் துவங்கும். அதன்பின் ஓரிரு நாள்களுக்குள் அதன் சிக்கல்கள் அதிகமாகி, ஓரிரு நாள்களிலேயே இறப்பு நிகழ்ந்து விடும்.

**பத்தியம்:**

சிலர் நாய்க்கடிக்கு பத்தியம் இருந்தால் சரியாகிவிடும் என்ற மூட நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். 6 மாதத்துக்கு கோழிக்கறி, பூசணிக்காய் மற்றும் அகத்திக்கீரை சாப்பிடாமல்



இருந்தால் வெறிநாய்க்கடி சரியாகி விடும்.கடித்தஉடன்நல்லெண்ணெய், முட்டை கொடுப்பது விஷம் ஏறாமல் தடுக்கும் என்று ஏதேதோ காரணங்களைச் சொல்லி முறையான சிகிச்சை எடுக்காமல் தவிர்க்கிறார்கள். இது மிகவும் ஆபத்தானது.

**ஆரம்ப காலங்களில்:**

கிரேக்கர்கள், ரோமானியர்கள் மற்றும் பாபிலோனியர்கள் வெறிநோய் பற்றிய பதிவுகளை களிமண் பலகைகளில் பதிவு செய்து வைத்துள்ளனர். மனிதன் எப்போது நாய் வளர்க்கத் தொடங்கினானோ அப்போதே, வெறிநோய் பாதிப்பும் ஏற்பட்டிருக்க வேண்டும். மனிதனுக்குநாயுடன்தான் முதலில் பழக்கம் ஏற்பட்டிருந்தது. அதன் ஆதாரமாக, இஸ்ரேலில் ஒரு பெண்ணின் உடலுடன் ஒரு நாயும் சேர்த்து அடக்கம் செய்யப்பட்ட மம்மி கிடைத்துள்ளது. இதன் வயது சுமார் 12,000 வருடங்கள். கி.மு 800-70000களில் ஹோமர் பாதிப்பு வந்த நாய் பற்றி எழுதி உள்ளார். கி.மு 420களில் கிரேக்க தத்துவ ஞானியும் வீட்டு விலங்குகளில் வெறிநோய் வந்தது பற்றி குறிப்பிட்டுள்ளார். கி.மு. 400 இல் வாழ்ந்த அரிஸ்ரோட்டில் நாய்கள் நோயினால் பைத்தியம் பிடித்து திரிந்தன என்றும், அவை எரிச்சலோடு மற்ற விலங்குகளை கடித்தன என்றும் எழுதியுள்ளார்.

# கரட் என்று காரை கடித்த கழுதை!



அமெரிக்காவின் ஹெஸி மாநிலத்தில் மார்க்கஸ் ஜோன் என்பவர் ஒரு புல்வெளியை ஒட்டி தனது செம்மஞ்சள் நிற மெக்லாரென் ஸ்பைடர் காரை நிறுத்தியிருந்தார்.

அவரது காரின் பின்பகுதியை விட்டஸ் என்ற கழுதை கடித்து விட்டதாக மார்க்கஸ் முறைப்பாடு செய்தார்.

கரட் என நினைத்து விட்டஸ் காரைக் கடித்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கழுதையால் காருக்கு ஏற்பட்ட சேதத்துக்கு 6000 பவுண்டுகள் கோரி மார்க்கஸ் வழக்குத் தாக்கல் செய்தார்.

அதற்கு அதன் உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்ததோடு புல்வெளிக்கு அருகே 3 லட்சம் பவுண்டுகள் மதிப்பிலான காரை உரிமையாளர் நிறுத்தியிருக்கக் கூடாது என்றும், அதனால் தனது கழுதை குற்றவாளி அல்ல என்றும் வாதிட்டார்.

தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ள இந்த வழக்கின் தீர்ப்பு நாளை வெளியாகவுள்ளது.

கழுதை கடித்த அந்தச் சம்பவம் 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.



# விவாகரத்துக்கு பரீட்சை வைக்கும் நீதிமன்றம்!

கணவன், மனைவி இருவருக்கும் உடன்பாடு இல்லாவிட்டால் விவாகரத்து கிடைப்பது எளிதான காரியம் அல்ல. சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ளயிபின் மக்கள் நீதிமன்றத்தில் விவாகரத்துக்காக ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு விவாகரத்து விண்ணப்பம் வழங்கப்படுவதில்லை. நீதிபதி வாங் ஷியு இந்தத் தேர்வு முறையைக் கொண்டு வந்திருக்கிறார். தற்போது அதிக எண்ணிக்கையிலான ஜோடிகள் விவாகரத்து கேட்டு வருகிறார்கள். அவர்களுக்கு போதுமான அவகாசம் கொடுத்து, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்க எண்ணினார் வாங் ஷியு.

அதற்காகவே தேர்வு முறையை அறிமுகம் செய்துள்ளார். கணவனும் மனைவியும் தனித் தனியாகத் தேர்வு எழுத வேண்டும். 60 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியிருந்தால், அவர்களுக்கு விவாகரத்து விண்ணப்பம் வழங்கப்படுகிறது.

குறைவாக மதிப்பெண்கள் பெற்றால், அவர்கள் விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சேர்ந்து வாழ வேண்டியதுதான். இந்தத் தேர்வில் கோடிட்ட இடங்களை நிரப்புதல், குறுவினாக்கள், சிறிய கட்டுரை என்று 3 பகுதிகள் உள்ளன. குடும்ப உறுப்பினர்களின் பிறந்தநாள், பிடித்த உணவுகள், திருமண நாள், அவர்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள், இணையின் நல்ல விஷயங்கள், தீய விஷயங்கள், திருமணம், குடும்பம் என்பன குறித்து உங்களது கருத்துகள் போன்ற கேள்விகள் இடம் பெறுகின்றன.

தேர்வு எழுதியவுடன் அந்தத் தாளை வாங்கி, இருவர் முன்பும் நீதிபதி படித்துக் காட்டுவார். சரியான விஷயத்தைக் கோடிட்டுக் காட்டி, அவர்கள் ஒருவர் மீது ஒருவர் எவ்வளவு அன்பாகவும் அக்கறையாகவும் இருக்கிறார்கள் என்பதைப் புரிய வைப்பார். இதன் மூலம் நிறைய தம்பதியர் மீண்டும் சேர்ந்து வாழ முயற்சி செய்கின்றோம் எனச் சொல்லிவிடுகிறார்கள். இதையும் மீறி விவாகரத்து வேண்டும் என்பவர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன.

# ஆயிரம் பெண்களுடன் வாழ்ந்த பிளேபோய் ஹக் ஹெப்னர் மரணம்






பிளேபோய் இதழின் நிறுவுநரும், பாலியல் தொடர்பான புரட்சியை ஏற்படுத்தியவருமான ஹக் ஹெப்னர் மரணம் அடைந்து விட்டார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் வசித்து வருபவர் ஹக் ஹெப்னர். இவர் பிரபல அமெரிக்க நடிகை மர்லின் மன்றோ போன்ற பிரபலங்களின் நிர்வாணப் படங்களை தனது இதழில் வெளியிட்டு பாலியல் தொடர்பாக புரட்சியை ஏற்படுத்தியவர்.

இவர் கடந்த 1953 ஆம் ஆண்டு செக்ஸ் பற்றிய வெளிப்படையான கருத்துக்கள் அடங்கிய பத்திரிகையான பிளேபோய் இதழை தொடங்கினார்.

நடிகையான மர்லின் மன்றோவின் நிர்வாணப் போட்டோவை தனது முதல் பதிப்பிலேயே வெளியிட்டார்.

இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற நேரத்தில் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த இராணுவ வீரர்களுக்கு இந்த இதழ் சிறந்த வடிகாலாக அமைந்தது. உலக அளவில் ஆண்களால் அதிகம் வாங்கப்படும் இதழாகவும், பிளேபோய் இதழின் அட்டைப்படங்களில், தங்கள் புகைப்படம் இடம்பெறுவதை பிரபலங்கள் அப்போது மிகப்பெரும் கௌரவமாகவே கருதியதாகவும் கூறப்படுகிறது.

மேலும் ஹக் ஹெப்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுடன் பாலியல் உறவு கொண்டார் எனக் குறிப்பிட்டிருந்தார். இவருக்கு 3 மனைவிகள். அதில் கிறிஸ்டல் என்ற மனைவி உயிருடன் உள்ளார்.

இந்த நிலையில் ஹக் ஹெப்னர்(91), வயோதிபம் காரணமாக மரணமடைந்தார் என அவரது மகன் தெரிவித்துள்ளார். 1990ஆவது ஆண்டில் தற்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பிளேபோய் இதழின் அட்டைப்படத்தில் இடம்பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெண்கள் சட்டையில் இடது பக்கம் பொத்தான் வைப்பது எதற்கு?

தினமும் சட்டை போட்டுக் கொள்ளும் நாம் பெண்கள் சட்டையில் இடது பக்கமும், ஆண்கள் சட்டையில் வலது பக்கமும் ஏன் பொத்தான் (பட்டன்) வைக்கப்பட்டு இருக்கின்றது என்று யோசித்து இருக்கிறோமா? ஏன் என்று பார்ப்போம். இது இன்று நேற்று அல்ல விக்டோரியா மகாராணி காலத்தில் இருந்து தோற்றம் பெற்ற பழக்கமாகக் காணப்படு கின்றது.

விக்டோரியா மகாராணி காலத்தில் சட்டை போட்டுக் கொள்வது என்பதும், அதில் பட்டன் வைத்துக் கொள்வது என்பதெல்லாம் பேஷனாகவும், பணக்காரர்களுக்கான ஒன்றாகவும் பார்க்கப்பட்டது. அந்தக் காலத்தில் பணக்காரர்கள் மட்டுமே சட்டை போன்ற நாகரிக ஆடைகளை அணிந்து வந்தனர். அவர்களுக்கு ஆடை உடுத்தி விடுவதற்கு பணிப் பெண்கள் பணியாற்றி வந்தனர்.

பொதுவாக இந்தப் பணிப்பெண்கள் அனைவரும் வலது கைப் பழக்கம் உடையவர்கள். சட்டை மாட்டி விடும்போது, இடதுபக்கம் பட்டன் இருந்தால் இவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதால், இடது கை பக்கம் பெண்கள் சட்டையில் பட்டன் வைக்கும் பழக்கம் ஏற்பட்டது. இவ்வளவுதான். இதில் பெரிய தந்திரம் எதுவும் இல்லை.

ஆண்கள் தாங்களாகவே பட்டன் மாட்டிக் கொள்வார்கள் என்பதால், அவர்களுக்கு ஏற்ப வலது கை பக்கம் பட்டன் வைக்கப்பட்டுள்ளது. ஆக, வசதிக்கு ஏற்பத்தான் சட்டையில் பட்டன் வைக்கப்பட்டுள்ளது. இதில் எந்தப் புதினமும் இல்லை, ரகசியமுமில்லை. நாம் யோசிக்கவில்லை அவ்வளவுதான்.

# மூன்று மாத கர்ப்பத்திலும் இரத்தப்போக்கு ஏற்படலாம்!

## அச்சம் வேண்டாம்; மருத்துவரை அணுகுங்கள்

ஏழில் ஒரு கரு சிதைகிறது. 35 வயதுக்குள் கர்ப்பமடையும் பெண்களுக்கு ஐந்தில் ஒரு கரு கலைவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

பெரும்பாலானவை 6 முதல் 10 வாரங்களில் சிதைந்து போகின்றன. குறிப்பாக 25 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்குக் கருச் சிதையும் வாய்ப்புகள் அதிகம். இவர்களுக்கு பத்தில் ஒரு கரு வீதம் சிதையலாம். 35 வயதுக்கு மேலானால் ஐந்தில் ஒரு கரு கலைவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

★ கர்ப்ப காலத்தின் ஆரம்பத்தில் உதிரப் போக்கும், தசைப்பிடிப்பும் ஏற்பட்டு, அதன்பிறகு ரத்தப்போக்கு நின்ற சுமார் 50 வீதம் பெண்களுக்கு கர்ப்பம் எந்தவித சிரமமும் இல்லாமல் சாதாரணமாக இருக்கும். ஆனால், அதிக ரத்தப் போக்கும், தீவிரமான தசைப்பிடிப்பும் மாறும் சூழலில் கருச்சிதைவைத் தவிர்க்க இயலாது. இதை தவிர்க்க இயலாத கருச்சிதைவு என்பர். பரிசோதனையில் கருப்பைக் கழுத்து சிதைந்து திறக்க ஆரம்பித்திருப்பதையும், கருவானது, கருப்பைக் கழுத்தின் வெளிப்புறத் திறப்பு வழியாகத் தொங்கிக் கொண்டிருப்பதையும் மருத்துவரால் கண்டறிய இயலும். இந்த நிலையில் எந்த சிகிச்சையாலும் இத்தகைய கருச் சிதைவை தடுக்க இயலாது.

★ மூன்று மாத கர்ப்பத்தில் சில பெண்களுக்கு ரத்தப்போக்கு ஏற்படலாம். இதற்கு அச்சுறுத்தும் கருச்சிதைவு என்று பெயர். இந்த நிலையில் உதிரப்போக்கு குறைவாகவோ அல்லது மாத விலக்குக் காலத்தில் ஏற்படுவதைப் போன்றோ இருக்கும். ஒரு நாளைக்கு சில மணி நேரம் வரையிலோ அல்லது சில நாள்கள் வரையிலோ கூட உதிரப் போக்கு இருக்கலாம். இந்த நிலையைப் பார்த்து கர்ப்பம் கலைந்துவிட்டதாகப் பலர் நினைத்துக் கொள்வார்கள்.

உடனடியாக மருத்துவரை அணுகினால், இந்தப் பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதை அல்ட்ராசவுண்ட் பரிசோதனை மூலம் கண்டறிந்துவிடுவார். புறகர்ப்பம், குழந்தை சரியாக உருவாகாத நிலை போன்ற சில நிலைகளில் இத்தகைய அச்சுறுத்தும் கருச் சிதைவு உண்டாக வாய்ப்பிருக்கிறது.



பனிக்குடமானது தான் அமைந்துள்ள இடத்தைவிட்டு நகர்ந்துவிடும் நிலையில் உதிரப்போக்கு ஏற்படுவதுண்டு. இதை நஞ்சுக் கொடி முந்து நிலை அல்லது பிளசென்டா ப்ரேவியா என்கிறார்கள். தற்செயலாக உதிரப் போக்கு ஏற்படுவதை கருக்கொடை விலகல் அல்லது அப்ரப்டோ ப்ளசன்டே என்கிறார்கள். இதில் இருவகைகள் உள்ளன. கொஞ்சமாக விலகுவது மற்றும் அதிகமாக விலகுவது.

முப்பதாவது வாரங்களில் அல்ட்ரா சவுண்ட் பரிசோதனையில் பனிக்குடத்தைத் தெளிவாகப் பார்த்து பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ளலாம். இதன்மூலம் கருச்சிதைவு ஏற்படாமல் இருக்கும். ரத்த இழப்பை ஈடுகட்ட ரத்தம் செலுத்த வேண்டிய தேவையிருப்பதால் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு ரத்தம் செலுத்த வேண்டியிருக்கும்.

குழந்தை உயிரோடு இருந்தால் பிரச்சினை அதிகமாவதற்கு முன்பே பிரசவ வலியைத் தூண்டி பிரசவத்தை விரைவுப்படுத்தி குழந்தையைப் பிறக்கச் செய்துவிடலாம். இது இயல்பான பிரசவமாகவோ, சிசேரியன் பிரசவமாகவோ இருக்கக்கூடும்.

பத்தில் நான்கு பேருக்கு இயல்பான பிரசவம் நடக்கிறது. பத்தில் ஆறு பேருக்கு சிசேரியன் தேவைப்படுகிறது. மருத்துவரின் ஆலோசனையை சரியாகப் பின் பற்றினால் அச்சுறுத்தும் கருச்சிதைவைத் தடுத்துக் கொள்ளலாம்.





# பெண்கள் லெக்கிங்ஸ் வாங்கும் போது கவனிக்க வேண்டியவை

இன்றைய பெண்களுக்கு அணி வதற்கு சுலப மாகவும், வாங்குவ தற்கு சுலபமாகவும் விலை குறைவாக இருப்பதும், லெக்கிங்ஸ் இன்று மிகப் பிரபலமாக இருப்பதற்கு காரணமாகும். முதலில் கறுப்பு நிறத்தில் மட்டுமே வந்த லெக் கிங்ஸ் பின்பு பல வண்ண நிறங் களில் வரத்தொடங்கியதுடன் பல வண்ணபிரின்ட்கள் கொண்டதாகவும், சுருக்கங்கள் கொண்டதாக, ஜீன்ஸ் துணியில் ஜெக்கின்ஸா கவும் பல வடிங்களில் வந்த வண்ணம் உள்ளன.

லெக்கிங்ஸ் வாங்கும் போதும் அணியும் போதும் கவனிக்க வேண் டிய முக்கிய குறிப்புகள் வருமாறு:-

லெக்கிங்ஸின் துணி மிகவும் முக்கியம். துணியின் வகை லைக்ரா, பிவிசி, ரேயான், ஸ்பேன்டெக்ஸ் ப்ளெண்ட் வகையாக இருக்க வேண்டும். இருக்கமான குட்டையான குர்தியின் கீழ் லெக்கிங்ஸ் அணியக் கூடாது.

ப்ளெயின் லெக்கிங்ஸ் மேல் பூப்போட்ட குர்தி அணிவதே நன்றாக இருக்கும். இல்லையென்றால் ப்ளெயின் குர்திக்கு பிரிட்டட் லெக்கிங்ஸ் அணியலாம்.

அளவு சிறிதான லெக்கிங்ஸ் அணிய வேண்டாம். போடும் போது நீண்டு கொடுத்தாலும் உடலின் பாகங்களை குறிப்பாக தொடைப் பகுதியை அசிங்கமாக வெளிப்படுத்தும்.

நீளமான குர்தி அல்லது அனார் கலியுடன் மட்டுமே பருமனான பெண்கள் லெக்கிங்ஸ் அணிவது நல்லது. காலர் மற்றும் முழுக்கை குர்திக்கு லெக்கிங்ஸ் அணிவதை தவிர்த்து சுரிதார் அணியலாம்.

பட்டன் மற்றும் ஸிப் பிரச்சினை இல்லாத ஜெக்கிங்ஸ் ஜீன்ஸ் பான்ட்டிற்கு சிறந்த மாற்றாக இருக்கும்.

★

### உரையாடல் என்ற கடினமான பாதை என்றும் திறந்துள்ளது

இராணுவ வலிமையைப் பறைசாற்றும் ஆயுதங்களும் ஏவுகணைகளும் உலகில் ஒருநாளும் அமைதியைக் கொணரப்போவதில்லை. கொரிய தீபகற்பத்தில் நிலவும் ஆபத்தான சூழலை சரி செய்ய உரையாடல் என்ற கடினமான பாதை என்றும் திறந்துள்ளது என்பதை உலகத் தலைவர்கள் உணரவேண்டும் என்று கொரிய ஆயர் பேரவையின் நீதி அமைதி பணிக்குழுவின் தலைவர் ஆயர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### வடகொரிய மக்களுக்கு தென்கொரியத் திருஅவை உதவி

பட்டினியாலும் வியாதிகளாலும் துன்புறும் வடகொரிய மக்களுக்கு உதவும் வண்ணம் தென்கொரியத் திருஅவை 80 லட்சம் டொலர்கள் மதிப்புள்ள பொருள்களை உணவாகவும் மருந்தாகவும் அனுப்பியுள்ளது.தற்போதைய நெருக்கடியான சூழலில் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ள இரு கொரிய நாடுகள் ஜப்பான், அமெரிக்கா அனைத்தும் உரையாடல் வழிகளில் நம்பிக்கை இழக்கக்கூடாது என்று ஆயர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

# அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்ற அறிவிப்புக்கு யாழ். ஆயர் வரவேற்பு



அதியுச்ச அதிகாரப் பகிர்விற்கு கூட்டு அரசாங்கம் இணங்கியுள்ளதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்தை வரவேற்கிறோம். அது வெறும் வாய்மொழியில் இருக்காமல் நடைமுறையில் வரவேண்டும் என யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பிற்கான இடைக்கால அறிக்கையை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும்போது அதியுச்ச அதிகாரப்பகிர்விற்கு கூட்டு அரசாங்கம் இணங்கியுள்ளதாகக் கருத்து தெரிவித்தமை தொடர்பில் யாழ் ஆயரின்கருத்தை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் சார்பாகக் கேட்டபோதே மேற் கண்டவாறு தெரிவித்தார். யாழ் ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண் டகை தமிழ் மக்கள் தொடர்பில் நீதி யோடு கூடிய ஒரு நிரந்தர தீர்வு அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டு வர வேண்டும் எனவும் ஆயர் வலியுறுத்தி வருகிறார்.

## மட்டு. மறைமாவட்ட கத்தோலிக்க பத்திரிகை 'வெட்டாப்பு' வெள்ளி விழா காண்கிறது







மட்டக்களப்பு மறைமாவட்ட கத்தோலிக்க மாத பத்திரிகையான 'வெட்டாப்பு' பத்திரிகையின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு கடந்த 23 ஆம் திகதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

'வெட்டாப்பு' பத்திரிகையின் ஆசிரியரும் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநருமான ஏ.யேசுதாசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை கலந்து சிறப்பித்தார். 1892 இல் ஆரம்பிக்கப்பட்ட திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டமானது 1992 ஆம் ஆண்டு தனது நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கு முகமாக முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றே இந்தப் பத்திரிகையின் உதயமாகும்.

இந்தப் பத்திரிகைக்குரிய பெயரை முன்மொழிந்த ஜே.ஜோசப்மேரி யே.ச. அடிகளார், பத்திரிகையின் முதலாவது ஆசிரியர் கலாநிதி டொமினிக் சாமிநாதன் அடிகளார் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை உரையாற்றும் போது வீட்டுக்கொரு விவிலியம் போன்று வீட்டுக்கொரு வெட்டாப்பு என்பதை விருது வாக்காகக் கொண்டு இலட்சியத்துடன் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

## உண்மையின் எண்ணங்கள்

வரலாற்றில் முதற் தடவையாக யாழ் மறைமாவட்ட குருக்களின் நடிப்பில் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட கலை, கலாசார பண்பாட்டுக்குழுவின் தயாரிப்பில் 'மறைகாத்த மாதவன்' நாட்டுக்கூத்து மேடையேறிவருகிறது என்ற செய்தி சிறப்பு முக்கியத்துவத்துடன் பதியப்பட வேண்டிய செய்தியாகும். யாழ்.மறைமாவட்ட கலை, கலாசார பண்பாட்டுக்குழுவின் தலைவர் ஜெறோ செல்வநாயகம் அடிகளாருடன் பங்கு பற்றி சிறப்புச் செய்த குருக்கள் அனைவருமே பாராட்டப்பட வேண்டியவர்கள். யாழ் மறை மாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் தமது வயது - நிலை - பாரம் பரியம் - வேலைப்பளு - எதிர்பார்ப்பு என்பன எல்லாவற்றையும் தாண்டி சாதனை படைத்திருக்கிறார்கள். இவர்களின் நடிப்பின் திறமையையும் படைப்பின் தன்மையையும் பார்த்து ரசித்த பங்கு மக்கள் பலர் ஏன் இது பற்றி இன்னும் செய்தி வெளியிடவில்லை என்று கேட் டுள்ளனர் என்பது இங்கு பதிப்பட வேண்டியதாகும். யாழ். மறைமாவட்ட குருக்களின் நடிப்பில் ஏற்கனவே சக்கோட்டை, குருநகர், இளவாலை, யாழ். பேராலயம், சில்லாலை, ஊர்காவற்றுறை, முழங்காவில், இரணைப்பாலை, நெடுந்தீவு ஆகிய இடங்களில் மேடையேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மணியந்தோட்டத்தில் 'மறைகாத்த மாதவன்'

### குருக்களின் நடிப்பில் நாட்டுக்கூத்து



புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட கலை, கலாசார பண்பாட்டுக்குழுவின் தயாரிப்பில் வரலாற்றில் முதற் தடவையாக யாழ் மறைமாவட்ட குருக்களின் நடிப்பில் மணியந்தோட்டத்தில் மேடையேறுகிறது மறை காத்த மாதவன் நாட்டுக்கூத்து. பாசையூர் அண்ணாவியார் கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் அவர்களின் எழுத்துருவாக்கத்தில் யாழ் மறைமாவட்ட குருக்களின் நடிப்பில் ஏற்கனவே சக்கோட்டை, குருநகர், இளவாலை, யாழ். பேராலயம், சில்லாலை, ஊர்காவற்றுறை, முழங்காவில், இரணைப்பாலை, நெடுந்தீவு ஆகிய இடங்களில் இந்த நாட்டுக்கூத்து மேடையேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆயர், குருக்கள், மக்களையும் யாழில் சந்தித்தார் இமானுவேல் அடிகளார்

யாழ் மறைமாவட்ட மூத்த குருக்களில் ஒருவரும் முன்னாள் யாழ் மறைமாவட்ட குருமுதல்வரும் ஜேர்மனியில் கடந்த 20 ஆண்டுகளாக பணியாற்றி வருபவருமான எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் யாழ் மறைமாவட்டதிற்கு வந்து ஆயரையும் குருக்களையும் மக்களையும் சந்தித்துத் தமது பழைய நினைவுகளையும் அனுபவங்களையும் புதிப்பித்துக் கொண்டார்.



உலகத்தமிழர் பேரவையின் தலைவராக தற்போது பணியாற்றும் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் குருக்கள் அவையில் பேசும்போது ''எனது மறை மாவட்டத்திற்கு ஓர் அப்பப்பாவாக எனது பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பார்க்க வந்திருக்கிறேன்'' (தன் சகோதரக் குருக்களை குறிப்பிடுகிறார்) என்றார்.

காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு கருத்து தெரிவிக்கும் போது எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் யாழ்ப்பாண மறைமாவட்டம் எனது மறைமாவட்டம். இங்கு வந்து பணியாற்ற விரும்புகிறேன்.

ஊடகங்கள் எப்போதும் விடயங்களை துல்லியமாக - நடுநிலையாக - பக்கம் சாராமல் அறிக்கையிட வேண்டும். யாரையும் மிகைப்படுத்தி அறிக்கையிட வேண்டும் என்ற தேவை ஊடகத்திற்கு இருக்கக்கூடாது ஆனால் ஒருபோதுமே தவறாக அறிக்கையிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.- என்றார்.

# நடுத்தெருவில் செத்துப்போவதா? அல்லது ஆயுதம் ஏந்துவதா?

## ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.

மழை பெய்து ஓய்ந்திருந்த சந்தியடியில், வழக்கம்போன்று ஊர் வம்பளக்க ஏரம்பர், வாத்தியார், ஜீவன், ரூபன், பேப்பர்தம்பி மற்றும் கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் கூடியிருந்தனர்.

அப்போது வாத்தியார் கையிலிருந்த காகிதத்தின் மீது கண்களைச் செலுத்தியபடியே *''எம்.ஜி.ஆர். அரசியலில் இறங்கிய நேரம். அவரது ரசிகர்களை இலக்கு வைத்து ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தாக்குதல்களை நடத்தி வந்தனர். பொலிஸாரும் கண்டு கொள்ளவில்லை.அதனால் தனது ரசிகர்கள் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ள கத்தி வைத்திருக்கச் சொன்னார் எம்.ஜி.ஆர். அதுபோன்ற நிலைமை இங்கேயும் வருமோ என்ற அச்சத்தை இந்த மின்னஞ்சல் ஏற்படுத்துகிறது''* என்று சொல்லிக் கையிலிருந்த பிரதியைத் தூக்கிக் காட்டினார்.

*''விசயத்தை விளக்கமாகச் சொன்னால்தானே தெரியும்''* என்றார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கினார் வாத்தியார்.

*''ஒரு யுவதி எங்களுக்கு இந்த மின்னஞ்சலை அனுப்பியிருக்கிறா. அந்த யுவதியின் தந்தை பின்னேரம் நான்கு மணிபோல சனநடமாட்டம் குறைந்த வீதியாலை மோட்டார் சைக்கிளிலை போயிருக்கிறார்.வீதியோரமாக ஒருவன் சைக்கிளிலும். மற்றவன் அவன் அருகே கொட்டனோடையும் நிண்டவங்களாம். அவங்களுக்கு 22 அல்லது 23 வயசு தானாம் இருக்கும்.அதிலை கொட்டன் காரன் குறுக்க நின்று மறிக்க, இவர் நிப்பாட்டிப் போட்டார். அவன் 'சைட்..சைட்..' என்று பொலிஸ்காரன் மாதிரி ஓரத்துக்கு வரச் சொல்லியிருக்கிறான். இவர் 'ஏன்?'என்று கேட்க 'விசாரிக்க வேணும்.விசாரிச்சுப் போட்டு விடுறம்'என்று சொல்லி கொட்டனை ஓங்கினானாம். இவர் சைக்கிளில் நின்ற பொடியனைப் பார்த்து 'தம்பி எனக்கு உங்கடை அப்பாவின் வயசு. கஷ்டப்படுத்தாமல் விடுங்கோ' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே 'சடார்' என்று தலையிலை கொட்டனாலை மற்றவன் அடிச்சுப் போட்டான்.நல்லவேளை தலைக்கவசத்தை அவர் கழட்டாத படியால் அடி அதிலை விழுந்தது. இல்லாட்டி அவர் அந்த இடத்திலயே செத்துப் போயிருப்பாராம்.''*என்று வாத்தியார் சொன்னபோது, குறுக்கிட்ட ரூபன்*''வீதியாலை ஒருத்தரும் வரேல்லையாமோ''* என்று கேட்டான்.

அதற்கு வாத்தியார், *''சிலர் போனவையாம்.தங்களுக்கு ஏன் வம்பு'என்று ஒதுங்கிப் போட்டினமாம்.இரண்டாம் தரமும் அடிக்க இவர் கையைக் கொடுக்க, கையிலை பலத்த அடியாம்.நல்லவேளையாக அந்தப்பக்கத்தாலை போன வாட்டசாட்டமான ஒருத்தர் நிற்பாட்டி அவங்களை வெருட்ட, இவரின்றை மகனோடை பிரச்சினை என்று கதையை மாத்தினாங்களாம்.சைக்கிளிலை நின்றவன் அப்பதான் 'ஐயா அவனுக்கு போதை.மன்னிச்சுக் கொள்ளுங்கோ' என்று சொன்னானாம்.இவர் தப்பினால் போதும் என்று மோட் டச் சைக்கிளை எடுத்துக் கொண்டு வந்திட்டாராம்.கைக்காயத்துக்கு எக்ஸ்ரே எடுத்து மருந்து கட்டினதிலை பெரும் செலவாம்.இதை எழுதியிருக்கிற அந்தப்பிள்ளை 'இந்த ஊரிலை சாதாரண மக்களின் பாதுகாப்புக்கு உத்திரவாதமே இல்லையா?'என்று கேட்டிருக்கிறா''* என்றார்.

*''நீங்கள் வீடும் சந்தியடியும் என்று இருப்பதால் இதெல்லாம் புதுசாக இருக்கு.இப்ப வெளியிலை வெளிக்கிட்டால் விபத்து, வழிப்பறி, ரௌடிகள் இப்படி எதிலையும் சிக்காமல் வீட்டை போய்ச் சேர்ந்தால் போன பிறப்பிலை செய்த புண்ணியம் என்றெல்லே சனம் நினைக்குது''* என்று யதார்த்தத்தைச் சொன்னான் ரூபன்.

*''விபத்து தற்செயல்.ஆனால் வழிப்பறியையும் ரௌடித்தனத்தையும் பொலிஸார் தடுக்க வேணும் எல்லே''* என்று அப்பாவியாகக் கேட்டார் ஏரம்பர்.

*''அவையிட்டை பெயர், முகவரியோடை முறையிட்டால் பிடிப்பினம். அதுக்காக வழியிலை மறிச்சு அடிக்கிறவனிட்டை அடையாள அட்டையைக் காட்டச் சொல்லி நாங்கள் கேட்கேலுமே''* என்று சலித்துக் கொண்டாள் செல்லாச்சி.

*''வழிப்பறிக்காரரும் இப்ப விவரமாத்தான் இருக்கிறாங்கள்.அவங்களுக்கும் யாரை மறிக்க வேணும் என்று தெரியும். குறுக்க வந்து மறிச்ச உடனை பிடரியிலை அடிச்சுப் பதகளிக்கச் செய்து போடுவாங்கள்.பிறகு மற்றவைக்குச் சந்தேகம் வராதபடி ஓரமாக ஒதுங்குவாங்கள்.அதுக்குப் பிறகுதான் இருக்கிறதைப் பறிப்பாங்கள்.இடையிலை ஏதாவது சிக்கலாகினால் 'வெறியிலை செய்தது மாதிரிக் கதையை மாத்துவாங்கள்.அல்லது எங்களோடை பழைய பிரச்சினை என்பது போல கதை விட்டு, அப்படியே 'மன்னியுங்கோ, அது வேறை ஆள்' என்று சமாளிப்பாங்கள்''* என்று நடப்பதைச் சொன்னான் ரூபன்



அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த பேப்பர் தம்பி *''வழிப்பறியைத் தொழிலாக வைத்திருப்பவர்கள் ஒருபக்கம் என்றால் இப்போதைக்கு அடிமையானவர்கள் போதைப் பொருளுக்காக எதையும் செய்யும் நிலைக்கு வந்து விடுகிறார்கள்.அவர்கள் தான் கொலை செய்யும் அளவுக்குச் சென்று விடுகிறார்கள்''* என்றான்.

இதைக்கேட்ட ஜீவன் *''அதோடை நாலுபேர் ஒன்றாகச் சேர்ந்தால் ரௌடித் தனத்தில் இறங்கும் இளவட்டங்களும் இப்ப பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகினம்''* என்றான்.

*''இந்தத் தொலைவார் காசு நகையைப் பறிச்சுப் போட்டு விட்டால் பரவாயில்லை.அடிச்சு முறிக்கிறதும், ஆளையே கொல்லுறது மெல்லே கவலையாக இருக்கு.ஒரு வீட்டிலை கொள்ளையடிக்கப் போயிருக்கிறாங்கள். அங்கே ஒரு வயசானவர் மருந்து விழுங்கிட்டுப் படுத்திருந்திருக்கிறார்.அந்த மருந்து நித்திரை ஆக்குமாம்.கள்ளர் அவர் நடிக்கிறார் என்று நினைச்சு, கண்டபாட்டுக்கு அடிச்சுப் போட்டுக் கிடைச்சதைக் கொண்டு போயிட்டாங்கள்.. பிறகு படுகாயமடைந்த அவரைக் குணப்படுத்தப் பத்து லட்சத்துக்கும் மேல செலவாகிப் போச்சுதாம். முந்தித் தான் களவெடுக்க வந்தாலும் மன சாட்சியோடை நடக்கிறவங்கள்.இப்ப மிருகமாக எல்லே நடக்கிறாங்கள்''* என்று இயலாமையுடன் சொன்னாள் செல்லாச்சி.

*''இதைத் தடுக்கத் தெரியாமல் பொலிஸ் என்ன செய்யுது''*என்று விடாமல் கேட்டார் ஏரம்பர்.

இதைக்கேட்ட ரூபன், *''பொலிஸ்காரங்களின்றை உடம்பென்ன இரும்பே. அவங்களுக்கும் பிள்ளைகுட்டி இருக்கு தானே.தொழில் என்றுதான் இந்த வேலைக்கு வாறாங்கள். மற்ற அரசாங்க வேலை மாதிரி இதிலையும் நல்லது கெட்டது எல்லாம் இருக்கும்.ஒரு முறைப்பாடு எடுத்தால் சந்தேகநபரைத் தேடிப் போக வேணும்.அங்கு ஆபத்து வரும்.ஒரு மாதிரிப் பிடிச்சுக் கொண்டுவந்தால் நீதிமன்றத்திலை வழக்காக்க வேணும்.ஆள் பிடிபடாட்டி முடியாத வழக்காக இழுபடும். மேலதிகாரிக்குப் பதில் சொல்ல வேணும். இதனாலேயே முறைப்பாடுகளை எடுக்க பின்னடிக்கினமாம்.''*என்று உண்மையைப் போட்டுடைத்தான்.

இதற்கு ஜீவன், *''அவையும் இன்னும் கள்ளன் பொலிஸ் விளையாடிக் கொண்டு இருந்தால் போதுமே.நவீன முறைகளைப் பின்பற்ற வேணும்.அமெரிக்காவிலை 'கணிதக் காவல் முறை' என்று ஒன்றைப் பின்பற்றியினமாம்.ஒரு பகுதியில் நடக்கும் குற்றச் செயல்களைச் சேகரித்து, கணினியில் பதிகிறார்கள். பின்னர் அந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு பகுத் தாய்ந்து அடுத்த 12 மணித்தியாலங்களில் என்ன மாதிரியான குற்றம் எங்கு நடக் கும் என்று கணித்து அந்தக் குற்றங்க ளைத் தடுக்க முடிகிறதாம்.முன்னர் பொலிஸார் குற்றம் நடக்கிற இடம் பற்றிக் கணிப்பது 2.1 வீதம் சரியாக இருக்குமாம். ஆனால், இந்த முறை மூலம் 4.7 வீதம் சரியாக மதிப்பிட முடிகிறதாம்.இப்படியான நவீன முறைகளை அரசாங்கம்தான் கொண்டு வர வேணும். அதை விட்டிட்டு இன்னும் 150 வருசம் பழைமையான முறைகளையே வைச்சிருந்தால் என்னாகும்?''* என்றான்.

*''அமெரிக்காவிலிருந்து வந்த ஒருவர் சொன்னார், நகைக்கடை ஒன்றுக்குள் சிலர் நுழைந்து கொள்ளையடிக்க முயன்ற போது, கடைக் காரரும் அவரது மகனும் சேர்ந்து கொள்ளையர்களைச் சுட்டுக் கொன்று விட்டார்களாம்.அதனைத் தற் பாதுகாப்புக்காகச் செய்த கொலைகள் என்று சொல்லி நீதிமன்றம் அவர்களிருவரையும் விடுவித்து விட்டதாம்.''* என்றான் ரூபன்.

அதனைத் தலையாட்டி மறுத்த ஏரம்பர், *''அதுக்காக இங்கு அவ்வளவு சுதந்திரமும் கொடுக்க முடியாது. எங்கடை சந்தைக்குள்ளை இருக்கிற கடையில் ஒருவர் மொத்தமாகச் சாமான்கள் வாங்கினாராம்.அதில் கொஞ்சத்தை மகனிடம் கொடுத்து அனுப்பி விட்டு, எஞ்சிய கிழங்கு மூட்டையை எடுத்துச் செல்ல முயற்சித்தபோது, அவரை கிழங்கு களவெடுத்ததாகக் கூறி அங்கு நின்றவர்கள் பிடித்துக் கட்டி வைத்து அடித்து விட்டார்களாம். அவர் எத்தனையோ முறை தான் வாங்கிய கிழங்கு தான் என்று சொல்லியும் அதனை எவரும் கேட்கவில்லையாம். இந்தமாதிரி முட்டாள்தனமாகவும் சில இடங்களில் நடக்கிறது.இதுவும் ஏற்க முடியாத மிருகத்தனம்.''* என்று சொன்னார்.

*''எப்படியிருந்தாலும் பொலிஸ்காரரும் உவங்களைப் பிடிச்சு உள்ளுக்குள்ளை போடுகினம்தானே. ஆனால், வெளியிலை வந்து திருப்பியும் செய்யிறவங்களை என்ன செய்யிறது''* என்று அங்கலாய்த்தாள் செல்லாச்சி.

இதற்குப் பதில் சொன்ன பேப்பர் தம்பி *''முன்னர் சிலநாடுகளில் திருந்தாத குற்றவாளிகளைப் பிடித்து, எங்காவது கொண்டு போய் 'எண் கவுண்டர்'எனப்படும் 'பகிரங்கமற்ற கொலை' செய்து விட்டு 'பிடிக்கப் போனம்; தாக்கினான்; சுட்டம்; செத்தான்'என்று கதையை முடிப்பார்களாம்.இதற்கு மனித உரிமை ஆர்வலர்களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியதாம். அதனால் மோசமான குற்றவாளிகளைப் பிடித்து , கால்களை முறித்து விட்டு, 'தப்பித்து ஓடும் போது மாடியில் இருந்து விழுந்து விட்டான்'என்று மருத்துவமனையில் அனுமதிப்பார்களாம்.அங்கு முறிந்த எலும்புகள் சரியாக ஒட்டாதவகையில் மாவுக்கட்டுப் போடவைத்து நிரந்தரமாக ஊனமாக்கி விடுவார்களாம். இதனால் அவனால் குற்றம் செய்ய முடியாதவகையில் முடக்கி விடுவார்களாம்''* என்று கேள்விப்பட்டதைச் சொன்னான்.

*''இங்கேதான் டெங்கு பார்க்க வாற பொலிஸ்காரர் கூட ஆமிக்காரரின்றை துணையோடைதான் வருகினம்.இதிலை அவை எப்படி எங்களைப் பாதுகாக்க முடியும்.இனி மேல் கள்ளர் காடையரிட்டை நாங்கள் அடி வாங்கி, நடுத்தெருவில் செத்துக் கிடக்க வேணும்.இல்லாட்டி எங்கடை பாதுகாப்புக்கு நாங்களே ஆயுதங்களைக் கொண்டு போக வேணும் போல இருக்கு''* என்று அச்சத்துடன் சொன்னாள் செல்லாச்சி.

இதைக் கேட்ட பேப்பர்தம்பி, *''அந்தளவுக்குப் போக முடியாது செல்லாச்சி. நாங்கள் சட்டத்தை மதிக்க வேணும். ஆனால், சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றலாம்.இப்பதானே எல்லோரிட்டையும் 'ஸ்மார்ட் போன்' இருக்கு. போகும் போது அதன் கமராவை இயக்கி சேர்ட் பொக்கெட்டில்வைத்துவிட்டால்,முன்னுக்கு நடக்கிறதை படம்பிடிக்கும்.வழி மறிக்கிறவரின் முகமும் பிடிபடும். அதோடை வாகன இலக்கங்களும் விழும். பொலிஸாருக்கு குற்றவாளிகளைக் கைது செய்ய இது உதவும். வெளிநாடுகளில் வழிப் பறிக்காரரிடமிருந்து தப்புவதற்கான உத்திகளை பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறார்கள்.அது மாதிரி இங்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும்.''*என்றான்.

*''அதோடை வீதியிலை எவருக்கோ தானே பிரச்சினை என்று ஒதுங்கிப் போவதும் தவறு.கூட்டம் சேர்ந்தாலே தவறு செய்பவர்கள் தயங்குவார்கள். தட்டிக்கேட்கத்தான் முடியாவிட்டாலும் சந்தேகத்துக்கிடமானவர்களை அல்லது அடாவடிகளை அல்லது சந்தேகத்துக்கிடமான வாகன இலக்கங்களை இரகசியமாகப் படம்பிடித்து சமூக ஊடகங்களில் ஏற்றி விட்டால்கூட குற்றவாளிகளைப் பிடிக்க உதவும்.''* என்றான் ஜீவன்.

அவர்களைத் தொடர்ந்து கதைத்த பேப்பர்தம்பி, *''வீதியால் செல்லும் போது தவறான நோக்கத்துடன் எவராவது அணுகினாலோ அல்லது வழி மறித்தாலோ, உடனடியாகப் பெரும் குரலெடுத்து, காப்பாற்றச் சொல்லிக் கத்தி விட வேண்டும்.இதுவே திருடர்களை தயங்கச் செய்து விடும். வெளிநாடுகளில் மக்களை 'விசில்' எடுத்துச் செல்லும்படியும், ஆபத்தான சந்தர்ப்பங்களில் விசிலை ஊதியும், காப்பாற்றும்படி கத்தியும் உதவி கோரும்படி அறிவுறுத்தப்படுகிறதாம்.''* என்றான்.

*''இனியும் தாமதிக்காமல் இந்த விசயத்திலை அரசாங்கமும், பொலிஸ் துறையும், மக்களும் சேர்ந்து உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் சம்பளத்தை வாங்கும் எவரும் அதனை வீட்டுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலைமை வந்து விடும்''* என்று சொல்லியபடியே எழுந்து நடக்கத் தொடங்கினார் வாத்தியார்.

மற்றவர்களும் அவரைத் தொடரவே வெறிச்சோடியது சந்தியடி.

# இன்றைய சூழலில் குறைந்து வரும் பெற்றோருக்கான மதிப்பு



(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவை மரபணுக் கோட்பாட்டுக்கு ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இதைப் போன்று மேலும் பல கோட்பாடுகள் காணப்படுகின்றன.

ஐ.நாவின் கணிப்பீட்டின்படி தற்போது உலகில் ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் அறுபது அதற்கு மேற்பட்ட வயதை உடையவர்கள் காணப்படுகின்றனர். இது 2050 ஆம் ஆண்டில் 5 இற்கு ஒன்று என்ற அடிப்படையிலும் 2150 இல் 3 இற்கு ஒன்று என்ற அடிப்படையிலும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புள்ளிவிவரங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து தற்போது உலகளாவிய ரீதியாக 60 கோடி முதியவர்கள் இருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை 2050 ஆம் ஆண்டளவில் 200 கோடியாக அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது. கடந்த காலங்களில் உலக அளவில் பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் குறைந்து வருவது இதற்கு அடிப்படைக் காரணமாகக் கூறப்படுகின்றது. குழந்தை பிறப்பு வீதம் அதி கம் அதே போல் இறப்பு வீதம் அதிகம் என்ற நிலைமாறி தற்போது பிறப்பு-இறப்பு எண்ணிக்கை குறைந்திருப்பதால் நாட்டில் வயதானவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்துள்ளது.

அண்மைக்கால ஆய்வுகளின்படி கடந்த ஒரு தசாப்தத்துக்கு இடைப்பட்ட காலத்தில் முதியோர் இல்லங்களில் தமது பெற்றோரை சேர்த்து விடும் நிலை அதிகரித்து வருவதாக புள்ளி விவரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இந்த நிலையை நாம் ஆத்மார்த்த வாக்குமூலங்களாக இதயங்களில் பதிவாக்கிச் சிந்திக்க வேண்டும். நாம் பெற்றோர் ஆகும் வரை நமது பெற்றோரின் அருமை தெரியாது என்ற முன்னோர் கருத்துக்களுக்கு வலுசேர்க்கும் விதமாகவே இன்றைய காலகட்டத்தில் பெற்றோராக இருப்பவர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணி எண்ணி நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

இயந்திரமான வாழ்க்கை, மேலை நாடுகளின் கலாசார தாக்கம் போன்றவற்றின் காரணமாக பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடும் நேரங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. இதனால் தான் தற்போதெல்லாம் பிஞ்சு குழந்தைகளை மணிக்கணக்கில் பாதுகாக்க குழந்தைப் பராமரிப்பு இல்லங்களையும், ஆயாக்களையும் தேடிப்பிடிக்க வேண்டிய சூழல் உருவாகி விட்டது.

இன்று குழந்தைகளாக இருப்பவர்கள் பிற்காலத்தில் பெற்றோராக மாறும் போது தன்னை பெற்றெடுத்த தாய், தந்தையர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புவதென்பது என்னவோ தற்போது பேஷனாகி விட்டது. பணம் கட்டி விட்டால் போதும் முதியோர் இல்லங்களில் பெற்றோர் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று நம்பும் இன்றைய பிள்ளைகள், முதியோர் இல்லங்களில் தங்கள் பெற்றோர் படும் துன்பதுயரங்களை எண்ணுவதில்லை.

வளரும் வரைதான் பெற்றோர்... சொந்தக்காலில் நின்று விட்டால் யாரும் தேவையில்லை என்ற கண்ணோட்டம் இன்றைய இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் மனதில் ஆழமாகவே வேரூன்றியிருக்கிறது. ஆனால், தாமும் ஒரு காலத்தில் முதியவர்களாவோம் என்ற எண்ணத்தை மறந்துவிடுகின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை உலகளாவிய ரீதியில் ஒப்புநோக்கும் போது கூடிய முதியோர்களைக் கொண்ட நாடு என்ற பெருமை உள்ளது. 2006 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் இலங்கையில் அண்ணளவாக 22 லட்சம் மூத்த பிரஜைகள் இருக்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இக்கணிப்பீட்டின்படி இத்தொகை 2017 ஆம் ஆண்டளவில் 60 வயதுக்கு மேற்பட்டோரின் தொகை 27 லட்சமாகவும், 2031ம் ஆண்டில் 50 லட்சமாகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அப்போதைய மொத்த சனத் தொகையில் 13 சதவீதமாக இருக்கும். இலங்கையைப் பொறுத்தவரையில் முதியோர்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் இவர்கள் பெரும்பாலும் தமது பிள்ளைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

ஒரு சிலர் தமது பிள்ளைகளாலேயே முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது இலங்கையில் 48.3 சதவீதமான முதியோர்கள் தமது பிள்ளைகளின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றனர். ஓய்வூதியம் மூலம் 13.5 வீதத்தினரும் விவசாயம் மற்றும் ஏனைய தொழில்கள் மூலம் 10.3 வீதத்தினரும் தமது சொத்துகளின் வருமானம் மூலம் 7.7 வீதத்தினரும் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இலங்கையில் உள்ள முதியோர்களில் 60-70 வயதுக் கிடைப்பட்டோர் 54.4 வீதமாக உள்ளனர். 70-80 வயதுக்கிடைப் பட்டோர் 32.3 வீதமும் 80-90 வயதுக்கிடைப்பட்டோர் 10 வீதமும் 90 வயதுக்கு மேற்பட்டோர் 1.3 வீதமுமாக உள்ளனர்.

இதேவேளை இலங்கையில் அதிகரித்து வரும் முதியோர்கள் தொடர்பில் அவர்களுக்குரிய பல செயற்றிட்டங்கள் முன்வைக்கப்படல் அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் முதியோர்களை வைத்து பராமரிக்கும் அளவிற்கு இங்கு முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும் அவ்வில்லங்களுக்குரிய போதிய வருமானங்கள் நன்கொடைகள் கிடைப்பதில்லை என்ற காரணங்களாகும். பிரபல்யம் மிக்க ஆங்கில மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர் முதுமை எவ்வாறு உருவாகிறது?. அதனை வரவேற்பது எப்படி? என்பதை இவ்வாறு இயம்பினார். ஒருமனிதன் தன் வாழ் நாளில் பல பாத்திரங்களை ஏற்கிறான். முதலில் குழந்தை பிறகு மாணவன் பின்னர் விடலைப்பருவம், தொழில் வாய்ப்பை பெற்றபின் குடும்பஸ்தன் ஆகின்றான். காலசக்கரத்தின் அபரிமித சுழற்சியின் விளைவாக இறுதியில் மூக்குக்கண்ணாடி அணிந்து முகம் சுருங்கி, உடல் மெலிந்து, பல், கண்பார்வை எல்லாம் அற்ற நிலையில் கூன் விழுந்து முதுமையாகி மறைவது தான் சரித்திரம் என்றார்.

இன்றைய சமூக அமைப்பு பெரும்பாலும் கூட்டுக் குடும்ப அமைப்பிலிருந்து விலகி தன்னிச்சையாக இயங்கும் குடும்பங்களையே பெரிதும் சார்ந்துள்ளது. 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பதற்கிணங்க ஒரு சில குடும்பங்களில் உள்ள ஒரு நபரோ அல்லது குடும்பமோ புலம் பெயர்ந்து சென்று அயல் நாடுகளில் அமர்ந்தார்கள் என்றால் இதனால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் முதுமையில் காலம் தள்ளிவரும் வயதான பெற்றோர்கள்தான் என்பது சொல்லித் தெரிவதற்கில்லை.

# உலகின் நான்காவது பெரிய இராணுவம்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், தலை நகரத்திற்கு வெளியில் கதையே வேறு.2006 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின்படி வடகொரியாவில் சுமார் 25,554 கி.மீ. வீதிகள் உள்ளன, ஆனால் வெறும் 3% மட்டுமே, அதாவது சுமார் 724 km (449 மைல்) அளவு நீளம் மட்டுமே முறையாக போடப்பட்ட வீதிகள்.

**ஆயிரத்தில் 11 பேரிடமே கார்**

வட கொரிய மக்களில் ஆயிரத்தில் 11 பேர் மட்டுமே கார் வைத்திருப்பவர்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மக்கள் பயணம் செய்ய வேண்டுமானால் பொதுப் போக்குவரத்துக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ளலாம். வட கொரியாவின் பொருளாதாரம் நிலக்கரி ஏற்றுமதியையே நம்பியுள்ளது. ஆனால் வடகொரியாவில் இருந்து நிலக்கரியை வாங்கும் நாடுகளிலிருந்து கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் வடகொரியாவின் நிலக்கரி வர்த்தகத்தின் உண்மையான மதிப்பை அளவிடுவது கடினமானதே.

சீனாவிற்கு அதிக அளவிலான நிலக்கரியை ஏற்றுமதி செய்கிறது வடகொரியா. சீனாவும் 2017 பெப்ரவரியில் நிலக்கரி இறக்குமதிக்கு தடை விதித்துவிட்டது. இருந்தாலும் வடகொரியாவின் நிலக்கரி ஒதுக்கீடு செய்யும் முறை குறித்து ஆய்வாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். நிலக்கரி இறக்குமதிக்கு சீனா தடை விதித்த பிறகும் வட கொரிய கப்பல்கள் சீனத் துறைமுகங்களில் காணப்படுகின்றன என்பதை கப்பல்களை கண்காணிப்பவர்கள் கூறுகின்றனர். ''சீனா,



நிலக்கரி இறக்குமதியை குறைத்திருக்கலாம் என்று சொல்லலாம், ஆனால் முற்றிலுமாக தடை செய்யவில்லை'' என்கிறார் பீட்டர்சன் சர்வதேச பொருளாதார நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் ஆய்வாளர் கெண்ட் பாய்ட்சன்.

**வடகொரியாவை பின் தள்ளியது தென்கொரியா**

1973 ஆம் ஆண்டு வரை வட கொரியாவும் தென் கொரியாவும் செல்வத்தின் அடிப்படையில் ஒரே நிலையில் இருந்தன.பின்னர், தென் கொரியா உலகின் முன்னணி தொழில்துறை தயாரிப்பாளர்களில் ஒன்றாக முன்னேறியது. சாம்சுங் மற்றும் ஹூண்டாய் போன்றவை உலகெங்கும் வீட்டுக்குள் புழங்கும் பெயர்களாயின.

வட கொரிய அரசே அனைத்தையும் நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததால் 1980 களில் தேக்க நிலையை சந்தித்தது. மக்கள் தொகையின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய நாடுகளில் 52 ஆவது இடத்தில் இருக்கும் வட கொரியா, உலகின் நான்காவது பெரிய ராணுவத்தைப் பெற்றிருக்கிறது.

வடகொரியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதத்தை ராணுவத்துக்கு செலவிடுவதாகக் கணக்கிடப்படுகிறது, மேலும் கிட்டத்தட்ட அனைத்து வட கொரிய ஆண்களும் ஏதோ ஒரு வகை ராணுவப் பயிற்சியைப் பெற்றிருப்பார்கள். 1990 களின் பிற்பகுதியில் தொடர்ந்து ஏற்பட்ட பஞ்சங்களால் வட கொரிய மக்களின் சராசரி ஆயுள்காலம் கணிசமாக குறைந்தது. இந்தக் காரணியை கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் கூட வட கொரியா சுமார் 12 ஆண்டுகளுக்கு ஆயுள் காலத்தில் பின்தங்கியுள்ளது.வடகொரியாவில் உணவு பற்றாக்குறை தொடர்வதும், தென் கொரியர்களைவிட அவர்கள் பொதுவாகக் குறைந்தகாலம் வாழ்வதற்கான பல காரணிகளில் ஒன்று.

ஒரு தசாப்த காலமாக நாட்டின் பிறப்பு விகிதத்தை உயர்த்துவதற்கு தென் கொரியா பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், 2017 ஆம் ஆண்டில் பிறப்பு விகிதம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு குறைந்துவிட்டது. குழந்தை பெற்றுக் கொள்வதற்கு ஊக்கத் தொகை கொடுப்பது, மகப்பேறு விடுப்பை மேம்படுத்துவது மற்றும் மலட்டுத்தன்மை போக்கும் சிகிச்சைக்கு பணம் கொடுப்பது பல்வேறு விதங்களில் பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதற்காக 7 ஆயிரம் பில்லியன் அமெரிக்க டொலர் அளவு தொகையை தென்கொரியா செலவழித்துள்ளது. ஆனால், வடகொரியாவில் அதிகக் குழந்தைகள் பிறக்கின்றன. ★

# பங்களாதேஷுக்குத் தஞ்சமடையச் சென்ற அகதிகள் படகுகள் கவிழ்ந்து மூழ்கின!

டாக்கா,ஒக்.01

கலவர பூமியாக மாறிவிட்ட மியன்மாரில் இருந்து பங்களதேஷுக்கு தஞ்சமடைய ரோஹிங்கியா இனத்தவர்கள் சென்ற படகுகள் ஆற்றில் கவிழ்ந்த விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர்.



60 ரோஹிங்கியா முஸ்லிம்கள் சாவு



மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக முறைப்படி கடந்த ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சி (என்.எல்.டி.) இரு சபைகளிலும் 80 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது. ஆங் சான் சூகி அரசு ஆலோசகராக இருந்து வருகிறார்.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினேவில் சிறுபான்மை ரோஹிங்கியா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். பங்களாதேஷில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மியன்மாரில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளின்மீது கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரோஹிங்கியா போராளிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அவர்களுக்கு எதிரான இராணுவ வேட்டை தீவிரமாகி உள்ளது.

இராணுவத்தினரின் தாக்குதலால் உயிருக்கு பயந்து ரோஹிங்கியா முஸ்லிம்கள் பங்களாதேஷுக்கு தப்பிச் சென்ற வண்ணம் உள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் மற்றும் ஆற்றின் வழியாக படகில் செல்லும் பலர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்து வருகின்றனர்.

இந்த நிலையில், பங்களாதேஷுக்குத் தஞ்சமடைய ரோஹிங்கியா இனத்தவர்கள் சென்ற இரு படகுகள் நேற்று முன்தினம் ஆற்றில் கவிழ்ந்த விபத்தில் பலர் உயிரிழந்தனர்.

அவர்களில் 23 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும், காணாமற்போன 40 இற்கும் அதிகமான பிரேதங்களை மீட்கும் முயற்சியில் நீச்சல் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் பங்களாதேஷ் நாட்டு ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.

## காபூல் மசூதி அருகே குண்டுத் தாக்குதல்

### *5 பேர் சிதறிச் சாவு*



காபூல்,ஒக்.01

ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகரான காபூலில் உள்ள ஒரு மசூதியின் அருகே தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 5 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

காபுல் நகரின் மையப் பகுதியான கலா-இ- பத்துல்லா என்ற இடத்தில் ஷியா பிரிவினரின் மசூதி உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அங்கு ஜும்மாதொழுகைக்காக ஏராளமானவர்கள் திரண்டிருந்தனர். பிற்பகல் சுமார் 2 மணியளவில் மசூதியின் அருகே ஆட்டு மந்தையை ஓட்டிவந்த ஒரு மர்மநபர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை திடீரென வெடிக்கச் செய்தான்.

இந்தத் தாக்குதலில் ஐந்து பேர்உடல்சிதறி, பரிதாபமாக உயிரிழந்தனர். சுமார் 20 பேர் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுவதாகவும், இன்றைய தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை என உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


காயமடைந்து சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவித்துள்ள ஆப்கானிஸ்தான்பிரதமர்அஷ்ரப் கானி, இதுபோன்ற தாக்குதல்களால் ஆப்கானிஸ்தான் மக்களின் ஒற்றுமையை சீர்குலைத்து விட முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

## பெண்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பிடித்த ட்ரம்பின் மருமகன்

நியூயோர்க்,ஒக்.01

அமெரிக்க வாக்காளர் பட்டியலில் பெண்கள் பிரிவில் அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் மருமகன் பெயர் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்க அதிபர்ரொனால்ட் ட்ரம்ப்பின் மகள் இவாங்காவின் கணவர் ஜாரட் குஷ்னர் (32). ட்ரம்பின் மருமகனான இவர் அவரது ஆலோசகராகவும் பதவி வகிக்கின்றார்.



செல்வந்தரான இவர் ட்ரம்பின் மகள் இவாங்காவை திருமணம் செய்த பின் மிகப் பெரிய அளவில் பிரபலமானார். நியூயோர்க் வாக்காளர் பட்டியலில் இவரது பெயர் பெண்கள் பிரிவில் இடம் பெற்றுள்ளது. இது 8 ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

அதற்கான ஆவணங்கள் அமெரிக்க பத்திரிகைகளில் சமீபத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. இது முதல் முறையல்ல என்ற தகவலும் வெளியாகி உள்ளது. 2009ஆம் ஆண்டு நியூஜெர்சியில் அவர் பெயர் எந்த பிரிவிலும் இடம் பெறாமல் அடையாளம் தெரியாதவர் பட்டியலில் இடம்பெற்றிருந்தது.

இது தவிர குஷ்னர் மீது பல்வேறு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யா தலையீடு இருந்த விவகாரத்தில் இவரது பெயரும் இடம் பெற்றுள்ளது. அரசு விவகாரங்களுக்கு தனிப்பட்ட மின்னஞ்சல்களை பயன்படுத்தினார் எனவும் இவர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம்: எல்லையில் ரஷ்ய இராணுவம் குவிப்பு

வடகொரிய எல்லையில் ரஷ்ய இராணுவத்தினர் பெருமளவு குவிக்கப்படுகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளதால் கொரிய தீபகற்பத்தில் போர்ஏற்படும் சூழல் நிலவி வருகின்றது.

ரஷ்யா மற்றும் வடகொரியா இடையே அமைந்துள்ள ஹசன் பகுதியில் வழக்கத்துக்கு மாறாக பெருமளவு ரஷ்ய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமின்றி சீனா, வடகொரியா மற்றும் ரஷ்ய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் சாவோ ஜியோனாரா மலைப் பகுதியிலும் ரஷ்ய இராணுவம் கடும் ரோந்துப்பணியில் ஈடுபட்டு வருகின்றது.

வடகொரியா மற்றும் அமெரிக்கா இடையே எழுந்துள்ள போர்ச் சூழல் காரணமாக தென் கொரியாவில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவமே, ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆயுதங்களுடன் ரஷ்யா வடகொரிய எல்லையில் இராணுவத்தை குவித்து வருவது உலக அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது. அது மட்டுமின்றி வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவின் நடவடிக்கைகளை ரஷ்யா ஒருபோதும் பார்த்துக்கொண்டு வெறுமனே இருந்து விடாது எனவும் ரஷ்யாவின் முக்கிய அதிகாரி ஒருவர் அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# தற்கொலைக்கு முயன்ற தமிழக விவசாயிகள் கைது




டில்லியில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழக விவசாயிகள் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டுதற்கொலைக்கு முயன்றமையால் அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

டில்லி ஜந்தர்மந்தரில் இரண்டாவது கட்டமாக தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் நடைபெற்று வரும் இந்தப் போராட்டம் 76 நாள்களை தாண்டி நீடிக்கின்றது.

இந்த நிலையில் 76ஆவது நாளான நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழக விவசாயிகள் உடலில் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்றனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து தற்கொலைக்கு முயன்ற விவசாயிகளை பொலிஸார் கைது செய்தனர். தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வரைபோராட்டம்தொடரும்என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்தின் புதிய ஆளுநராக பன்வாரிலால் புரோஹித் தேர்வு

புதுடில்லி,ஒக்.01


தமிழகம், அசாம், மேகாலயா, பீகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை நியமித்து குடியரசுத் தலைவர் மாளிகை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தமிழக ஆளுநராக இருந்த ரோசையா பதவி ஓய்வு பெற்றதையடுத்து, மராட்டிய மாநில ஆளுநர் வித்யா சாகர் ராவ் ஓராண்டுக்கும் மேலாக தமிழக பொறுப்பு ஆளுநராக இருந்து வருகின்றார்.

இந்த நிலையில், தமிழகம், பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை நியமித்து குடியரசுத் தலைவர் மாளிகை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி, தமிழகத்தின் ஆளுநராக பன்வாரிலால் புரோஹித், பீகார் மாநில ஆளுநராக சத்ய படேல், அருணாச்சல பிரதேச மாநில ஆளுநராக பி.டி.மிஸ்ரா, அசாம் மாநில ஆளுநராக ஜக்தீஸ் முஹி மற்றும் மேகாலயா மாநிலத்திற்கு கங்கா பிரசாத் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், யூனியன் பிரதேசமான அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளின் துணை நிலை ஆளுநராக தேவேந்திர குமார் ஜோஷி நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள பன்வாரிலால் புரோஹித் மேகாலயா மாநில ஆளுநராகப் பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பேரறிவாளனின் தந்தை மருத்துவமனையில்!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்து பரோலில் வந்த பேரறிவாளனின் தந்தை குயில்தாசன் உடல்நலக் குறைபாடு காரணமாக சென்னை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 1991 ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூருக்கு தேர்தல் பிரசாரத்துக்கு வந்த பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரொபர்ட் பயாஸ், ஜெயகுமார், ரவிசந்திரன் ஆகிய 7 பேரும் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

26 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனை அனுபவித்துவரும் நிலையில் பேரறிவாளனின் தந்தைக்கு உடல் நலக்குறைபாடு ஏற்பட்டுள்ளமையால்,



அவரை பரோலில் விடுவிக்க வேண்டும் என்று தாயார் அற்புதம்மாள் கோரிக்கை விடுத்தார்.

அதன்பேரில் கடந்த ஓகஸ்ட் 24 ஆம் திகதி ஒரு மாத பரோலில் விடுவிக்கப்பட்டார்.

அவரது பரோல் கடந்த 24 ஆம் திகதி முடிவடைந்த நிலையில் தந்தைக்கு மேலும் இரு அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அவரது பரோல் காலத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்க வேண்டும் என்று அற்புதம்மாள் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன்பேரில் அவரது பரோல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவரது தந்தை குயில்தாசனுக்கு உடல்நலக்குறைபாடு ஏற்பட்டுள்ளமையால் அவர் சென்னையில் உள்ள காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஆஷூரா நோன்பு நோற்போம்! முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாளில்

## முஹம்மது (ஸல்) வழிகாட்டலில் நோன்பு நோற்போம்.

இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள புனித ரம்ழானை அடுத்து இரண்டாவது இடத்தை, இஸ்லாமிய வருடக் கணிப்பில் முதலாவது மாதமான ‘முஹர்ரமிம்’ மாதம் பெறுகிறது.

அல்குர் ஆன் அருளப்பட ஆரம்பித்த மாதமான ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்பதை இறைவன் முஸ்லிம்களுக்குக் கட்டாயமாக்கியுள்ளார். என்றாலும், முஹம்மது (ஸல்) அவர்கள் ரம்ழான் மாத நோன்புக் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் அடைந்து கொள்கின்ற நன்மைகளுக்கு மேலதிகமான நன்மைகளை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் உபரியான (ஸீன்னத்) நோன்புகளை ரம்ழான் மாதம் தவிர்ந்த இதர மாதங்களில் நோற்றுள்ளார்கள். அவ்வாறு நோற்றப்பட்டதும், நோற்றப்பட்ட ஊக்குவிக்கப்பட்டதுமான நோன்புகளில் ‘ஆஷூரா’ நோன்பும் அடங்கும்.

முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள் நோற்கப்படுவதே ஆஷூரா நோன்பு. இது கட்டாயக் கடமையல்ல. ஆனால், அல்லாஹ்விடம் அதிக நன்மைகளைப் பெற்றுத் தரக்கூடிய இஸ்லாத்துக்கு முன்னர் யூதர்களும் கிறிஸ்தவர்களும் இந்தத் தினத்தில் நோன்பு நோற்கக் கூடியவர்களாக இருந்துள்ளனர்.

மக்காவைத் துறந்து மதீனாவுக்கு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ‘ஹிஜ்ரத்’ சென்ற சமயம் இந்தத் தினத்தில் (முஹர் ரத் 10 ஆம் நாள்) யூதர்கள் நோன்பு நோற்பதைக் கண்டார்கள். அதற்கான காரணத்தை யூதர்களிடம் வினவியபோது பிர் அவ்னையும்அவனதுகூட்டத்தையும் (நைல் நதியில்) மூழ்கடித்து மூஸா (அலை) அவர்களையும் அவர்களது கூட்டத்தினரையும் காப்பாற்றி, அல்லாஹூத்த ஆலா கண்ணியப் படுத்திய தினம் இது.

அதனால், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த மூஸா (அலை) அவர்கள் இந்தத் தினத்தில் நோன்பு நோற்றார்கள். ஆகையால், நாங்களும் இந்தத் தினத்தில் நோன்பு நோற்கிறோம் என்றார்கள்.

அப்போது, முஹம்மது (ஸல்) அவர்கள் ‘‘மூஸா (அலை) அவர்களைக் கண்ணியப்படுத்துவதற்கு உங்களை விடவும் நாங்களே சிறந்தவர்கள்’’ என்று கூறிவிட்டு ஸஹாபாக்களை நோக்கி ‘‘முஹர்ரம் பத்தாம் நாள் நோன்பு நோற்குமாறு’’ கூறினார்கள். அந்தச் சமயம் ஸஹாபாக்கள் ‘‘யூதர்களும், கிறிஸ்தவர்களும் இந்தத் தினத்தில் நோன்பு நோற்று அதனைக் கண்ணியப் படுத்துகின்றனரே’’ என்றனர்.

அப்போது, முஹம்மது (ஸல்) அவர்கள் ‘‘அல்லாஹ் நாடினால் அடுத்த வருடம் ஒன்பதாம் நாளும் நான் நோன்பு நோற்பேன்’’ என்றார்கள். ஆனால், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அடுத்த வருட (முஹர்ரம் மாதம்) வருவதற்குள் வபாத்தாகி விட்டார்கள்.

எனவே, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ‘‘நீங்கள் ஆஷூரா தினத்தில் (முஹர்ரம் பத்தாம் நாள் நோன்பு பிடியுங்கள்’’ அவர்களுக்கு மாறு செய்வதற்கு (யூதர்களது நோன்பிலிருந்து எமது நோன்பு வித்தியாசப்பட வேண்டும் என்பதற்)காக முஹர்ரம் பத்தாம் நாளுக்கு முந்திய நாள் அல்லது பிந்திய நாளிலும் நோன்பு பிடியுங்கள்’’ என்று கூறியதாகவும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

‘‘ஆஷூரா தினத்தில் (முஹர்ரம் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் தினங்கள்) நோற்கப்படும் நோன்பு கடந்த வருடத்தில் செய்த சிறிய பாவங்களை அழித்து விடும்’’ என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்.

இந்த முஹர்ரம் மாதத்தில் தான் முஸ்லிம்களின் மக்காவிலிருந்து மதீனா நோக்கிய ஹிஜ்ரா பயணம், பிர் அவ்னை அல்லாஹ் அழித்தமை, இப்ராஹீம் நபி அவர்களை அல்லாஹ் நெருப்பிலிருந்து பாதுகாத்தமை, கர்பலா யுத்தம் போன்ற பல இஸ்லாமிய நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

நபி மூஸா (அலை) அவர்களைக் கண்ணியப்படுத்திய அல்லாஹ்வை மேன்மைப்படுத்தி நன்றி உள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். அதுவும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எதிர்வு கூறிய அந்த நாள்களில் குறிப்பிட்ட ஆரா நோன்பை நோற்க வேண்டியது மிகப் பிரதானமானதாகும். இதனை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருக்க வேண்டும்.

அல்ஹாஜ் மௌலவி
ஏ.எம்.ஏ.அஸீஸ் காஸிமி
யாழ்/கிளிநொச்சி உலமா சபை, சர்வ மத தலைவர்

காலைக்கதிர் Kalaikkathir



# தேசத்தின் விளையாட்டுத்துறை எதிர்காலம் தெரிவாளர்களின் கைகளில் தங்கியுள்ளது

## - அமைச்சர் தயாசிறி ஜயசேகர



விளையாட்டு அணிகளின் தெரிவாளர்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கின்றனது எனவும் இந்த நாட்டின் விளையாட்டுத்துறை எதிர் காலம் தெரிவாளர்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட், மெய்வன்மை, பட்மின்டன். ஹொக்கி, கரப்பந்தாட்டம். துடுப்புப் படகோட்டம். கெனோயிங். ஜூடோ, மேசைப்பந்தாட்டம் ஆகிய ஒன்பது வகையான விளையாட்டுக்களுக்கான தெரிவுக் குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு விளையாட்டுத்துறை அமைச்சு கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர், இன்றைய தினம் நியமனக் கடிதங்களைப் பெறும் உங்களின் கைகளில் பெரும் பொறுப்பு இருக்கின்றது. இந்த நாட்டின் விளையாட்டுத்துறை எதிர்காலம் உங்களது கைகளிலேயே தங்கியிருக்கின்றது. சரியான வீரர்களை தேசிய அணிகளுக்கு தெரிவு செய்து அதன் மூலம் வெற்றிகளைப் பதிவு செய்யவைப்பது உங்களது பொறுப்பாகும். தெரிவுகள் விடயத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற வகையில் நான் தலையிடமாட்டேன். தெரிவுகளை நடத்துவதற்கு உங்களுக்கு பரிபூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சுதந்திரத்தைப் பயன்படுத்தி சரியான அதி சிறந்த வீரர்களை. வீராங்கனைகளை தேசிய அணிகளில் இணைப்பது உங்களது கடமை ஆகும். வீரர்களைத் தெரிவு செய்வதற்கான சரியான வழிமுறைகளைத் தயார் செய்யுமாறு உங்களைக் கோருகின்றேன் என்றார். சில சந்தர்ப்பங்களில் தெரிவு செய்யப்படாத வீர வீராங்கனைகளது பெற்றோர் அழுது புலம்பியவாறு என்னிடம் வந்து தங்களது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டது எனவும் முறையிடுவதுண்டு. அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அது குறித்து ஆராய்வேன் என நான் அவர்களிடம் கூறுவேன். ஆனால் தெரிவுகள் குறித்து தேர்வாளர்களுடன் கலந்துரையாடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேசிய அணிகளுக்கான தேர்வுகள் இடம்பெறும்போது பிரதேச, மாகாண மட்டங்களில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளை தெரிவுக் குழு உறுப்பினர் நேரடியாக சென்று பார்வையிடுவதற்கான வழிமுறைகளையும் தயாரித்துக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தேசிய குத்துச்சண்டைப் போட்டியில் வெண்கலம் வென்ற ஹாட்லி மாணவன்



48ஆவது டி.பி ஜெயா ஞாபகார்த்த தேசிய குத்துச்சண்டை போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

பாடசாலை குத்துச்சண்டை சங்கத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 48ஆவது டி.பி.ஜெயா ஞாபகார்த்த தேசிய குத்துச்சண்டை போட்டி அகில இலங்கை ரீதியில் இடம்பெற்றது.

48 பாடசாலைகளைச் சேர்ந்த 267 வீரர்கள் பங்கு பற்றிய 16 பிரிவுகளைச் கொண்ட இந்தத் தேசிய போட்டித் தொடரில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ம.மதிவாணன் 52 கிலோ, 56 கிலோ எடைப்பிரிவில் காலிறுதி போட்டியில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவனுடன் மோதி 4:1என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

# 43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி: வடக்கு 20 பதக்கங்களுடன் முன்னேற்றம்!







43 ஆவது தேசிய விளையாட்டு விழா மாத்தறை மாவட்டத்தில் செப்ரெம்பர் மாதம் 21– 23 ஆம் திகதி வரை நடைபெற்றது. அதில் அக்குரஸ்ஸ கம்புரபிட்டியவில் இடம் பெற்ற தேசிய குத்துச்சண்டை போட்டியில் வடமாகாண அணியினர் 6 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று கொண்டனர்.

வி. நிக்கலஸ் 69 கிலோகிராம் நிறை பிரிவில் வெள்ளி பதக்கத்தையும், என். செந்தூரன் 56 கிலோகிராம் நிறை பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும், ஆர். ரமேஷ் 75 கிலோகிராம் நிறை பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும், எஸ்.கேசவன் 81 கிலோகிராம் நிறை பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும், எம். நிக்சன் ரூபராஜ் 91 கிலோகிராம் பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும்,)பெண்கள் பிரிவில் பிரியந்தி 60 கிலோகிராம் நிறை பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும், கே.பிரசாந்தினி 67 கிலோகிராம் நிறை பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இக்குத்துச்சண்டைப் போட்டியில் பெறப்பட்ட பெரும் அளவிலான பதக்கங்களின் மூலம் மொத்தமாக வட மாகாணம் 6 தங்கப்பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம், 12 வெண்கலப் பதக்கங்களை (மொத்தமாக 20 பதக்கங்களை) பெற்று தேசிய ரீதியில் 8ஆவது நிலைக்கு முன்னேறியது. வடமாகாணம் இதற்கு முதல் 9ஆவது நிலையிலேயே தொடர்ச்சியாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (100)

# 29 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா; வடக்கு மாகாண இளைஞர்களின் சாதனைகள்
















தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து நடத்தும் 29 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த 27ஆம் திகதி மாலை 4 மணியளவில் அனுராதபுரம் வட மத்திய மாகாண விளையாட்டு அரங்கில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை நடைபெற்றது. இந்த நிலையில் வடமாகாண இளைஞர்களும் இப்போட்டிகளில் பங்குபற்றி பல்வேறு சாத னைகளை நிகழ்த்தியுள்ளனர்.

அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பங்குபற்றி 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பிரகாஸ்ராஜ் தங்கப்பதக்கம் வென்றுள்ளதோடு 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் சுஜீவன் வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்

மன்னார் மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய எம்.பிரேம்தாஸ் 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியிலே வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளமையோடு அ.வினிபிறட் ஜஸ்மிதா 20 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியிலே வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய வி.கிறிஸ்ரினா 20 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியிலே தங்கப் பதக்கம் வென்றுள்ளமையோடு யோ.சுகிர்தா 20 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியிலே வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர். இதேவேளை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கிந்துசன் 10,000 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் வெள்ளி பதக் கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். (81)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறும் பொலிஸார், இந்த விடயத்தில் விலங்குக் கூட்டம் போல அட்டகாசம் பண்ணிய கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் மூன்று பிக்குகள் உட்படப் பலரைத் தாங்கள் தேடி வருகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காட்சிகள் அன்று அது நடந்து கொண்டிருந்த சமயமே முகநூலில் வெளியாகிக் கொண்டிருந்தன. அதில் சம்பந்தப்பட்ட மூன்று பிக்குகளும் பக்கத்திலிருந்த மக்களை அந்த வீட்டுக்குக் கல் எறியும்படி வற்புறுத்திக் கட்டளையிடுவது தத்ரூபமாக இடம்பெற்றுள்ளதாம்.

வண.அக்மீமன தயாரத்ன தலைமையிலான 'சிங்களத் தேசியப் படை' என்ற அமைப்பே இந்த ஆர்ப்பாட்டதையும் தாக்குதலையும் முன்னெடுத்திருக்கின்றது.

இந்த அகதிகள் தங்கியிருந்த வீட்டுக்குக் கல்லெறியும்படி தூண்டிய பிக்குகளால் பௌத்த மதத்துக்கே பெரும் அவமானம் என்று அரசுப் பேச்சாளர் டாக்டர் ராஜித சேனாரத்ன கூறியிருக்கின்றமை தெரிந்ததே. (உ)

## ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விஜயதசமி என்பதால் வர்த்தக நிறுவனங்கள், பொது அமைப்புகளின் விஜயதசமி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாடசாலைகளிலும், விடுமுறை தினமாயினும் விஜயதசமி பூசைகள் இடம்பெற்றன.

போக்குவரத்து வழமை போல இடம்பெற்றது.

வித்தியா கொலை வழக்குத் தீர்ப்பை முன்னிறுத்தி, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக இந்த அநாமேய சுவரொட்டிகள் மூலம் ஹர்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (உ)

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதிக்கவுள்ளனர்.

இதனிடையே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுள் மதியரசன் சுலக்ஸன் மற்றும் இராசதுரை திருவருள் ஆகிய இருவரதும் நிலை மோசமடைந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதனிடையே சிங்கள மரண தண்டனை கைதிகள் பகுதிக்கு மாற்றஞ்செய்யப்பட்டிருந்த மற்றையதமிழ் அரசியல் கைதியான கணேசன் தர்சன் மீண்டும் தமிழ் அரசியல் கைதிகள் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவின் பேரில் தங்கள் வழக்குகள் அநுராபுரத்திற்கு மாற்றப்படுகின்றன என்பது தெரியவந்துள்ளதைத் தொடர்ந்தே மதியரசன் சுலக்ஸன், இராசதுரை திருவரன், கணேசன் தர்சனன் ஆகிய மூன்று அரசியல் கைதிகளும் தங்கள் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையினில் உண்ணாவிரதத்தில் குதித்துள்ள அரசியல் கைதிகளை சிங்கள மரண தண்டனை கைதிகளது பிரிவிற்கு சிறை அதிகாரிகள் அச்சுறுத்தி மாற்றியிருந்தனர். இதுவரையும் தமிழ் அரசியல் கைதிகளுடன் இருந்தவர்களையே இவ்வாறு அதிகாரிகள் மாற்றம் செய்திருந்தனர்.

# மக்களின் நேரடிப் பங்களிப்புடன் யாழ். மாநகரசபையின் பணிகள்

## திட்டங்கள் குறித்து ஆராய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.01

யாழ்ப்பாண மாநகர சபையினால் வழங்கக்கூடிய அல்லது அபிவிருத்தி செய்யக்கூடிய பொதுமக்களின் தேவைப்பாடுகளைப் பொது மக்களே தெரிவு செய்து, முன்னுரிமைப்படுத்தி, அதன் அடிப்படையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் பொது மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி திட்டங்களின் தொகுப்பு ஒன்றைத் தயாரிக்க சபை தீர்மானித்திருக்கின்றது.

இது குறித்து யாழ். மாநகர ஆணையாளர் பி.வாகீசன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

2012ஆம் ஆண்டு இதே போன்று தயாரிக்கப்பட்ட திட்ட தொகுப்பு ஒன்று கடந்த 5 வருடங்கள் அமுலிலிருந்து பெரும் பயனளித்தது. தற்போது தயாரிக்கவுள்ளதும் மத்திம கால வரையறைக்கானதாகும். இதற்காக பொதுமக்களுடனான சந்திப்புக்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி முதல் கிராம சேவையாளரால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறவுள்ளன.

ஆகவே ஒவ்வொரு பகுதி மக்களும் தமக்கு ஒதுக்கப்பட்ட நேரம் மற்றும் மண்டபங்களை அறிந்து வைத்திருப்பதுடன் கலந்துரையாடலுக்கு வருகைதந்து பயனடைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் பொது மக்கள் இது தொடர்பான விபரங்களைத் தமது சனசமூக நிலையங்களிலும், கிராம அலுவலர் பிரிவுகளிலும், சபையின் இணை யத்தளம் மற்றும் வலைத்தளங் களிலும் பார்வையிடலாம். – என்று உள்ளது.

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இராணுவத்தை காட்டிக் கொடுக்க முயற்சிகளை எடுக்கின்றோம் எனக் கூறினார்கள்.

அவர்கள் அரசியல் விமர்சனங்களை முன்வைத்தனர். அவர்கள் அரசியல் விமர்சனங்களை முன்வைத்து அதற்கு நாமும் அரசியல் கருத்துக்களை தெரிவிக்கும் போது அதனை தவறு என விமர்சிப்பது ஏற்றுகொள்ள முடியாதது.

இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு எம்மிடமும் உள்ளது. நாம் கூறும் கருத்துக்களை தவறாக அர்த்தப்படுத்தி மீண்டும் மோசமான அணியை உருவாக்க சில தேரர்கள் முயற்சித்து வருகின்றனர்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக நான் முன்வைத்த கருத்துகளினால் பிரச்சினைகள் எழவில்லை. போர் முடிவுக்கு வந்ததில் இருந்து இந்தப் பிரச்சினைகள் எமக்கு எதிராக எழுந்துள்ளன.

பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு போர்க்குற்றம் தொடர்பிலான அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையின் தகவல்களை கொண்டே எமக்கு எதிராக அழுத்தங்கள் எழுந்துள்ளன.

இதில் முழுமையாக இராணுவ வீரர்களை எவரும் குற்றம் கூறவில்லை. இராணுவத்தில் இருந்த பிரதான அதிகாரிகள் சிலர் மீதே இந்த குற்றங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் உண்மைத் தன்மையை விசாரணைகளின் மூலமாக ஆராய்வது தவறல்ல.

போரை நடத்திய இராணுவ தளபதி என்ற அடிப்படையில் எமது இராணுவத்தில் குற்றவாளிகள் இருந்தால் அவர்களைப் பாதுகாக்க நான் முன்வரமாட்டேன்.

அரசாங்கம் என்ற வகையில் இது அனைத்து தலைவர்களையும் பாதிக்கும். நான் ஒருபோதும் அனைத்துலக நீதிமன்றத்தின் முன்னால் சென்று நிற்கப் போவதில்லை. பதில் கூறப்போவதுமில்லை.

எனது கட்டளையின் கீழ் செயற் பட்ட எவரையும் நீதிமன்றத்தில் நிறுத்த நான் தயாரில்லை. அதனை விரும்பவும் இல்லை.

அதேபோல் இராணுவத்தில் ஒருசிலர் குற்றவாளிகளாக இருந்தால் அவர்களுக்கு எதிராக இந்த நாட்டின் சட்டம் கடுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்று தெரிவித்துள்ளார். (உ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று எனவும், இதற்கு எதிராக நாட்டில் பலதரப்புகளில் இருந்தும் குரல் எழுந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (உ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மக்கள் ஜனநாயக ரீதியில் செயற்பட தாங்களே வழி ஏற்படுத்தி கொடுத்தார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள்கள் வடக்கிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள பஸில் ராஜபக்ஷ இங்கு பொது எதிரணியினரின் மேற்படி கட்சிச் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வாறான நிலையில் நேற்றுக் காலை நல்லூர் ஆலயத்தில் பூஜைவழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாம் வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டதன் காரணம் வடக்கில் ஜனநாயக ரீதியில் செயற்படுகின்ற எமது கட்சி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவே. இவ்வாறு எமது கட்சியின் செயற்பாடுகளை ஆரம்பித்து அதனூடாக மக்களின் சகவாழ்வு பற்றி அறியவும் கருத்துக்களை கேட்டறிந்து அவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யவதுமே எமது நோக்கமாகும்.

அவ் வேலைத் திட்டத்தின் முதல் கட்டமாகவே நல்லூர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் எமது வேலைகளை ஆரம்பிக்கின்றோம்.

தற்போதும் வடக்கிலே மஹிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப் பட்ட மாகாண சபையே உள்ளது. வடக்கிற்கு மாகாண சபை தேர்தலை நடத்தியவர் மஹிந்த ராஜபக்ஷவே. அதுவே தற்போது வரை வேறு தேர்தல் ஒன்று நடத்தப்படாமல் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

மேலும் மக்களுக்கு நல்லாட்சியை கொடுப்பதே எமது நோக்கமாகும். அதனைத் தொடர்ந்து செய்யவே நாம் இன்று வந்துள்ளோம். – எனத் தெரிவித்தார்.

## கடற்படைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுக்குப்பின்னர், கடற்படைத் தளபதிகளாக இருந்த அனைவருமே, குறைந்தபட்சம் ஓர் ஆண்டுக்காவது இந்தப் பதவியில் இருந்துள்ளனர்.

அதேவேளை, மிக அண்மையில், வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவுக்கு முன்னதாக கடற்படைத் தளபதியாக இருந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, 2 ஆண்டுகள் 1 மாதம் அந்தப் பதவியில் நீடித்தார். இந்தக் காலகட்டத்தில் அவருக்கு மூன்று தடவைகள் சேவை நீடிப்புகள் வழங்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சில் உள்ள மூத்த அதிகாரி ஒருவர் வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவை உடனடியாக கடற்படைத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற வைப்பதில் உறுதியாக இருக்கிறார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ட்ராவிஸ் சின்னையாக ஓய்வு பெற்றால், அம்பலங்கொடையைச் சேர்ந்த கடற்படை அதிகாரி ஒருவர் அந்தப் பதவியை ஏற்றுக் கொள்வார். சின்னையாவை ஓய்வுபெற வைக்க விரும்பும் பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரியும் அதே அம்பலங்கொடையைச் சேர்ந்தவராவார்.

குறிப்பிட்ட கடற்படை அதிகாரிக்கு அம்பலங்கொடையைச் சேர்ந்த அமைச்சர் சரத் பொன்சேகாவின் ஆதரவும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே 21ஆவது கடற்படைத் தளபதியாக கடந்த ஓகஸ்ட் 22ஆம் திகதி பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவுக்கு இன்னமும், அதிகாரபூர்வ இல்லமோ, வாகனங்களோ வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

கடற்படைத் தளபதியின் அதிகாரபூர்வ இல்லம் மற்றும் வாகனங்களை முன்னைய கடற்படைத் தளபதியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன இன்னமும் ஒப்படைக்கவில்லை.

அவர் கடற்படையின் ஒரு டிபென்டர், 5 கார்கள், 3 கப்ஸ், 4 மோட்டார் சைக்கிள் என்பனவற்றைப் பயன்படுத்தி வருகிறார் எனவும் கூறப்படுகிறது.

## உலகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்கள், இளம் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை லண்டன் அகிலன் பவுண்டேசனின் அனுசரணையில் புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் கிரான்குளம் சீமூன் கார்டனில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக் கழகத்தின் தலைவர் கதிரவன் த.இன்பராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இயக்குநர் இமயம் பத்மஸ்ரீ பெ.பாரதிராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் லண்டன் அகிலன் பவுண்டேசனின் ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணன், இலங்கைக்கான இணைப்பாளர் வி. ஆர்.மகேந்திரன் மற்றும் கலைஞர்கள், பொதுமக்கள், கலை ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மூத்த கலைஞர்கள், இளம் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட 30பேர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகத்தினால் இயக்குனர் சிகரம் 'சினிமா சிற்பி' என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பாரதிராஜா மேலும் கூறியவை வருமாறு:-

பிரபாகரன் மட்டும் இல்லையென்றால் தமிழ் என்ற ஒன்று இருப்பதே தெரியாத நிலை இருந்திருக்கும்.

காலம் எமது முகத்தில் கோடு போட்டாலும், அந்த காலத்தில் கோடுகளை கலைஞர்கள் நிலத்தில் போட்டுள்ளனர். இந்த மண்ணில் எத்தனையோ கலைஞர்கள், கலைகள். அதன் அத்தனை அறுவடைகளும் இந்த மண்ணுக் கேயுரியவை.

கலைஞர்கள் சாதாரண மனிதர்கள் அல்லர். கலைஞர்களைக் காலங்கள் பேசும். இந்த கலைஞர்களின் படைப்புகள் பேசும். 76 வயதை கடந்துள்ள நிலையிலும் கலையொன்றே மனிதனை தளர்ச்சியில்லாமல் வாழ வைக்கும் என்பதை நான் உணர்ந்துள்ளேன்.

கலைஞர்கள் மட்டுமே சாதாரண மனிதர்களில் இருந்து மாறுபட்டவர்களாகவுள்ளனர். எல்லா வற்றையும் பார்த்து ரசிக்க கூடிய வர்கள்தான் கலைஞர்கள். கலைஞர்களுக்கு வயதே கிடையாது. கலைகள் அவர்களை காப்பாற்றுகின்றன. அவர்களுடைய எண்ணங்களைகலைகள் என்றும் இளமையாகவே வைத்திருக்கின்றன.

ஈழத்தமிழர்கள் மட்டும்தான் தமிழ் மொழியை இன்னும் அழுத்தமாகக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இங்கிருந்து புலம் பெயர்ந்தவர்கள் தமிழ் மொழியைக் கட்டிக் காப்பது போல் தமிழ் நாட்டில் கூட யாரும் தமிழ் மொழியைக் கட்டிக் காக்கவில்லை.

அகநானூறு, புறநானூறு என்று எவ்வளவோ படைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் உங்கள் படைப்புகளிலே தமிழ் இன்னும் சோர்ந்து போகாமல் இருக்கிறது. அது உங்களுக்குப் பெருமை தரும் விடயமாகும்.

மொழியின் மீதும், இனத்தின் மீதும் அழுத்தமான பக்தியை உங்களை விட யாரும் வைத்ததில்லை. நான் இந்தப் பூமியில் கால் வைக்கும் போதேல்லாம் பெருமையாக உணர்ந்தேன்.

தமிழ் நாட்டில் தமிழர்களதும், தமிழச்சிகளதும், வீர வரலாற்றை புத்தகங்களிலும், ஏடுகளிலும் வாசித்துப் பார்த்திருக்கின்றோமே ஒழிய, வாழ்க்கையில் வாழ்ந்து பார்த்ததில்லை. வீர வரலாற்றை வாழ்ந்த தமிழர்களும், தமிழச்சிகளும் ஈழத்தில்தான் இருக்கின்றார்கள்.

சுத்தமான தமிழ் உரையாடல் இங்கிருக்கின்றது. இன்னும் நீங்கள் சோரம் போகவில்லை. இங்கு ஏற்பட்ட நெருக்கடி கூட நல்லதற்கோ என நான் நினைத்ததுண்டு. காரணம் அந்த நெருக்கடிகளினால் இங்கிருந்து புலம் பெயர்ந்தவர்கள் எங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, அங்கும் முளைத்து விருட்சமாய் இருப்போம் என வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழனை அடையாளப்படுத்துவது ஈழமண் மட்டும்தான், கறுப்பாக ஒரு தமிழன் இருந்தான், அவன் வீர வரலாறு கொண்டவன் என அடையாளப்படுத்தியது பிரபாகரன் மட்டும்தான். அவர் இல்லாவிட்டால் தமிழ் என்ற ஒன்று இருப்பது எவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தமிழினத்தை உலகுக்கு அடையாளம் காட்டியவர் பிரபாகரன் மட்டுமே. மூத்த கலைஞர்களுக்கு நான் விருதுகள் வழங்குவதை விட அவர்களது கரங்களால் நான் ஆசீர்வாதம் வாங்கிச்செல்ல வேண்டும். – எனத் தெரிவித்தார். (உ)



# ‘கருவிகளுக்கு படையல்’

## பயன்படும் கருவிகளை வழிபடுவோம்...! பாரம்பரியத்தை போற்றிடுவோம்...!!

பயன்படு கருவிகளுக்குப் படையல் என்பது தொன்மைச் சமூகங்கள் கடைப்பிடிக்கும் ஒரு நடைமுறை. அதனுடைய தொடர்ச்சியே தற்போது ஆயுத பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. முதலில் வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்ட கற்கோடரிகள் போன்ற கற்கருவிகள், வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்ட உழவுக்கலப்பை போன்ற கருவிகள், போருக்கு பயன்படுத்தப் பட்ட வாள், வேல், வில் போன்ற கருவிகளை வழிபடும்முறை ஆதி காலம் தொட்டே இருந்துவருகிறது.

கருவிகள் வெறும் வேட்டையாடலுக்கானது மட்டும் அல்ல. தொன்மை வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் சான்றுகளாகவும் இருக்கின்றன.

பண்டைய மனிதர்களின் இறந்த உடல்களோ, எலும்புகளோ, அவர்கள் பயன்படுத்திய பொருள்களோ கிடைக்காத இடங்களில்கூட அவர்கள் வேட்டையாடிய கற்கருவிகள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. அந்தக் கருவிகளில் படிந்திருக்கும் இரத்தக் கறைகளை வைத்துதான் அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கணக்கிடுகிறார்கள் ஆய்வாளர்கள். கற்காலம் முதல் இக்காலம் வரை மனிதனை வாழவைத்துக்கொண்டிருப்பது கருவிகளே. அதன் பரிணாம வளர்ச்சியே இன்று இயந்திரங்களாக மாறி இருக்கின்றன.

வில், அம்பு, வேல், அரிவாள், ஆண்டலையடுப்பு, ஈர்வாள், உடைவாள், கதிரருவாள், கதை, கவை, கல்லிடு கூடை, கணையம், கழுகுப்பொறி, கவசம், குத்துவாள், கைவாள், கொடுவாள், கோல், சிறுவாள், தகர்ப்பொறி, தொடக்கு, பிண்டிபாலம், ஞாயில், மழுவாள், விளைவிற்பொறி, அரிதூற்பொறி, இருப்பு முள், எரிசிரல், கழு, கருவிலூகம், கல்லமிழ் கவண், கற்றுப்பொறி, கழுமுள், குந்தம், கூன்வாள், கைபெயர், கோடரி, சதக்கணி, தண்டம், தூண்டில், தோமரம், புதை, நாராசம், வஜ்ஜிரம் ஆகியவை சங்க காலத்தில் தொழிலுக்கும் போருக்கும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள்.

தமிழர்களின் திணை வாழ்வில் கொற்றவை வழிபாடே முதன்மையானது. தமிழர்களின் தாய் தெய்வம் கொற்றவை. புரட்டாதி மாதம், அஸ்த நட்சத்திரத்தில் இருந்து திருவோண நாள் வரை பெண் தெய்வ வழிபாடு செய்யப்படுவது வழக்கம். அதில் ஒன்பதாம் நாளன்று போரில் வெற்றி பெற உதவும் ஆயுதங்களை வைத்து வழிபடும் நடைமுறையும் உண்டு. இதற்கு ''வாண்மங்கல விழவு'', ''வாளுடை விழவு'' என்று பெயர். இதுபற்றி சிலப்பதிகாரத்தில்,

''கலையமர் செல்வி கடனுனின் அல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ



ள் அல்லள்''

என்ற பாடலில், ''கொற்றவைக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்யாவிட்டால், அவள் வில்லுக்கு வெற்றி தர மாட்டாள்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனில் ஆயுத வழிபாடு என்பது பண்டைய தமிழரின் வழிபாட்டு முறை என்பது உறுதியாகிறது.

ஆயுதங்களை மட்டுமல்லாமல் போருக்குப் பயன்படுத்தப்பட்ட யானைகள், குதிரைகள், தேர் ஆகியவற்றைச் சுத்தப்படுத்தி மங்கல விழாவில் வழிபடுவது பற்றி பெரிய புராணத்தில் -

''பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம்
பெருகுமா நவமி முன்னாள்
மங்கல விழவு கொண்டு
வருநதித் துறைநீ ராடி...''

என்ற பாடலில் குறிப்பு இருக்கிறது. இதன் தொடர்ச்சிதான் இன்று வாகனங்களுக்கு பூஜை செய்யும் நடைமுறையாக தொடர்ந்துவருகிறது. தொல்காப்பியத்திலும் ''மானார்ச் சுட்டிய வாண்மங்கலமும்'' என்று ஆயுத வழிபாடு பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

போர் வீரர்கள் கேடயத்தையும் வாளையும் வாகைப் பூ மாலை சூடி வணங்கிய செய்தியை,

றொன்மிசைந் தெழுதரும் விரிந்திலங் கெஃகிற்
றார்புரிந் தன்ன வாளுடை விழவிற்
போர்படு மள்ளர் போந்தோடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்ப

என்ற பதிற்றுப்பத்து பாடல் மூலம் அறிய முடிகிறது. தமிழ் மூதாட்டி ஔவையாரும் ஆயுத வழிபாடு பற்றி அழகாகப் பாடியுள்ளார்.

பண்டையத் தமிழ் குறுநில மன்னர்களான அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் ஒருமுறை போர் மூளும் அபாயம் ஏற்பட்டது. இதைக் கண்ட ஔவைக்கு நெஞ்சம் பதறியது. போரைத் தடுக்கும் பொருட்டு தொண்டைமானிடம் தூதுக்குச் செல்கிறார் ஔவை. அப்போது ஆயுத சாலையில் அத்தனை ஆயுதங்களுக்கும் மாலை சூடி வணங்கப்பட்டிருப்பதைக் கண்ட ஔவை,

''இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியன்நக ரவ்வே : அவ்வே,
பகைவர்க் குத்திக், கோடுநுதி சிதைந்து,
கொல்துறைக் குற்றில மாதோ ; என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து,
இல்லாயின் உடன் உண்ணும்,
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல்எம் கோமான், வைந் நுதி வேலே.''

இவ்வாறு பாடி அதியமானின் படைபலத்தைப் பற்றி மறைமுகமாக உணர்த்தியதாகவும், அதன்பின்னர் தொண்டைமான் சமாதானம் ஆனதாகவும் சொல்லப்படுகிறது.

குலதெய்வங்களாகட்டும், காவல் தெய்வங்களாகட்டும் ஆயுதங்கள் இல்லாமல் யாரும் இல்லை. தெய்வங்களுக்கு படையலிடும்போது ஆயுதங்களுக்கும் சேர்த்தே படையலிடுகிறோம்.

முருகப்பெருமான் கூட கையில் வேலுடன்தான் காட்சிதருகிறார். வாகனங்களும், சிவசுப்பிரமணியன்ஆயுதங்களும் இல்லாமல் காட்சி தரும் தெய்வங்கள் அரிது. ஆண்கள் மட்டும் இன்றி பண்டைய கால பெண்களின் வீரத்தைச் சொல்லும் வகையில் பெண்கள் கத்திச் சண்டையிடும் எண்ணற்ற சிற்பங்கள் கோயில்களில் இன்றும் உள்ளன.

பண்டைய காலங்களில் ஆயுதங்களை ஏன் வழிபட்டோம் என்பது பற்றி நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் கூறுகிறார்... ''கருவிகளை வழிபடுவது என்பது உலகளாவிய மரபு. படைக் கருவிகளுக்கு மட்டும் அல்ல... தொழில்கருவிகளும் இதில் அடக்கம். அதாவது ஒவ்வொரு கருவிக்குள்ளும் ஓர் அணங்கு இருக்கும் என்று நம்பப்படுகிறது. மானுடவியலில் இது அனிமிசம் (ஆன்மவாதம்) என்று சொல்லப்படும். அந்த நம்பிக் கையின் அடிப்படையிலேயே ஆயுதங்களுக்குப் படையல் வைத்து வணங்கி வந்தார்கள். அதனுடைய தொடர்ச்சிதான் தற்போது கருவிகளை வைத்து ஆயுதபூஜையாக வழிபடுவதும்.

இன்று துப்பாக்கிகளுக்குக்கூட பொட்டு வைத்து வணங்குகிறார்கள். என்னதான் விஞ்ஞானம் நவீன வளர்ச்சியை நோக்கிச் சென்றாலும் படையல் என்ற பண்டைய, பண்பாட்டு மரபு இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது என்பதற்கு இதுவே சான்று.''

நம்மை நாம் மேம்படுத்திக்கொள்ள தொழில் கருவிகளாகவும், நம்மை தற்காத்துக்கொள்ள போர்க் கருவிகளாகவும் ஆயுதங்கள் விளங்குகின்றன. பண்டைய தமிழ் மரபின்படி நமக்குப் பயன்படும்கருவிகளைவழிபடுவோம்... பாரம்பரியத்தைப் போற்றுவோம்!

# மூத்த பத்திரிகையாளருக்கு 'கலைஞானச்சுடர்' விருது

## வியாழனன்று கௌரவிப்பு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஒக்.01

நல்லூர் பிரதேச சபை கலாசாரப் பேரவையின் பண்பாட்டு விழாவும் கலைஞர் கௌரவிப்பும் (2017) எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவ சுப்பிரமணிய மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பத்திரிகைத்துறை சார்பில் மூத்த பத்திரிகையாளரான சின்னக்கண்ணு பெருமாள் அவர்கள் 'கலைஞானச்சுடர்' விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

பண்பாட்டு விழா நல்லூர் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவை தலைவருமான திருமதி ஏ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெறும்.

இந்தச் சிறப்பு நிகழ்வில் பல்துறை சார்ந்த கலைஞர்கள் பலரும் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (இ)


# கணித வினா விடையில் தேசிய வெற்றி



கொழும்பில் இடம்பெற்ற – ஒன்பது மாகாணங்களின் பாடசாலைகளுக்கு இடையிலான – தேசிய கணித வினாடிவினாப் போட்டியில் வடக்கு மாகாண அணி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களான எஸ்.கலாபன் (தரம் 6), கே.கிருஷாந்த் (தரம் 8) ஆகியோர் கனிஷ்ட நிலையில் முதலாம் இடத்தையும், என்.சிவமைந்தன் (தரம் 10), பி.அபிராம் (தரம் 10) ஆகியோர் சிரேஷ்ட நிலையில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அவர்கள் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா மற்றும் பொறுப்பாசிரியர் கு.உமாகரன் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

# விஷ்ணுவுக்கு மகாநாயக்கர்கள் அனுப்பிய தூது



நாட்டையும், பௌத்த சாசனத்தையும் பாதுகாக்குமாறு மகாநாயக்க தேரர்களால் விஷ்ணு பெருமானுக்கு அனுப்பபட்ட தூதுடனான வாகனப் பேரணி நேற்று கொழும்பை வந்தடைய இருந்து.

தாய் நாட்டை பாதுகாக்கும் தேசிய அமைபபின் தலைவர் வண.முருத்தெட்டுவே ஆனந்த தேரர் இத்தவலைத் தெரிவித்தார்.

இந்த வாகனப் பேரணியானது வியாழனன்று தெய்வேந்திரமுனைவிஷ்ணு ஆலயத்தில் ஆரம்பமானது. இந்த நிலையில், நாரஹேன்பிட்டிய அபயராம விகாரைக்கு நேற்றுப் பிற்பகல்செல்லும் இந்தவாகன பேரணி, மாலை அளவில் களனிவிகாரையில் உள்ள விபீஷணன் ஆலயத்துக்குச் சென்று நிறைவடையும் என்று அவர் குறிப்பிட்டார். (உ)





நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வில் இயக்குநர் சிகரம் பெ.பாரதிராஜா 'சினிமா சிற்பி' எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். விருது வழங்கப்படுகின்றமையையும் நிகழ்வில் பங்குபற்றியோரையும் படங்களில் காணலாம்.

# கொட்டகலையில் குளவிகள் கொட்டி 16 பேருக்குப் பாதிப்பு

கொட்டகலை,ஒக்.01

தோட்டத் தொழிற்துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களையும், பிரதேசவாசிகளையும் குளவிகள் கொட்டியதினால் 16 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொட்டகலை லொக்கீல் தோட்டத்தில் தேயிலைத் தளிர்கள் கொய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், அப்பகுதியில் நின்று கொண்டிருந்த சிறுவர்கள் மற்றும் பெரியவர்களே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பவர்களில் 5 பேர் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பியுள்ளனர் எனவும், 11 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 6 ஆண்களும், 6 பெண்களும், 4 சிறுவர்களும் அடங்குகின்றனர் என்றும் வைத்தியசாலைத்தவகல்கள் மேலும் தெரிவித்தன. (உ)

# நேற்று யாழ்ப்பாணத்தில் பஸில்












# சின்மயா மிஷனில் நவராத்திரி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.01

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் நவராத்திரி செயற்பாடுகளில், இன்று ஞாயிற்றுக்கிழமை கிழமை மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் உள்ள பிரார்த்தனை மண்டபத்தில், வாணி விழா நடைபெறும்.

இவ் விழாவில், சின்மய பாலவிஹார் பிரிவினரின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ் சின்மயா மிஷன், அனைவரையும் இந்நிகழ்வுக்கு அழைத்துள்ளது.

அமரர் திரு. திருமதி மு. க. சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்) நினைவாக...

தமிழ்த்தாய் மன்றம் நடாத்தும்

**இலவச மருத்துவ முகாம்**

இடம் : 31, புதிய செங்குந்த வீதி, சட்டநாதர் வீதி ஊடாக, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

திகதி : 5, 6, 7 ஒக்டோபர் 2017 காலை 7.00 முதல் 12.00 மணி

☞ இலவச நீரிழிவு பரிசோதனை (blood sugar)

☞ இலவச இரத்த அழுத்த பரிசோதனை (blood pressure)

✠ 5 ஆம் திகதி ஆங்கில வைத்தியர்களின் பரிசோதனை

✠ 6 ஆம் திகதி ஆயுர்வேத வைத்தியர்களின் பரிசோதனை

✠ 7 ஆம் திகதி இயற்கை வைத்தியர்களின் சகல நோய்களுக்குமான இயற்கை வைத்தியமும் நோய்வராமல் எம்மைப் பாதுகாப்பதற்கான ஆலோசனைகளும்.

இலவச நீரிழிவு பரிசோதனை செய்யவிரும்பும் அனைவரும் 12 மணித்தியாலங்கள் நீர், உணவு அருந்தாமல் 5 திகதி போயா தினத்தன்று காலை 7 மணிக்கு வாருங்கள். பரிசோதனையின் பின் காலை உணவு வழங்கப்படும்.

கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே 31, புதிய செங்குந்தவீதி, சட்டநாதர் வீதி ஊடாக, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மாலை 4.00 முதல் 6.00 மணிக்குள் 02.10.2017 இற்கு முன் பதிவு செய்து கொள்ளவேண்டும். (077 4626278)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.